யுக்தி

இதழ் 9-10

வெளியீடு : கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யுக்தி

இதழ்
9-10

வெளியீடு
கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யுக்தி-9-10

ஆனி - 2025

யுக்தி

ஆலோசகர்
சரவணமுத்து நவநீதன்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

அட்டைப்படம்
கத்லீன் ஷயணா ரவிக்குமார்

அட்டை, நூல் வடிவமைப்பு
T. சங்கர்
வணசிங்க பிரிண்டர்ஸ்

அச்சுப்பதிப்பு
வணசிங்க பிரிண்டர்ஸ்,
496A, திருமலை வீதி, மட்டக்களப்பு
065-2227170 | wanasingheprinters@gmail.com

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

ISSN No :- ISSN 2961-5402
Bar Code :- 9772961 540000

தொடர்புகளுக்கு
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

தொலைபேசி : 026 - 2220036
தொலைநகல் : 026 - 2220037
மின்னஞ்சல் : cluturalaffairsep@gmail.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பேசும் பேனா

இன்னுமொரு "யுக்தி" இதழ் மூலம் உங்களை சந்திக்கின்றோம். எமது முயற்சிகள் மண்சார்ந்தும், மனிதம்சார்ந்தும் விரிந்து செல்வதால் எமது சிந்தனைகள் மக்கள்வயப்பட்டதாக இருக்கின்றது. பாரம்பரிய சிந்தனை மரபுகள், கோட்பாடுகள் முதலியவை பின் நவீனத்துவக் கோட்பாட்டாளரால் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. மரபுவழிச் சிந்தனைகளின் கட்டுமானத்தை அவர்கள் நிராகரிக்கின்றனர். அச்சிந்தனைகளில் மேலாதிக்கப் பண்பு, ஒன்று திரட்டிய பண்பு (Totalizing) முதலியன காணப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். மாற்றுக் கருத்துக்களை அவர்கள் வரவேற்கின்றனர்."

இருந்தாலும் எம்மரபுகள் வழக்காறுகளுடனும் நவீன கோட்பாடுகளுடனும் சமாந்தரமாக பயணிக்க வேண்டிய நிலையிலுமுள்ளோம். ஒன்றைத்தவிர்த்து இன்னொன்றை சுவீகரிப்பது அஞ்ஞானமென்கிறார்கள். இங்கு இணைந்து பயணிக்க வேண்டியவை குறித்து நாம் தர்க்கப்படத் தேவையில்லை. எல்லாம் ஒன்றுடனொன்று இணைந்தால் தான் நிலைத்துநிற்கும்.

இது கண்ணகி வழிபாட்டுக்காலம் கிழக்கெங்கும் சடங்குகளும், கலைகளும் மிகுதியாக வெளிப்படும் காலம். இந்தியாவின் சோழ நாட்டிலே பிறந்து பாண்டி நாட்டிலே பாராளு மன்னனை தன் கணவனுக்காக பழிதீர்த்து சேர நாட்டிலே சேரன் செங்குட்டுவனால் பத்தினி என்று விழா எடுக்கப்பெற்ற கண்ணகி, கடல்சூழ் இலங்கை நாட்டில் நிலைபெற்றிருப்பதை நாம் கண்ணகி வரலாறுகளில் காண்கிறோம். இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் செறிந்து வாழும் பிரதேசமெங்கும் வழிபடும் தெய்வமாக கண்ணகி போற்றப்பட்டாலும் ஈழத்தின் கிழக்குப் பகுதியிலே அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்திலேயே இவ்வழிபாடு இன்றும் சிறப்புற நடைபெறுகின்றது.

இங்கு இவ்வழிபாடானது ஆகமம் சாராத முறையில் பல்வேறுபட்ட சடங்கு முறைகளுடன் இடம்பெறுகிறது. குறிப்பாக கதவுதிறத்தல், மண்ணெடுத்தல், நெற்குத்துச்சடங்கு, கல்யாணக்கால் வெட்டுதல், பணிமாறல், கொம்பு விளையாட்டு, பள்ளயம், குளிர்த்தி, கதவடைப்பு என்றவாறான பல சடங்கு முறைகள் இன்றும் இப்பிரதேச கண்ணகி வழிபாட்டின் போது இடம் பெறுவதை காணக்கூடியதாகவுள்ளது.

சடங்குகளும், மரபுகளும், நவீனங்களும் எம்மால் தவிர்க்க முடியாதவை. எமது சௌகரியங்களுக்கும், தகைவுக்கும் ஏற்றவிதமாக தழுவியும், விலகியும் பயணிப்போம். தக்கன பிழைக்கட்டும். கதிர்காமக்கந்தனின் யாத்திரையும், திருவிழாவும் இக்காலத்தே இடம்பெறுவது இரட்டிப்பு மகிழ்வே!

கருத்துக்குறிப்பை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதனால் அகலத்தன்மையிலிருந்து விலகவேண்டிய சூழ்நிலை எழுவதும், கருத்துக்குறிப்பு நழுவும் போது அகலத்தன்மையை இறுக்கவும் வேண்டிய மறுதலைகளுக்கு உள்ளாகும் நிலையும் தோன்றுவதால் அவ்வப்போது "யுக்தி"யின் வருகையும் தாமதப்படுகின்றது. இந்த தடவை ஒன்பதும் பத்தும் ஒன்றாக முகிழ்கின்றது. காலவோட்டத்தில் தொடர்ந்து யுக்தி உங்கள் கைகளில் தவழவேண்டுமென்பதே எமது அவா! இதுவரை உங்களுடன் "யுக்தி" இதழ்களின் மூலம் உரையாடக் கிடைத்தமை நான் பெற்ற பாக்கியமே! இவ்விதழ் அதே காத்திரமான, கனதியான இதழாக தொடர்ச்சியாக வெளிவர வேண்டுமென்பதே எம் அவா!

சரவணமுத்து நவநீதன்
மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாவல்...
அது இன்றுவரை

- நளினி நவநீதன்
MEd (SL), MBA (Canada)

என் கணவர் ஒரு ஆக்கம் வேண்டுமென்றார். எழுதுவதில் *Passion* இருந்தாலும் எதையாவது எழுதிவிட முடியாது. கால நேரப் பொருந்துகையின்றி ஆக்கும் எப்படைப்பும் நிலைத்திட முடியாது என்பது எனது ஆழ்ந்த கருத்து. அவர் கட்டமைத்து வைத்துள்ள காத்திரமான அமைப்பை சிதைத்து விடாது வரைய வேண்டும். என் தேடல்கள், உசாவுதல்கள் மூலம் திரட்டிக் கொண்ட ஆக்கத்தினை சமர்ப்பிக்கின்றேன். என்தொகுப்பில் அமைந்த இந்த ஆக்கத்தினால் நீங்கள் பயனடைந்தால் அது இரட்டிப்பு மகிழ்ச்சியே.

தமிழ் நாவலிலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய நிலைமை ஆகியனவற்றின் சுமார் நூற்றி ஐம்பது ஆண்டுகால வரலாற்றின் மிகவிரிந்த பரப்பை, ஒரு உரைக்கட்டில் அமைக்கும் மிகவும் அசாதாரணமான ஒரு முயற்சியை மேற்கொண்டிருப்பதை காணலாம். இவ்வுரைக்கட்டைப் பூரணமானதாக்க முயன்றிருக்கிற பொழுதிலேயே, சில அம்சங்களின் விரிவை அல்லது விளக்கத்தை தவிர்த்த செயலும் நடந்திருக்கிறது. தகவல் களையன்றி, போக்குகளுக்கு அழுத்தம் கொடுத்ததின் விளைவு இது.

இவ்வுரைக்கட்டு அல்லது உரை உங்கள் மனத்தில் தமிழ் நாவல் குறித்த ஏதாவது சிந்தனையை அல்லது விவாதத் தளத்துக்கான கேள்விகளை எழுப்பு மானால் அதையே இந்த உரைக்கட்டின் வெற்றியாக பாவித்துக்கொள்ளலாம். அந்த நோக்கத்தோடேயே இதுவும் பின்னப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கு சொல்லியாகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதனால்தான் பல்கலை நிறுவனங்கள் சார்ந்த ஆய்வுமுறைப் போக்கிலன்றி ஒரு தீவிர வாசகனின் பார்வையில் ஆய்வு முறைகளை மறுத்தும், சில ஆய்வு முடிவுகளை மறுதலித்தும் இவ்வுரைக்கட்டு அமைய நேர்ந்திருக்கிறது.

பல்கலைக்கழகங்கள் மீது எவ்வித கோபமுமில்லை. அவற்றின் பிரமிக்க வைக்கும் தோற்றங்களுக்கு அப்பால் மேற்கு நாடுகளில், குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனி, ரஸ்யா போன்ற நாடுகளில், அவற்றினிடையே 19ஆம் மற்றும் 20ஆம் நூற்றாண்டில் உருவான புதிய புதிய சிந்தனைப் போக்குகளால் மரியாதைகூட உண்டு. ரோலன் பார்த் (Roland Barthes) மற்றும் ஜூலியா கிறிஸ்தோவா (Julia Christova) இருவரும் இலக்கியத்துறையையும், ழாக் தெரிதாவும் (Lhaak Theritha), மிச்சேல் பூக்கோவும் (Michel Foucault) தத்துவத்துறையையும், ழாக் லக்கான் (Laak Laccaan) உளவியல் துறையையும் சார்ந்தவர்கள். அவர்களது துறைகள் அவர்களது அமைப்பியல், பின்அமைப்பியல் சார்ந்த சிந்தனை வெளிப்பாட்டினால் மரியாதை பெற்றன.

கீழைத்தேய பல்கலைக்கழக நிறுவனங்களில் இதுபோன்ற பெரும் சாதனைகள் நிகழ்ந்ததாகச் சொல்லமுடியாது. அதனளவில் மார்க்சீயம் சார்ந்த விமர்சனப் போக்குகள் மூலம் கலாநிதிகள் க.கைலாசபதி மற்றும் கா.சிவத்தம்பி போன்றோர் வெளிப்படுத்திய ஆய்வு முறைகள் தமிழ்நாட்டுக்கே முன்னோடியாய்த் திகழ்ந்தன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். ஆனால் இவ்வாறு ஏற்பட்ட அந்த பிரமிப்பும், மரியாதையும் பின்னாளில் தக்கவைக்கப்படவில்லை என்ற செய்தி இங்கே முக்கியமானது. பாடப்புத்தக ஒப்புவிப்பாக மட்டும் அவை இலங்கையிலும் இந்தியாவிலும் ஆகிவிட்டிருக்கின்றன. புறநடைகள் உண்டு. தமிழுலகில் சிந்தனை விரிவாக்கம் பல்கலைக் கழகங்களுக்கு அப்பாலேதான் உருவாகிக் கொண்டிருக்கிறது. இவ்விடயம் குறித்து இவ்வுரைக்கட்டில் ஆங்காங்கே குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் தோன்றிய தமிழ் நாவல்களின் தோற்றத்தை ஏனைய இந்திய மொழிகளின் நாவல்களது தோற்ற நியாயங்களோடு நாம் ஒப்பாக வைத்துப் பேச முடியும். இந்திய நாவல்களின் தோற்றத்துக்கு அவற்றின் ஏனைய ஐரோப்பிய மொழிகளுடனான ஊடாட்டத்தை முதன்மைக் காரணமாக இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இந்தியக் கலாசாரத்தில் ஒவ்வொரு புதுப் பண்பாட்டுத் தாக்கம் ஏற்படும்போதும் அது மொழி மூலமாகவே ஏற்பட்டிருப்பது இந்திய வரலாற்றைப் பார்க்கும்போது தெரியவரும். இது முக்கியமான விடயம். மத்திய காலத்தில் இஸ்லாமியர்கள் வந்தபோது இந்தியாவில் அதுவரையில் இல்லாத சரித்திரம் எழுதும் கலையையும் கொண்டுவந்தார்கள். இக் கலாசாரப் பரிவர்த்தனை இந்தியக் கலைகளின் உருமாற்ற வளர்ச்சியை விரைவுபடுத்தியது. முக்கியமாக இலக்கியம் இதன் மூலம் வளம் பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் நிகழ்ந்த ஆங்கிலக் கல்வி வளர்ச்சியும் பலவாறான சமூக, அரசியல், சிந்தனை வளர்ச்சிகளில் மாற்றங்களில் விரைவினை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டில் இந்த வளர்ச்சியை ஒருபுள்ளியில் வைத்துக் காணமுடியும். 1798 முதல் 1832வரை ஆட்சி அதிகாரத்தை ஆங்கிலேயர்களிடம் கொடுத்துவிட்டு பெயரளவில் மன்னராகவிருந்த சரபோஜி மகாராஜாவின் காலம்தான் இது. மன்னர் தன் காதலியின் நினைவாய் உருவாக்கிய பள்ளிதான் அப்போது ஆசியாவிலேயே பிரபலமாக இருந்த ஓரத்தநாடு அல்லது முக்தாம்பாள்புரம் பள்ளி. இங்கே ஆங்கிலம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பர்சி, உருது, தெலுங்கு, தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் கற்றுக்கொடுக் கப்பட்டன. இவரது மறக்க முடியாத இன்னொரு பணி சரஸ்வதி மஹால்.

இங்கே ஓலைச் சுவடிகள் மட்டுமின்றி, புதிதாக வெளியாகும் ஆங்கில நூல்களும், பிரெஞ்சு, இத்தாலிய, ஜேர்மன் மொழி நூல்களும் அந்தந்த நாடுகளிலிருந்து வருவிக்கப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டன. இவை யெல்லாம் தஞ்சை என்கிற ஒரு சிறிய ஊரில் நடந்திருப் பினும், ஏறக்குறைய இதேயளவான மாற்றம் தமிழ்நாடு பூராவும், இந்தியா பூராவும், நடைபெற்றதாகக் கொள்ள முடியும். பின்னால் ஏற்பட்ட இலக்கிய, கலாசாரப் புரட்சிக்கு இவை மறுக்கமுடியாத பங்களிப்பை வழங்கின. பத்தொன்பதாம் நூற்றாண்டை தமிழ் நாவல் இலக்கியத்தின் தோற்றத்துக்குத் தயாராக்கியதில் இந்த மாற்றமும் ஒன்று.

ஆங்கில மொழிக் கல்வி நிறைய ஆங்கில நூல்களின் இறக்குமதியை ஊக்கு வித்தது. ஹென்றி பீல்டிங்கின் 'ரொம் ஜோன்ஸ்', ஒலிவர் கோல்ட் ஸ்மித்தின் 'விக்கர் ஒப் தி வேக்பீல்ட்' போன்றவையும், சேர் வால்டர் ஸ்கொட்டின் சரித்திரப் புதினங்களும் நிறைய வாசிக்கப்பட்டன. சற்றுப் பின்னால் ஜேன் ஆஸ்டின், ஜோர்ஜ் எலியட் போன்றோரின் நாவல்கள் கவனம் பெறுகின்றன. இன்னும் சற்றுப் பின்னால் சார்ள்ஸ் டிக்கன்ஸும், வில்லியம் தாக்கரே யும் இந்தியா வருகிறார்கள். இவற்றை யெல்லாம் ஒட்டி எழுதுகிற வேகம் இந்திய மொழிகளில் நாவல்கள் எழுதும் முயற்சியை வெகுவாக உந்திவிடுகின்றது.

கவிதையில் எளிமை எளிமை யென்று பொதுமக்களுக்கான இலக்கியத்தை முன்னெடுத்த பாரதியும், வசனத்தில் எளிமை யையும், விளக்கத்தையும் முன்னெடுத்த வீரமாமுனி வரும், ஆறுமுக நாவலரும் இக்காலகட்டத்தவர்களே. இவர்களால் முனையப்பட்ட துறைகளின் வளர்ச்சி, தமிழ் உரைநடையை நவீன இலக் கியத்துக்காகப் பதப்படுத்தி வைத்திருந்தது என்பது மிகையான கூற்றல்ல. பாரதி யின் சிறுகதை முயற்சிகளை வைத்துப் பார்க்கிறபோது, 'சந்திரிகையின் கதை'யை அவனது நாவல் முயற்சியாகவே கொள்ள முடிகிறது. வ. வே.சு.ஐயரின் 'ஒரு குளத்தங்கரை அரசமரம்' சிறுகதைக்கும், சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை' நாவலுக்கும்கூட உந்துவிசையாய் இது இருந்ததாய்க் கொள்ள முடியும். அத்தனைக்கும் அந்த முற்றுப்பெறாத நவீனம் இருந்திருக்கிறது.

இந்திய மொழிகளைப் பொறுத்த வரையில் பங்கிம் சந்திரரின் 'துர்கேச நந்தினி' எனும் 1864இல் வெளிவந்த நாவலைத்தான் இந்தியாவின் முதல் நாவலாகக் குறிப்பிடுவர். தமிழின் முதல் நாவலின் தோற்றத்துக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இது நடந்தது. துர்க்கேச நந்தினி மட்டுமல்ல, பங்கிம் சந்திரரின் ஏனைய நாவல்களான 'கபால குண்டலா', 'விஸவிருட்சம்', 'ஆனந்த மடம்' போன்றவையும் சேர் வால்டர் ஸ்காட்டின் கதை கூறல் முறையை, கட்டு மான முறையைக் கொண்டிருந்திருக்கின்றன.

இத்தாலிய மான்சோனி பின்னாளில் சேர் வால்டர் ஸ்காட்டைப் படித்து எப்படி எழுதக்கூடாதென்பதைக் கற்றுக்கொண்டேன் என்று கூறினார். அதுபோலவன்றி இந்திய நாவலாசிரியர்கள் சேர் வால்டர் ஸ்காட்டை முழுமையாகச் சரணடைந்தனர். இந்தியத் தன்மைகளுடனான நாவல்கள் தோன்ற மேலும் சுமார் அரை நூற்றாண்டாக இந்தியா காத்திருக்கவேண்டிய அவலம் இங்கிருந்தே தோன்றியது என்பார் இலக்கிய விமர்சகர் க.நா.சு. தமிழிலுள்ள நிலையைப் பார்க்கை யிலும் இந்த உண்மையைப் புரியமுடியும்.

2. அதற்கு முன்னராக, நாவல் என்கிற இலக்கிய வடிவம் எப்போது தோன்றியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்ற கேள்விக்கான விடையைக் கண்டடைந் திருந்தாலும், ஏன் தோன்றியது என்ற கேள்விக்கு நாம் விடை கண்டாகவேண்டி இருக்கிறது. ஓர் இலக்கிய வடிவத்தை அதன் விசேடம் கருதி ஒருவரால் அல்லது ஒரு குழுவினரால் உருவாக்கிவிட முடியாது. ஒரு சமூகத்தின் தேவை ஒரு குறிப்பிட்ட இலக்கிய வடிவத்தைக் கையாள்வதற்கு, புழங்குவதற்குத் தயாராக இல்லையேல் அது எத்தனை சிறந்த வடிவமாக இருப்பினும் காலத்தில் நிலைத்து நின்றுவிடாதென்பது சமுதாய விதியாகும். ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னரான சோழராட்சிக் காலத்தை காவிய காலம் என்று தமிழிலக்கிய வரலாறு வரையறை செய்யும். காவிய காலம் மறைய உருவாகிய காலத்தை அது பிரபந்த கால மென்று சொல்லும். இந்த இலக்கிய வடிவ மாற்றத்தினை உருவாக்கிய சக்தி சமூக மாற்றமே என நிச்சய விடை தருகிறது மார்க்சீயப் பார்வை.

பெருவலிது பெற்றிருந்த நிலமாண்ய சமுதாயத்தின் வன்மை இழப்பும், மத்தியதர வர்க்கமொன்றின் தோற்றமுமே இலக்கிய வடிவ மாற்றத்தை உருவாக்கியதென்பார் கலாநிதி க.கைலாசபதி.

மாறாக, 'தத்துவம்' நெறிகளை உருவாக்குவதில் வெற்றிகொண்டதன் விளைவாக காவியங்கள் உருவாயின. அவை அனுபவங்களைத் தொகுத்து தருக்க அடிப்படையில் நெறிகளை முன்வைத்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெறிகளை மறுபரிசீலனை செய்யவும், நெறிகள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றின் சாத்தியங்களை யும் தேவைகளையும்பற்றி யோசிக்கவும் தத்துவம் முன்கைகொடுத்தது. தத்துவத்தின் பணி மேலும் சிக்கலும் விரிவும் கொண்டதாக ஆயிற்று. இந்தக் காலகட்டம் இலக்கியத்தில் பிரதிபலித்ததின் விளைவாக மேலும் மேலும் பன்முகத் தன்மையும் நெகிழ்வுத் தன்மையும் கொண்ட இலக்கிய வடிவம் ஒன்றின் அவசியம் எழுந்தது என்கிறார் திரு. ஜெயமோகன் தனது நாவல் என்கிற நூலில் (நாவல், பக்: 13).

தத்துவம் நெறிகளை உருவாக்குவதில் வெற்றிகொண்டதன் விளைவாகக் காவியங்கள் உருவாகின என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. தத்துவத்தின் பணி மேலும் சிக்கலும், விரிவும் கொண்டதாக ஆனதிலும், அதனால் மேலும் மேலும் பன்முகத் தன்மையும் நெகிழ்வுத் தன்மையும் கொண்ட இலக்கிய வடிவம் ஒன்றின் அவசியம் எழுந்தது என்ற கருத்திலும் உடன்பாடே. ஆனால் தத்துவம் நெறிகளை உருவாக்குவதில் வெற்றிகொண்டது எவ்வாறு என்ற கேள்விக்கு விடை அந்த வரிகளில் இல்லை. அதனால் தத்துவத்தை வெற்றிகொள்ள வைத்த காரணத்தை அறிய நாம் கலாநிதி கைலாசபதியிடம்தான் வரவேண்டியிருக்கிறது.

அதன்படி நாம் அடைகிற பதில், கருத்து முதல் வாதத்துக்கு எதிரான பொருள் முதல்வாத அடிப்படையே காரணம் என் பதாக அமைகிறது. சிந்தனை முந்தியதென்றும் செயல் பிந்தியதென்றும் கூறும் கருத்து முதல்வாதம். பொருள்முதல்வாதமோ செயல் முந்தியதென்றும் சிந்தனை பிந்தியதென்றும் வாதிக்கும். அப்பிள் பழம் நிலத்தில் விழுந்த செயல்பாடுதான் அதன் காரணத்தைச் சிந்தித்த நியூட்டனுக்கு புவி ஈர்ப்பை அறிய வைக்கிறது. அதன் படி சமுதாய மாற்றம் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியில் விளைய, அதன் மூலம் ஏற்படும் சமூக மாற்றம் இலக்கிய வடிவங்களிலும் மாற்றத்தை விளைவிக்கிறது என்ற முடிவு விஞ்ஞானபூர்வ மானதுதான்.

3. மேலே நாவல்கள் பற்றிய ஆய்வுப் போக்குகள், விமர்சனங்கள் குறித்த விடயத்தில் சிறிது கவனம் செலுத்திவிட்டு தொடர்ந்து நகர்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

க.கைலாசபதி, ஜெயமோகன், க.நா.சு., கோவை ஞானி ஆகிய இந்நால்வரும் இத் துறையில் கவனம் குவிக்கப்பட வேண்டியவர்கள் ஆகிறார்கள். முன்னவர்கள் ஆய்வு அல்லது விமர்சனப் போக்குகளின் விதிமுறைகளை வகுத்தவர்கள் எனக் கொண்டால், அந்த விதிமுறைகளின்படி தமது ரசனையின் வழி நின்று நல்ல நாவல்களை இனங்கண்டு சொல்லியவர்களாக க.நா.சு.வையும், கோவை ஞானியையும் சொல்ல முடியும்.

தெளிவான இரண்டு போக்குகளின் பிரதிநிதிகள் இவர்கள். நிறுவன மயமாய் வளர்ந்து வந்த மார்க்சீய சிந்தனையின் வழி க.கைலாசபதி தனது விமர்சன முறையை முன்வைத்தவரென்றால், இந்த வழியின் இயங்கியல் தன்மையை மறு தலித்தும், மார்க்சீய விமர்சன முறையை மறுத்தும் ஜெயமோகன் தனது கருத்துக்களினை முன்வைத்ததாகக் கொள்ள முடியும். அதுபோல புதிய மார்க்சீயத்தைக் கட்டுருவாக்குவதில் பங்காற்றிய அந்தோனியோ கிராம்சியின் வழி நாவல்களை கோவை ஞானி இனங்கண்டாரென்றால், இதை மறுதலித்த முறையில் தன் முடிவுகளை முன்வைத்தார் க.நா.சு.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெறிகளை மறுபரிசீலனை செய்யவும், நெறிகள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றின் சாத்தியங்களையும் தேவைகளையும்பற்றி யோசிக்கவும் தத்துவம் முன்கைகொடுத்தது. தத்துவத்தின் பணி மேலும் சிக்கலும் விரிவும் கொண்டதாக ஆயிற்று. இந்தக் காலகட்டம் இலக்கியத்தில் பிரதிபலித்ததின் விளைவாக மேலும் மேலும் பன்முகத் தன்மையும் நெகிழ்வுத் தன்மையும் கொண்ட இலக்கிய வடிவம் ஒன்றின் அவசியம் எழுந்தது

(நாவல், பக்:13)

இருந்தாலும் முற்று முழுதாக இடதுசாரிகளின் படைப்புகளை அவர் நிராகரித் தார் என்றும் சொல்லிவிட முடியாது.

கலாநிதிகள் கைலாசபதியும் சிவத்தம்பியும் முன்னிலைப்படுத்திய படைப்புகளையே அவர் பிரதானமாகவும் மறுதலித்தார் என்பதுதான் சரியான வரையறையாக இருக்க முடியும். கலை மக்களுக்கானது என்றதும், கலை கலைக்கானது என்றதுமான இரண்டு சிந்தனைப் பள்ளிகளின் பிரதிநிதிகள் இந்த நால்வரும் என்றாலும் பொருந்தும்.

க.கைலாசபதியும், கோவை ஞானியும் முதலாவது போக்கினது பிரதிநிதிகளென்றால், க.நா.சு.வும், ஜெயமோகனும் இரண்டாவது போக்கினுக்கு உரிய பிரதிநிதிகள் எனக் கொள்ளமுடியும்.

விமர்சனத் துறையில் இருந்த இந்த இரண்டு போக்குகள் போலவே, படைப்புத் துறையிலும் இரண்டு போக்குகள் தெளிவாக இருக்கவே செய்தன. படைப்புகள் குறித்து வருமிடத்தில் இதுபற்றி சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

இந்த இடத்தில் ஒன்றைத் தெளிவாகச் சொல்லிவிடலாம். மார்க்சீய விமர்சன முறை ஒன்று உண்டென்பதில் எமக்குள்ள உடன்பாடு, இந்த முறையின் மூலம் முன்னிலைப் படுத்தப்பட்ட படைப்புகள் மீது இல்லை. அதனால் க.கைலாசபதியும், கா.சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யும் மேற்கொண்ட முறைகளில் எமக்கிருக்கும் அபிமானம், அவர்கள் முன்னி லைப்படுத்திய படைப்புகள்மீது நிச்சயமாக இல்லை யென்பதை இந்த இடத்தில் தெரிவித் தாக வேண்டும். ஒரு படைப்பு என்பது தன்னளவில் கலாபூர்வமான கட்டுமானங் களால் நிலைநிற்கிறது என்பதே எமது நிலைப்பாடு.

4. தமிழின் முதல் நாவலாக 1879 இல் வெளிவந்த மயூரம் வேதநாயகம் பிள்ளையின் பிரதாபமுதலியார் சரித்திரம் சொல்லப் படுகிறது. (இந்நூல் எழுதப்பட்ட காலமாக 1876ம், வெளியிடப்பெற்ற காலமாக 1879ம் கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்', நா.சுப்பிரமணியனின் 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' ஆகிய பல்வேறு நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.) பொதுமக்களுக்கு ரசமாகவும், போதனை நிறைந்ததாகவும் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் அந்த நாவலைத் தான் படைத்ததாக ஆசிரியரே தன் ஆங்கில முன்னுரையில் குறிப்பிடுவார்.

மட்டுமல்ல, 'இந்தச் சரித்திரத்திலே பிரஸ்தாபிக்கப்பட்ட பலரும் இந்த நிமிடம் வரையில் ஒரு குறையும் இல்லாமல் சுகஜீவி களாய் இருக்கிறார்கள். அப்படியே இதை வாசிக்கிறவர்கள் எல்லோரும் வச்சிர சரீரிகளாய் நித்திய மங்களமாய் வாழ்ந்திருக்கக் கடவார்கள்' என்ற ஆசீர்வாதமும் இடம் பெற்றிருக்கும். 'நாமும் கதையை முடித் தோம், இந்த நானில முற்றுநல் இன்பத்தில் வாழ்க' என்று பாரதியும் தன் பாஞ்சாலி சபதத்தை இவ்வாறுதான் முடித்திருப்பான்.

இது தன் படைப்பின் முற்றுமுழுதான நோக்கத்தை படைப்பாளி வெளிப்படுத்தும் விதமாகக் கொள்ளலாம். மயூரம் வேதநாயகம் பிள்ளை பொதுமக்களைக் குறியாகக் கொண்டு நூல் யாத்த வேளையில், கல்வி யறிவுபெற்ற கனவான்களைக் குறியாகக் கொண்டு 'மனோன்மணியம்' ஆசிரியர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை நூல் யாத்தார்.

உணர்ச்சிகளை படிப்படியாக ஏற்றி வெறும் கதைகூறலாய் தமிழ் நாவல் இலக்கியம் இந்த ரொமான்ரிய முறையிலேயே நீண்டகாலம் பயணித்தது. அப்போது அது வசன காவியம் என்றழைக்கப்பட்டது. கலாநிதி கைலாசபதிகூட, 'பிரதாபமுதலியார் சரித்திரம் தமிழ் உரைநடையில் தோன்றிய முதலாவது புதுமை நூல் ஆகவும் அமைந்து விட்டது. எனவே வசன காவியம் என்று அதனை அழைத்தல் பொருந்தும்' என்று கூறுவதைக் கவனிக்கவேண்டும். இந்த இடத்தில் அந்நூலை நாவலெனக் குறிப் பிடாமல், புதுமை நூலெனக் குறிப்பிடுகிறார் அவர். பிரதாப முதலியார் சரித்திரத்தின் பின்னால் வெளிவந்த 'கமலாம்பாள் சரித்திரம்', 'பத்மாவதி சரித்திரம்' உட்பட பல்வேறு நாவல்களும் இந்தத் திசையிலேயே சென்றிருந்தன. அதற்கான வாசகத் தளத்தையே அதுவரையான ஆங்கிலக் கல்விமுறையும் உருவாக்கியிருந்தது.

5. தமிழ்நாட்டில் நிலைமை இவ்வாறு இருந்தால், ஈழ நாட்டில் அதன் முதலாவது தமிழ் நாவல் 'ஊசோன் பாலந்தை கதை', பிரதாபமுதலியார் சரித்திரம் வெளிவந்து பன்னிரண்டு ஆண்டுகளின் பின் வெளிவந்தது எனத் தெரிகிறது. இதை திருகோணமலை இன்னாசித்தம்பி 1891இல் எழுதினார். கலாநிதி க. கைலாசபதியின் இந்த முடிவுக்கு மாறாக கலாநிதி நா.சுப்பிரமணியன் 1885இல் னால் எழுதி வெளியிடப்பட்ட 'அசன்பேயு டைய கதை' யை ஈழத்து முதலாவது தமிழ் நாவலாகக் கொள்வார். இவை இரண்டையும் விடுத்து ஈழ மொழி வழக்குப் பிரஸ்தாபமும், எடுத்துக்கொண்ட நிலக்களனும் காரணமாக 'வீரசிங்கங்கள் அல்லது சன்மார்க்க ஜெயம்' என்ற சி.வை.சின்னப்பபிள்ளையின் 1905இல் வெளிவந்த நூலைக்கூட முதலாவது என்று சொல்லலும் பொருத்தமானது. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யெல்லாவற்றுக்கும் மாறாக 1856ஆம் ஆண்டில் வெளிவந்த 'காவலப்பன் கதை'யே முதலாவது ஈழத்துத் தமிழ் நாவல் என்பாரும் உளர். இதுபற்றிய முடிவை ஆய்வுலகத்துக்கு விட்டுவிடுவோம்.

பிற்காலத்தில் முகிழ்ந்த முற்போக்குக் காலகட்டத்தில் எழுந்த புனைகதைகளின் வீச்சுக் குறித்து சிறுகதையிலும், நாவலிலும் கவனம் குவிக்கவேண்டிய அவசியமொன்று ஈழம்வரையில் உண்டு. மற்றும்படி தமிழ் நாவலிலக்கியத்தில் மிக்க பாதிப்பை ஏற்படுத்திய நாவலாகச் சொல்வதற்கு நாம் தடுமாற்றம் கொள்ளவேண்டிய நிலைமையே எஞ்சிநிற்கிறது. கே.டானியலின் 'கானல்', மு.தளையசிங்கத்தின் 'ஒரு தனி வீடு', அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது', பாலமனோகரனின் 'நிலக்கிளி', வ.அ.இராசரத்தினத்தின் 'துறைக்காரன்' போன்றனவற்றை, விமல் குழந்தைவேல், தேவகாந்தன், சோபாசக்தி முதலானவர்கள் புலம்பெயர் தமிழ்ப் படைப்பாளிகளாகக் கணிக்கப்படுகிற வரையில், ஈழத்தின் சிறந்த நாவல்களாகக் கூறமுடியும்.

சிறுகதையில் இருந்த வளர்ச்சி இலங்கைத் தமிழ் நாவல்களைப் பொறுத்த வரையில் இருக்கவில்லையென்று குறிப்பாகச் சொல்லலாம்.

நந்தியின் 'மலைக்கொழுந்து', சி.வி. வேலுப்பிள்ளையின் 'இனிப்படமாட்டேன்', தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை', தி.ஞானசேகரனின் 'குருதிமலை' போன்றனவும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தனவே. எஸ்.பொ.வின் 'தீ' நாவல் தனக்கென ஓரிடத்தை நாவலிலக்கிய வரலாற்றில் கொண்டிருக்காவிடினும் அது வெளிவந்த காலத்திலிருந்த பாதிப்பு முக்கியமானது. அது குறித்து எழுந்த விமர்சனங்கள் முக்கியமானவை. அதில் க.நா.சு., மு.த., பிரமிள் போன்ற பலர் கலந்துகொண்டிருந்தனர். எழுத்து சஞ்சிகையில் இவ்விவாதங்கள் இடம்பெற்றன. ஈழத்து ஆரம்ப நாவல்களைப் பொறுத்தவரை மங்களநாயகம் தம்பையாவின் 'நொறுங்குண்ட இதயம்' நாவலுக்கு தனது ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம் நூலிலே ஒரு முக்கியமான இடம் அளித்திருப்பார் கலாநிதி நா.சுப்பிரமணியன்.

இலங்கையின் வடபகுதியில் முற்போக்கிலக்கியம் சாதி முறைக்கெதிரான போராட்டத்தின் வெளிப்பாட்டினைக் கொண்டிருந்ததெனில், மலையகத்தில் அது தொழிற்சங்க உரிமையினதும், பாலியல் சுரண்டலினதும், வாழிடப் பிரச்சினையினதும் வெளிப்பாட்டைக் கொண்டிருந்ததாய் பொத்தம் பொதுவாகக் கூறமுடியும். இந்த வகையில் அங்கே தோன்றிய நாவல்கள் இச் சோகங்களின் வெளிப்பாட்டினை அதிகமும் கொண்டிருந்தன. ஆயினும் கனதியான நாவல் என்றவகைமையுள் அவை அடங்காது போய்விடுகின்றமை துர்ப்பாக்கியம்.

வெறும் யதார்த்தத்தின் பிரத்தியட்சம் மட்டும் கொண்ட நீண்ட கதை, நாவலாக ஆகிவிடுவதில்லை. நாவலின் பாத்திர வார்ப்பும், அது விரிக்கும் சமூகக் களமும், தனிமனித மனநிலைகளின் விவரிப்பும், கதைகூறலின் புனைவும், அதற்கான மொழி நடையுமே ஒரு நூலை அது நாவலா இல்லையா எனத் தீர்மானிக்கிறது என்ற விமர்சன அடிப்படையில் இந்த முடிவையே நாம் வந்தடையவேண்டி உள்ளது.

இலங்கை தவிர்த்து, மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் இலக்கிய முயற்சிகள் உள்ளன. சிறுகதையில் ஓரளவு அவற்றுக்கான பங்களிப்பு உளவெனினும், நாவலில் சொல்லும்படிக்கு மிக அதிக மில்லை. ரெ.சண்முகத்தின் 'சயாம் மரண ரயிலில்', அ.ரெங்கசாமியின் 'லங்காட் நதிக்கரை', ரெ.கார்த்திகேசுவின் 'அந்திம காலம்' போன்ற நாவல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

6. இலக்கிய வரலாற்றெழுத்தியல் பகுத்துள்ள படி இந்திய அல்லது ஈழ நாவல்களின் தோற்ற காலத்தை ஐரோப்பியர் காலமெனக் கொள்ளலாம். ஐரோப்பிய காலம், நாவல்களின் தோற்றத்துக்கான களப் பணியைக் கச்சிதமாக முடித்திருப்பினும், சிந்தனை விரிவாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. இந்தியா சுதந்திரம் பெறும்வரையில் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி அதற்காகக் காத்திருக்க வேண்டியதாயிற்று.

சுதந்திரத்திற்குப் பிறகான தமிழ் நாவலின் வளர்ச்சி பெரும்பாலும் மேற்கு நாடுகளைச் சார்ந்தல்ல, இந்திய மொழிகளைச் சார்ந்தே அமைந்திருக்கிறது. குறிப்பாக வங்கத்திலிருந்தும், மராத்தி, உருது, இந்தி மொழிகளிலிருந்தும் பெருவாரியான மொழியாக்கங்கள் தமிழில் இடம் பெற்றன.

வ.வே.சு.ஐயர், கு.ப.ராஜகோபாலன், ஆர்.சண்முகசுந்தரம் போன்றோர் வங்க மொழியிலிருந்து நிறையப் படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டுவந்தனர்.

ஆர்.சண்முகசுந்தரத்தின் மொழிபெயர்ப்பில் வெளிவந்த விபூதிபூஷன் பந்யோபாத்யாயவின் 'பதேர் பாஞ்சாலி'யும், த.நா.குமாரசாமியின் மொழிபெயர்ப்பிலான தாராசங்கர் பானர்ஜியின் 'ஆரோக்ய நிகேதன'மும் தமிழிலக்கிய உலகினை வலுவாகப் பாதித்தவை.

இந்த ஆரம்பம் பதிப்புத் துறையினதும், வாசகப் பரப்பினதும் அனுசரணையினால் வீச்சுப் பெற்றது. மணிக்கொடிக் காலத்துக்குப் பின்னால் இந்தத் துறை மகத்தான வளர்ச்சிபெற்றது. கா.ஸ்ரீ.ஸ்ரீ.யினால் மராத்திய எழுத்தாளர் வி.ஸ.காண்டேகரின் சிறுகதைகளும் நாவல்களும் பெருவாரியாக மொழிபெயர்க்கப்பட்டன. த.நா.குமாரசாமி, த.நா.சேனாபதி, மற்றும் அ.கி.ஜெயராமன் போன்றோரால் வங்கப் படைப்புகள் மொழிமாற்றமாயின. இது தமிழ் நாவலின் வளர்ச்சிப் போக்கைத் திட்டமாக மாற்ற உதவியது. அதுபோல சோவியத்திலிருந்து மார்க்சீம் கார்க்கியும், புஸ்கினும், டால்ஸ்டாயும், கோகலும், அன்ரன் செகாவும் மொழிபெயர்ப்பாகி வந்ததிலான தாக்கமும் தமிழில் நிறைய நிகழ்ந்திருக்கிறது. சிதம்பர ரகுநாதன் மொழிபெயர்த்த மார்க்சீம் கார்க்கியின் 'தாய்' நிறைந்த பாதிப்பைச் செய்ததாய்ச் சொல்லப்படுகிறது. தமிழுக்கு நிகழ்ந்த பிரேம் சந்த்தின் படைப்புகளது அறிமுகமும் முக்கியமானது. ஹிந்தியிலும் உருதுவிலும் முதல் நாவலாசிரியராகக் கணிக்கப்படும் பிரேம் சந்த், இடதுசாரிச் சிந்தனையாளர். இவரது படைப்புக்களில், பிரச்சார நோக்கம் இருந்தாலும்கூட, அவர் கதைகளும், நாவல்களும் இலக்கியத் தரம் அமைந்து விளங்கியது ஒரு சிறப்பு என்கிறார் இலக்கிய விமர்சகர் க.நா.சு.

இந்த இடத்தில் ஈழத்தில் நிகழ்ந்த மொழிபெயர்ப்புகளையும் நாம் நினைவு கொள்ள வேண்டும். ஏறக்குறைய இருபது மொழிபெயர்ப்பாக்கங்கள் இக் காலப் பகுதியில் வெளிவந்ததாகத் தெரிவிக்கிறார் கலாநிதி.நா.சுப்பிரமணியன் தனது 'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' என்ற நூலிலே. இவான் துர்க்கனேவ்ஷவின் நாவலென்று இலங்கையர்கோனால் மொழிபெயர்க்கப்பட்டு 'முதற்காதல்' என்ற பெயரில் வெளிவந்தது. இவானின் இன்னொரு நாவல் 'மாலை வேளையில்' என்ற தலைப்பில் சி.வைத்திய லிங்கத்தினால் மொழிபெயர்ப்பானது. றொபேர்ட் லூயி ஸ்ரீவன்ஸனின் ஒரு நாவல் 'மணிபல்லவம்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம் தேவனினால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எமிலி ஜோலாவின் நாநா நாவல் அ.ந.கந்தசாமியினால் மொழி பெயர்க்கப்பட்டது. இவற்றை முக்கியமாகக் கருதலாம்.

தமிழில் முற்போக்கு இலக்கியத்தை, இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் யதார்த்தவாத எழுத்து முறையை, வளர்த்தெடுத்ததில் இத்தகைய மொழிபெயர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களுக்குப் பெரும்பங்குண்டு.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலிருந்தே கம்யூனிச சிந்தனையும், இயக்கச் செயற்பாடும் இந்தியாவில் ஏற்பட்டிருப்பினும் இந்திய சுதந்திரத்தின் பின்னரே முற்போக்குவாத சிந்தனை இலக்கியத்தில் வீச்சுப் பெற்றது எனல் வேண்டும்.

7. இது முதல்கொண்டு தமிழ் நாவல் இலக்கியத்தின் போக்கினை மூன்றாக வகுக்க முடிகிறது. முதலாவது, பொதுமக்கள் இலக்கியம். இது வணிகத்தனமாக விரிகிறது. இரண்டாவது, சிற்றிதழ்களின் தோற்றமும் தீவிர இலக்கிய முயற்சிகளும் குறிப்பாக, 'எழுத்தின்' வருகை. இது விமர்சன முறையை முன்னெடுத்ததோடு புதுக்கவிதைக்கான வாசலைத் திறந்தும் விட்டது. மூன்றாவது, முற்போக்கு இலக்கியம். இதை இடதுசாரி இலக்கியம் என்றாலும் பொருந்தும். இதன் பெரு வழக்கிழப்பு பின்னால் தலித் இலக்கியம் பெருக வாய்ப்பானது.

இந்த மூன்று வகையான இலக்கியப் பிரிவுகளும் அண்ணளவாக 1975 வரை எதுவித தடுமாற்றமுமின்றி வளர்ந்தன. அதனதன் சிந்தனையைத் திசைமாற்றும் எதுவிதமான பாரிய சமூக மாற்றமும் இக்காலம் வரையில் நிகழவில்லை என்கிறது இலக்கிய விமர்சன உலகம்.

முதலாவது வகையினரில் கல்கி, அகிலன், நா.பார்த்தசாரதி, சாண்டில்யன், கோவி மணிசேகரன், ஜெகசிற்பியன் போன்றோரின் எழுத்துக்கள் தொடர்கதைகளாக சஞ்சிகைகளில் வெளிவந்த காலம் இதுதான். கல்கி, சாண்டில்யனின் சரித்திரக் கதைகள் அசாதாரண இயற்கை நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் historical romance என்கிற வகைப்பாட்டுக்குள் அடங்குவன. இவற்றை சாதாரண இயற்கை நிகழ்ச்சிகளோடு பொருந்தியதான historical novel என்ற வகைமைக்குள் அடக்கி விட முடியாது. தமிழில் இதற்கு முன்னுதாரணம் ஆகக்கூடிய நாவல் அரு.ராமநாதன் எழுதிய 'பாண்டியன் மனைவி' மட்டுமே. ஆயினும் இவ்வகை எழுத்து லட்சக்கணக்கான வாசகப் பெரும் பரப்பைக் கொண்டிருந்தது. கல்கி, கலைமகள், அமுதசுரபி, ஆனந்த விகடன், குமுதம் ஆகிய சஞ்சிகைகள் இவற்றின் வெளியீட்டுக்களங்களாயிருந்தன. மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்களில் நா.பா.வின் மணிபல்லவமும், பாண்டிமாதேவியும் சற்று வித்தியாசப்பட்ட அமைப்பும், நடையும் கொண்டன. இவற்றினுள்ளும் மணிபல்லவம் மீது ஒருவித பற்றும் உண்டு.

"சுதந்திரத்திற்குப் பிறகான தமிழ் நாவலின் வளர்ச்சி பெரும்பாலும் மேற்கு நாடுகளைச் சார்ந்தல்ல, இந்திய மொழிகளைச் சார்ந்தே அமைந்திருக்கிறது. குறிப்பாக வங்கத்திலிருந்தும், மராத்தி, உருது, இந்தி மொழிகளிலிருந்தும் பெருவாரியான மொழியாக்கங்கள் தமிழில் இடம் பெற்றன. வ.வே.சு.ஐயர், கு.ப.ராஜகோபாலன், ஆர்.சண்முகசுந்தரம் போன்றோர் வங்க மொழியிலிருந்து நிறையப் படைப்புகளைத் தமிழுக்குக் கொண்டுவந்தனர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆரம்பகால வாசிப்புகளில் நம்மை ஒரு திசைமாற்றும் கருவியாக அது செயற்பட்டது என்பது அதன் முதன்மைக் காரணம்.

ஆரணி குப்புசாமி முதலியாரின் எழுத்தின் தொடர்ச்சியாக இவர்களைக் கொள்ளலாம்.

அடுத்த இலக்கிய வகைமையும் சஞ்சிகை சார்ந்தே தொடங்குகிறது. தீவிர இதழ்கள் அல்லது சிற்றிதழ்கள் என இவற்றைக் கூறலாம். எழுத்து, சூறாவளி, சந்திரோதயம் போன்றவை இக்காலகட்டத்தினவாகும். இவற்றின் பாதிப்பு பல எழுத்தாளர்களிடமும் இருந்தது. 'நாகம்மாள்' தந்த ஆர். சண்முகசுந்தரம், 'நித்திய கன்னி', 'காதுகள்' ஆகிய நாவல்களைத் தந்த எம்.வி. வெங்கட்ராம், 'வாடிவாசல்' எழுதிய சி.சு.செல்லப்பா, 'ஒருநாள்','பொய்த் தேவு' ஆகிய நாவல்களைப் படைத்த க.நா.சு. போன்றோரையும் 'புயலிலே ஒரு தோணி', 'கடலுக்கு அப்பால்' ஆகிய நாவல்களின் படைப்பாளி ப.சிங்காரம், 'மோகமுள்', 'மரப்பசு', 'அம்மா வந்தாள்' ஆகிய நாவல் களைத் தந்த தி.ஜானகிராமன், 'பதினெட்டாம் அட்சக்கோடு', மற்றும் 'தண்ணீர்' ஆகிய நாவல்களைத் தந்த அசோகமித்திரன், 'குறத்தி முடுக்கு', 'நாளை மற்றுமொரு நாளே' தந்த ஜி.நாகராஜன், 'மாயமான் வேட்டை' மற்றும் 'குருதிப்புனல்' தந்த இந்திரா பார்த்தசாரதி, 'கரிப்பு மணிகள்' மற்றும் 'பாதையில் பதிந்த அடிகள்' படைத்த ராஜம் கிருஷ்ணன், 'கடல் புரத்தில்' தந்த வண்ணநிலவன், 'பள்ளி கொண்டபுரம்' படைத்த நீலபத்மநாதன் போன்றோர் இவ்வகையினருள் முக்கிய மானவர்கள்.

மூன்றாம் வகைமைக்குள் தமிழ் நாவல் உலகின் மிக முக்கியமான படைப் பாளிகள் அடங்குவர். ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி, கி.ராஜநாராயணன் போன்றோர் ஆரம்பத்தில் முற்போக்கு அணி எழுத்தாளர் களாகவே இனங்காணப்பட்டார்கள். இவர்களது அணிமாற்றம் பின்னாலேதான் நிகழ்ந்தது.

சு.சமுத்திரம், டி.செல்வராஜ், கந்தர்வன், பொன்னீலன், சிதம்பர ரகுநாதன் ஆகியோர் முக்கியமானவர்கள். சு.சமுத்திரத்தின் 'வாடாமல்லியும், சிதம்பர ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' முக்கியமான நாவல்கள். 'வாடா மல்லி' பாலினப் பிரச்சினைபற்றிப் பேசும் முக்கியமான தமிழ் நாவல். அதே போல் ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' தமிழ் முற்போக்கு இலக்கியத்தின் முன்னோடி நாவலாகக் கூடியது.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியின் முன்னால் இன்னும் சிலரின் விகசிப்பு உண்டு. இதை நாம் விளங்கிக்கொள்ள அமைப்பியலிலிருந்து பின்நவீனத்துவம் வரையில் அலசியாக வேண்டும். இந்தியப் பொருளியல் மாற்றமும் வேறுவிதத்தில் தன்னை வடிவமைத்தமை இந்த மாற்றங் களைத் துரிதப்படுத்தியது.

உற்பத்தி முறையும், சமூக நிலைமை யும் இன்னும் நிலப்பிரபுத்துவப் பிடி முற்றாக நீங்கிவிடாத நாடாகவே இந்தியா இருந்து வந்திருக்கிறது. தொழிற்சாலைகளும் முதலா ளிகளும் தோன்றியிருப்பினும் அரசின் இறுக்கம் வலுவாக இருந்து முதலாளித்துவ முறையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருந்தது. என்றைக்கு இந்திய பொருளாதார அமைப்பு தனது மடியில் சர்வதேச முதலீட்டுக்கான வாசலைத் திறந்துவிட்டதோ, அன்றைக்கு அது பிரமிக்கத் தக்க மாற்றங் களைக் காணத் தொடங்கிவிட்டது. சோவியத் தின் உடைவு இந்தியாவின் தங்குதடையற்ற முதலாளித்துவப் போக்கினுக்கு உதவுமுக மாகவே இருந்தது. இத்தகைய பொருளியல் மாற்றத்தினூடாக தொலைக்காட்சியும், கணினியும் உள்நுழைகின்றன. திறந்தவெளிப் பொருளாதாரமாக ஆரம்பித்தது, திறந்த வெளிச் சிந்தனையைத் தருகிறது. பதிப்பகங் கள் பெருமாற்றம் காண்கின்றன. மேற்குலகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிந்தனையின் உள்நுழைவு சிற்றிதழ்களின் வடிவில் வாசகப்பரப்பை அடைந்தன. அமைப்புமையவாதமும், பின்அமைப்பியலும், பின்நவீனத்துவமும் வாசகப் பரப்பைப் போலவே படைப்புலகையும் அணுகுகிறது. இவ்வாறு மேற்குலகச் சிந்தனை பரவியிருப்பினும், உள்ளுலகச் சிந்தனையான தலித்தியம் மகராஷ்டிரத் திலிருந்து தெலுங்குக்கும், பின்னால் தமிழுக்கும் பரவுகிறது. அம்பேத்கரின் நூற்றாண்டு விழா தலித்தியத்தை பேரெழுச்சியோடு தமிழில் நிலைநாட்டுகிறது.

8. இதிலிருந்து தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றை தசாப்தங்களாகப் பிரித்துக் காணவேண்டிய தேவை இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் இந்த இரண்டு இறுதிச் சகாப்தங்களும் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் முக்கியமானவை. எட்டாம் தசாப்தம்தான் இன்றைய தமிழ் நாவல் இலக்கியத்தின் பாதையைச் செப்பனிட்டுத் தந்தது என்பது மிகையான கூற்றல்ல.

இந்த மாற்றத்துக்கான சமூக விதி, முதலாளித்துவம் மேலும் மேலும் இறுக்கமாக வளர்ந்துவரும் நிலையை செம்மையாகச் சொல்லிநிற்கிறது. கணினியின் வளர்ச்சி அறிவியக்கத்தின் ஊற்றாக இன்று மாறி வளர்ந்து நிற்கிறது.

குறியியலினதும், அமைப்புமையவாதத்தினதும், பின்அமைப்பியலினதும், பின்நவீனத்துவத்தினதும் வளர்ச்சி இந்த வளர்ந்துவரும் முதலாளித்துவத்திற்கான போர்க்கொடி என்பது நம்ப மறுக்கிற சேதியாகவே பார்க்கப்பட்டு வருகிறது. பதிப்பகங்களதும், முறைசார் கல்வி நெறியினதும் அமைப்புக்கு எதிரான கலகக்குரலாகவே பின்நவீனத்துவம் எழுச்சி பெற்றதென்பது மேற்குலக வரலாறு. நிறுவனமயப்பட்ட அமைப்புகளை பகிஸ்கரிக்கும் முயற்சியே பின்நவீனத்துவத்தின் ஆரம்பமாகச் சொல்லப படுகிறது.

கார்ல் ஆந்த்ரேவின் 'சமனி 8' என்ற செவ்வகமான செங்கல் அடுக்கு ஒன்று லண்டனில் உள்ள டேட் கலைக்கூடத்தில் 1976ஆம் ஆண்டு காட்சிக்கு வைக்கப்பட்டதிலிருந்து இந்தப் புள்ளியை நாம் இட்டுக் கொள்ளலாம். இது உணர்ச்சி பாவம் எதுமற்ற வெறும் கற்குவியல் என்பாரும், இது கொண்டிருக்கக்கூடிய அர்த்தங்களை மதிப்பீடு செய்வோருமாக இது சர்ச்சையை மட்டுமல்ல, சிந்தனையையும் கிளர்த்தியது.

இதில் நாம் கண்டடையவேண்டிய உண்மை எதுவெனில் கலைக்கூடத்தின் தன்மை மாற்றப்படுகிறது என்பதுதான். 'ஒரு படைப்பை மெய்யான கலைப்படைப்பு என்று ஆக்குவது எல்லாவற்றையும் விட கலைக்கூடம் என்ற நிறுவனம்தான்' என்று பின்நவீனத்துவம் சொல்கிறது. மட்டுமன்றி, கார்ல் ஆந்த்ரேவின் செங்கல் அடுக்கு, ரொட்டினுடைய முத்தம் சிலைபோல உணர்ச்சியைத் தருவதாக இல்லையெனின், முன்னர் கலையின்பம் என நாம் கொண்டிருந்ததின் அளவுகோல்கள் தவறானவையெனவும் அது சொல்கிறது. சிந்தனையுலகம் சார்ந்த ஒரு குழுவாக பின்நவீனத்துவம் செயல்பட்டிருப்பினும், அது வலதுசாரித் தன்மையைவிட இடதுசாரித் தன்மை கொண்டதுதான் என்கிறார் கிறிஸ்தோபர் பட்லர் பின்நவீனத்துவம் குறித்துக் கூறுகையில்.

இவ்வாறான சிந்தனைமுறை தமிழுக்கு அறிமுகமானது சிறுபத்திரிகைகள் மூலமாகத்தான்.

இவ்வாறு பெருங்கதையாடல்களின் முடிவை முன்மொழிந்த பின்நவீனத்துவத்தின் தமிழுலக அறிதலுக்குப் பின்னர் எண்பதுகளில் தமிழிலக்கிய உலகில் நிகழ்ந்திருந்த மாற்றத்தை நாம் இவ்வாறு காணலாம். வணிக எழுத்துக்கும் யதார்த்தவகை எழுத்துக்கும் விலகி, கதையையும், கதை சொல்லும் முறையையும், அதற்கான புது மொழியையும் கண்டடைதல் நிகழ்ந்திருந்தது. தமிழவனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்', சாரு நிவேதிதாவின் 'எக்ஸிஸ்டென்சியலி சமும் பேன்சி பெனியனும்' போன்ற நாவல் களின் வருகை இதையே அறிவிக்கிறது. தொண்ணூறுகள் இன்னும் முக்கியமானவை. 'அத்திலாந்திக் மனிதனும் ஒரு கோப்பை தேநீரும்' தந்த எம்.ஜி.சுரேஸ், 'பாழி' நாவல் தந்த கோணங்கி ஆகியோரின் வருகை இன்னும் தமிழ் நாவலிலக்கியத்தின் பாதையைச் செப்பனிடுகிறது. சிறுகதைகள் மூலம் இதற்கான பங்களிப்பைச் செய்தவர்க ளாக பிரேம்-ரமேஷ் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

புதிய பார்வையில், பின்நவீனத் துவத்தினை ஒத்துக்கொள்ளாதவர்களாக இருந்தாலும், தமிழில் முக்கியமான நாவல் களைத் தந்தவர்களில் ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன் இருவரும் முக்கியமானவர்கள். இவர்களோடு சாரு நிவேதிதாவையும் சேர்த்துக்கொள்ள முடியும். யூமா வாசுகியின் 'ரத்த உறவு' முக்கியமான வருகை.

இக் காலகட்டத்தில் தமிழ் நாவல் இலக்கியத்தில் நிகழ்ந்த இன்னுமொரு அம்சம் பெருநாவல்களின் தோற்றம்.

ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம்', மற்றும் 'பின்தொடரும் நிழலின் குரல்' போன்றவையும், மூன்று பாகங்களாய் வெளிவந்த ஜோதிர்லதா கிரிஜாவின் 'மணிக் கொடி'யும், இரண்டு பாகங்களாய் வெளிவந்த சி.சு.செல்லப்பாவின் 'சுதந்திர தாகமும், தேவகாந்தனின் ஐந்து பாகங்களாய் சுமார் 1400 பக்கங்களில் வெளிவந்த 'கனவுச் சிறை'யும் குறிப்பிடப்படவேண்டியவை. பெரும் வாசகத் தளத்தின் ஆதர்ஷம் இருந்ததே இவற்றின் தோற்றப்பாட்டைச் சாத்தியமாக்கிய தெனினும் தமிழ் நாவலிலக்கியம் இன்னொரு மகா பாய்ச்சலை நடத்திக்காட்ட இந்தக் கட்டத்தில் முயற்சி செய்தது என்ற உண்மையையும் நாம் உணரவேண்டும்.

வணிக எழுத்து இக்காலகட்டத்தில் பெருவளர்ச்சி பெற்றிருந்தது. இதற்கான இருபெரு அடையாளங்கள் சுஜாதாவும், பாலகுமாரனும். இவர்கள் காலத்தைச் சேர்ந்த இந்துமதியும், வாஸந்தியும், சிவசங்கரியும்கூட இந்த பகுப்பினுள் வரக்கூடியவர்களே. சுஜாதா ஓரளவேனும் சிறுகதை மூலமாக தன் இலக்கியப் பங்களிப்பைச் செய்தார் என்கிறார்கள் சில விமசகர்கள்.

பெண்ணிய எழுத்தும், தலித் இலக்கியமும் இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதி இரண்டு தசாப்தங்களுக்கு உரியவையே.

வை.மு.கோதைநாயகி அம்மாளி லிருந்து லட்சுமி ஊடாக இந்துமதி ஆதியாய பெண் படைப்பாளிகள்வரை தமிழ் நாவல் வரலாற்றில் பெண் எழுத்து தொடர்ந்திருந் தாலும், பெண்ணிய எழுத்தாக நிமிர்ந்து வெளிவந்த எழுத்தென பாமாவினது 'கருக்கு' மற்றும் 'சங்கதி' ஆகியனவும், சிவகாமியின் 'ஆனந்தாயி'யும் கருதத்தக்கன.

ராஜம் கிருஷ்ணன் பெண் படைப் பாளியாக இருந்தபோதிலும், அவரது எழுத்துக்கள் பொது இலக்கிய வகைமையுள் வைத்துப் பார்க்கப்பட வேண்டியவையே. 'பாதையில் பதிந்த சுவடுகள்' அவரது முக்கியமான படைப்பு.

பிற மொழிகளிலிருந்தான மொழி பெயர்ப்புகள் மூலம் தமிழ் இலக்கியம் அடைந்த நன்மைகள் தனியாகப் பார்க்கப்பட வேண்டியவை. தமிழ் நாவலுக்கான அவற்றின் பங்களிப்பு இங்கே தனியாகப் பார்க்கப்பட இருக்கிறது. ஆயினும் தலித் இலக்கியம் என வருகையில் அவற்றினை மேம்போக்காகவேனும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

முக்கியமான படைப்புக்கள் மராத்தி யிலிருந்தும், கன்னடத்திலிருந்தும் மொழி பெயர்க்கப்பட்டன. லட்சுமண் மானேவின் 'உபாரா', லட்சுமண் கெய்க்வாட்டின் 'உச்சாலியா', கிஷோர் சாந்தாபாயின் 'குலாத்தி' ஆகியன மராத்தியிலிருந்து மொழிபெயர்க்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பட்டன. சித்தலிங்கையாவின் 'ஊரும் சேரியும்', அரவிந்த மாளகத்தியின் 'கவர்மென்ட் பிராமணன்', தேவனூரு மகாதேவாவின் 'பசித்தவர்கள்' ஆகியன கன்னடத்திலிருந்து மொழிபெயர்ப்பாகின. இவை தமிழ் தலித் இலக்கியத்துக்கான உந்துவிசையை அளித்தன. இமையத்தின் 'கோவேறு கழுதைகள்', தேவபாரதியின் 'பலி' ஆகியன தலித் இலக்கியமாகக் கருதப்பட்டபோதும், தலித்தியக்கத்திற்கு அனுசரணை செய்யாதவை என்ற குறை இருக்கிறது. மற்றும்படி குணசேகரனின் 'வடு', ராஜ் கௌதமனின் 'சிலுவைராஜ் சரித்திரம்' போன்றவை தலித்திய நாவல்களாக நின்று நிலைத்திருக்கின்றன.

9. இருபத்தோராம் நூற்றாண்டு மிக்க பிரகாசத்தோடு பிறந்தது எனல்வேண்டும். தனிமனித முயற்சிகளாக இலக்கியம் இக்காலகட்டத்தில் பரிணமித்தது என்றாலும் மிகையில்லை. தமிழவன், எஸ்.வி.ராஜதுரை, பிரேம்-ரமேஷ், அ.மார்க்ஸ், அறுபதுகளிலிருந்து இலக்கியக்களத்தில் நிற்கும் வெங்கட் சாமிநாதன் ஆகியோர் விமர்சன ரீதியாக தமிழ் நாவல் இலக்கியம் வளர தம் பங்களிப்பினைச் செய்தார்கள். இன்னும் அவர்களது பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ் இலக்கியத்தில் இருந்த பொதுப்படையான இரண்டு போக்குகள் இன்று பெரும்பாலும் வழக்கொழிந்து விட்டன என்றே சொல்லக் கிடக்கிறது. தலித்திலக்கியம், பெண்ணிய எழுத்து என்பன வெல்லாம்கூட ஒரு வசதிக்கான பகுப்பாகவே இருக்கின்றனவே தவிர, அவற்றின் தீவிரம் தனியே இலக்கியத் தீவிரமாக மாற்றமடைந்திருப்பதை நாம் கவனிக்க முடியும்.

இருபத்தோராம் நூற்றாண்டு மிக்க பிரகாசத்தோடு பிறந்தது எனல்வேண்டும். தனிமனித முயற்சிகளாக இலக்கியம் இக்காலகட்டத்தில் பரிணமித்தது என்றாலும் மிகையில்லை. தமிழவன், எஸ்.வி.ராஜதுரை, பிரேம்—ரமேஷ், அ.மார்க்ஸ், அறுபதுகளிலிருந்து இலக்கியக்களத்தில் நிற்கும் வெங்கட் சாமிநாதன் ஆகியோர் விமர்சன ரீதியாக தமிழ் நாவல் இலக்கியம் வளர தம் பங்களிப்பினைச் செய்தார்கள். இன்னும் அவர்களது பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மாற்றங்களுக்கான விசேட சமூகக் காரணங்களென்று எதுவும் இல்லா விட்டாலும், தொழிற்நுட்ப வளர்ச்சியின் காரணங்கள் முண்டு கொடுத்துக்கொண்டிருப் பதைக் குறிப்பிட வேண்டும்.

தமிழ் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சிக் காலகட்டத்தில் பத்திரிகைத் துறையின் வலுவான பிடி இருந்தமைபோல், இன்று பதிப்பகத்தின் ஆதிக்கம் அதன்மீது பதிந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. அது ஒருவகையில் வளர்ச்சிக்கான ஒரு பங்களிப்பையும் செய்கிறது என்பதும் உண்மையே. ஒரு படைப்பை நாவலா, குறுநாவலா எனத் தீர்மானிக்கிற அளவுக்கான அவற்றின் ஆதிபத்தியம் தீமையானது எனக் கொண்டாலும், நன்மையான பங்களிப்பைக் கருத்தில்கொண்டு அவற்றின் இருப்பை நாம் அங்கீகரித்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆகவேண்டியிருக்கிறது. தமிழினியும், உயிர்மையும், காலச்சுவடும் தரமான பல நாவல்களை வெளியிட்டிருப்பதை மறுக்க முடியாது.

இ-புத்தக வெளியீடுகள் மெதுமெது வாக வெகுத்து வருகின்றன. எழுத்துக்களைக் கோர்த்து அச்சடித்த ஆரம்ப கால முறையி லிருந்து இது அசாதாரணமான வளர்ச்சிதான். இதுவே பதிப்பகத்தின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்கான கருவியாகத் தொழிற் படவும் முடியும். எல்லாவற்றிற்கும் காலத்தின் பதில் முக்கியமானது. அதைக் காத்திருப் போம்.

இக்காலகட்டத்தில் வெளிவந்த நாவல்களில் குறிப்பாக எஸ்.ராமகிருஷ்ணனின் 'உபபாண்டவம்', மற்றும் 'யாமம்', பா.வெங்கடேசனின் 'தாண்டவராயன் கதை', சு.வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' ஆதியன முக்கியமான படைப்புக்கள்.

சென்ற தசாப்பதத்தில் வெளிவந்த நாவல்களைக் குறிப்பிட முடிவதுபோல், இந்த தசாப்தத்தில் வெளிவரும் நாவல்கள் பற்றி இனிமேலேதான் பகுத்துணர முடியும்.

வாழ்க்கை ஒவ்வொருவரின் நேரத்தை யும் தயவுதாட்சண்யமின்றி விழுங்கிக் கொண்டிருக்கிறது. எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர ஓய்வு, எட்டு மணி நேர தூக்கம் என்ற அம்சம் அறவே இல்லாது போய்விட்டது. இன்று ஒரு தொழிற்சாலைக் கூலியே தன்னை ஒரு தொழிலாளியாக மேற்குலகில் நினைத்துக் கொள்வதில்லை. அத்தனைக்கும் வாழ்முறை மாற்றம் பெருமளவு நிகழ்ந்துள்ளது. நாடுகள் இதை நினைக்கவும் அனுமதியாதிருக்கின்றன.

கனடாவில் மே தினம் மே முதலாம் திகதியில் கொண்டாடப்படுவதே இல்லை. தொழிலாளர் தினமாக அது இன்னொரு நாளில் நினைவுகூரப்படுகிறது. தொழிற்சங்க அமைப்புகளும் இங்கே அபூர்வம். இவ்வாறாக முதலாளித்துவம் சுரண்டலின்

முழு எல்லைவரை செல்வதற்கான சகலமும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இவை மனித ஓய்வுநேரத்தினை விழுங்கி விடுவதில்தான் குவிகிறது. மேற்குலகில் இந்நிலை அதீதமான வளர்ச்சி பெற்றிருப் பினும், உலகின் எல்லாப் பாகங்களிலும் பெரிதாகவோ சிறிதாகவோ இந்நிலையே நிலவுகின்றது. இது வாசகப்பரப்பின் அளவினை மெதுமெதுவாக சீர்ப்படுத்தி வருவது கண்கூடான நிகழ்வு.

புதினத்தில் நாவலே சிறுகதையின் முன்பு தோன்றியது. பத்திரிகைத் துறையின் தேவையை நிறைவேற்றப் பிறந்த பிறவியென வேடிக்கையாகச் சொல்லப்பட்டாலும் அதில் உண்மை இல்லாமலில்லை. சென்ற நூற் றாண்டின் இறுதித் தசாப்தத்தில் தோன்றிய மகாநாவல்கள் இன்று வழக்கிறந்துவிட்டன. இன்றைய மலையாள இலக்கியத்தில் 'மைக்ரோ நாவல்கள்' தான் பிரபலம். இரண்டு பாகங்களில், சுமார் 32 பக்கங்களில் அமைந்துவிடுகிறது இந்த நாவல். இதையும் நேரமின்மையின் உண்மையின் பின்னாலுள்ள வாசிப்புச் சாத்தியத்தை ஊடாடி நிற்கிறது என்பதே எமது அனுமானம்.

எது எப்படியிருப்பினும், தமிழ் நாவல் இலக்கியம் தரமான படைப்புக்களைக் கொண்டிருப்பதோடு இனி வரும் காலம் உலகத் தரத்துக்கான ஆக்கங்களை உருவாக்கும் என உளமார நம்புவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமூக வலைத்தளப்பக்கம்

இப்போது வரவே முடிவதில்லை

டாக்டர். உதயசீலன்

சமூக வலைத்தளப்பக்கம் இப்போது வரவேமுடியவில்லை. வன்மமும், காழ்ப்பு ணர்ச்சியும் எதிர்மறையான சிந்தனைகள், பிறரின் தனிப்பட்ட விடயங்கள், தவறான வதந்திகள் என அத்தனை அழுக்குகளும் ஒருங்கே குவிந்து நிறைந்து வழிகிறது! ஆனால் இதில் வேதனையும் வேடிக்கையுமான விடயம் என்ன தெரியுமா? மக்களில் பலர் இத்தகைய செய்திகளில் அதன் உண்மைத்தன்மை, ஆழம், பின்னணி, அது சமூகத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் என்பன பற்றி அறியாமல் அதனுள் மூழ்க அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு பல காரணங்கள் உள்ளன:

1. உளவியல் ரீதியான ஈர்ப்பு (Psychological Attraction to Negativity)-எதிர்மறை சார்பு (Negativity Bias):
மனிதர்கள் இயற்கையாகவே எதிர்மறை தகவல்களை அறிய அதிக ஆர்வம் காட்டுகின்றனர். - ஆர்வம் மற்றும் அவச் சொல். (Curiosity & Gossip):
மக்கள் இயற்கையாகவே எதிர் மறை யான விடயங்களில் ஆர்வமுள்ளவர்களாக இருப்பதால், தனிப்பட்ட விடயங்கள் அல்லது சர்ச்சைகள் அவர்களுக்குள் பரபரப்பை உருவாக்கும்.

2. சமூக ஊடகங்கள் மற்றும் அதி கவன ஈர்ப்புகள். (Social Media & Sensationalism) - படிமுறை சார்ந்த உள்ளடக்கம். (Algorithm-Driven Content):
சமூக ஊடகங்கள் எங்கு/எதில் மக்கள் அதிக ஈடுபாட்டை காண்பிக்கின்றனரோ, அதை முன்னிலைப்படுத்துகின்றன. சர்ச்சை மற்றும் எதிர்மறை செய்திகளுக்கு அதிகமான பின்னூட்டங்கள், பகிர்வுகள் கிடைக்கும் என்பதால், அவை அதிகள வில் பரவுகின்றன. - விரைவாக பரவும் வதந்திகள் (Fast-Spreading Rumors):
உண்மை தகவல்களை விட அதிர்ச்சி அளிக்கும் வதந்திகள் அதிக வேகமாக பரவுகின்றன. இது பெரும்பாலும் உணர்ச்சி தாக்கத்தால் நடக்கிறது.

3. வாழ்க்கையில்/பிரச்சினையில் இருந்து தப்பிக்கும் மனப்போக்கு. (Escapism & Distraction):
சிலர் எதிர்மறை செய்திகள் மற்றும் சர்ச்சைகள், அவச்செய்திகளை பார்ப் பதன் மூலம் தங்கள் சொந்த பிரச்சனை களை மறக்க முயல்கிறார்கள். பிறரின் தோல்விகள் அல்லது பிரச்சனைகளை காணும்போது, சிலர் தங்களின் வாழ்க்கை சிறப்பாக உள்ளது என்று நினைத்து மனதளவில் நிம்மதியடைகிறார்கள்.

4. ஊடக எழுத்தறிவு பற்றிய குறைபாடு. (Lack of Media Literacy):
மக்கள் பலர் தங்கள் முன்னே வரும் தகவல்களின் நம்பகத்தன்மையை சோதிக் காமல் அப்படியே நம்பி விடுகிறார்கள். அதிர்ச்சிகரமான தலைப்புகள் மற்றும் அரைகுறையான தகவல்கள் உண்மை யென்று நம்பப்படுகிறது.

5. கலாசாரம் மற்றும் சமூக பாதிப்பு. (Cultural & Social Influence):
சில சமூதாயங்களில், பிறரின் தோல்வி களை பேசுவது வழக்கமாகிவிட்டது. சுய முன்னேற்றத்தைக் கவனிப்பதற்குப் பதிலாக, மற்றவர் களை விமர்சிப்பது எளிதாக இருப்பதால் அனைவரும் சமூக ஊடக நீதிபதி ஆகிறார்கள்.

ஆக, இதை மாற்ற நாம் என்ன செய்யலாம்?

1. விமர்சனப் பார்வையை ஊக்குவிக்க வேண்டும் (Encouraging Critical Thinking):
ஒரு தகவலை நம்புவதற்கு முன்பு அதன் மூலத்தைக் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

2. நேர்மறையான உள்ளடக்கத்தை ஊக்கு விக்க வேண்டும் (Promoting Positive Content):
நல்ல கதைகள், சாதனைகள் மற்றும் ஊக்கமளிக்கும் செய்திகள் அதிகம் பகிரப்பட வேண்டும்.

3. இன்னொருவர் பற்றிய பழிச்சொல்லில்/ அவச்சொல் பேசுவதில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் (Avoid Engaging in Gossip):

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாம் வதந்திகளை பரப்புவதை நிறுத்தி னால், அவை தாக்கத்தை ஏற்படுத்தாமல் குறைந்து விடும்.

4. பொறுப்புள்ள ஊடகங்களை ஊக்குவிக்க வேண்டும். *(Media Responsibility)*: ஊடகங்கள் முக்கியமான செய்திகளை முன்னிலைப்படுத்தி, அநாவசியமான எதிர் மறையான அதி கவன ஈர்ப்பு செய்திகளை தவிர்க்க வேண்டும்.

5. மக்களின் ஆர்வத்தை நல்ல மற்றும் பயனுள்ள விவாதங்களுக்கு திருப்ப வேண்டும். மக்கள் எதிர்மறை செய்திகள், மற்றும் வதந்திகள், தனிப்பட்ட நபரின் விடயங்களில் அதிக ஆர்வம் கொள் ளாமல், நல்ல மற்றும் பயனுள்ள விடயங்களிலே ஈடுபடச் செய்ய சில கூடுதல் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

A. சமூக ஈடுபாட்டை (Community Engagement) அதிகரித்தல்.

- நேர்மறையான சமூக மாற்றங்களைப் பற்றிய கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.
- தவறான தகவல்கள் மற்றும் அவச்சொல் லுகளின் தாக்கத்தை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- தன்னார்வப் பணிகளில் மக்களை ஈடு படுத்துதல், இது அவர்களை பயனுள்ள செயல்களில் வைத்திருக்கும்.

B. பொறுப்புள்ள ஊடக நுகர்வை (Responsible Media Consumption) ஊக்குவித்தல்.

- உண்மைத்தன்மைச் சரிபார்ப்பு பழக்கத்தை வளர்க்க வேண்டும். மக்களுக்கு தகவல்களை பகிரும் முன்பு அவற்றைச் சரிபார்ப்பதை கற்பிக்க வேண்டும்.
- நல்ல ஊடகங்களை ஆதரிக்க வேண்டும். நம்பகமான செய்தி மூலங்களை பின் பற்றவும், பரப்பவும் செய்ய வேண்டும்.
- மீடியா பொறுப்புணர்வை *(Media Accountability)* வலியுறுத்த வேண்டும். தவறான தகவல்களை பரப்பும் ஊடகங் களுக்கு எதிராக நடவடிக்கை தேவை.

C. ஆரோக்கியமான உரையாடல்களை *(Healthy Conversations)* ஊக்குவித்தல்.

- அவச்சொல், சர்ச்சைகளை விட முன்னேற்றம் பற்றி பேசுங்கள். மக்கள் தேவையில்லாமல் அடுத்தவர் பற்றிக் கடுமையாக பேசுவதற்குப் பதிலாக, நல்ல யோசனைகள், கண்டு பிடிப்புகள், மற்றும் வெற்றிக்கதைகளை பகிருங்கள்.
- நேர்மறை கதைகளை ஊக்குவிக்க வேண்டும். வாழ்க்கையில் சாதித்து முன்னேறியவர்கள், தம் அனுபவங்களை, கடின சூழ்நிலைகளை எப்படி சமாளித் தார்கள் என்பதைக் கூறுவதை ஊக்கு விக்க வேண்டும்.
- சமூகக் கதையாடல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, மக்கள் தங்கள் வெற்றி கதைகளை பகிர ஊக்குவிக்க வேண்டும்.

D. சமூக ஊடகங்களை நல்ல நோக்கத்திற்கு பயன்படுத்தல் *(Use Social Media for Good)*

- கல்வி மற்றும் ஊக்கமளிக்கும் உள்ளடக் கங்களை உருவாக்கி பகிருதல்.
- நேர்மறை தகவல்களை (Positive Hashtags & Movements) முன்னெடுத்து பரப்புதல்.
- சமூக ஊடகங்களில் எதிர்மறையான கருத்துக்களை கனவான் தன்மையுடன் எதிர்த்துப் பேசுங்கள்.

E. இளைய தலைமுறையை (Youth & Schools) ஊக்குவித்தல்.

- பள்ளிகளில் ஊடக எழுத்தறிவை (Media Literacy) கற்பிக்க வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தவறான தகவல் (Misinformation) எவ்வாறு பரவுகிறது என்பதை விளக்க வேண்டும்.

- வழிகாட்டுதல் திட்டங்களை (Mentor ship Programs) ஏற்பாடு செய்ய வேண்டும். இது இளைய தலைமுறையை நேர்மறையாக வளர்க்க உதவும்.
- போட்டி நிகழ்ச்சிகள் (Creative Competitions) ஏற்பாடு செய்ய வேண்டும். கட்டுரைகள், உரைகள், சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்கள் போன்றவை.

F. குடும்ப மற்றும் பண்பாட்டு மதிப்புகளை (Family & Cultural Values) வலுப்படுத்துதல், மதித்தல்.

- குடும்ப உரையாடல்களை (Family Discussions) ஊக்குவிக்க வேண்டும், இது சிறுவயதிலிருந்தே நல்ல ஒழுக்கங்களை வளர்க்க உதவும்
- பண்பாட்டு மற்றும் நெறிப்படுத்தும் கதைகளை (Moral Storytelling) மறுபடியும் உயிர்ப்பிக்க வேண்டும், இதன் மூலம் மக்களுக்கு நேர்மை, கருணை, பொறுப்புணர்வு போன்றவை பயிற்றப்படலாம்.
- சமூகத்தினருக்கான உறவுமுறைகளை (Community Bonding) வலுப்படுத்தும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

G. சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளை (Legal & Ethical Measures) அதிகரித்தல்.

- தவறான தகவல்கள், வதந்திகள் மற்றும் அவச்சொல்லுக்களை எதிர்க்க உறுதியான சட்டங்களை (Stronger Laws) கொண்டு வர வேண்டும்.
- ஊடக ஒழுங்குமுறையை (Media Regulation) வலுப்படுத்த வேண்டும், இதில் பொறுப்பற்ற செய்திகளை பரப்புவதை கட்டுப்படுத்த வேண்டும்.
- சமூக பொறுப்புணர்வை (Civic Responsibility) ஊக்குவிக்க வேண்டும். நமது சமூகத்தை ஆரோக்கியமாக உருவாக்க நாம் அனைவரும் பங்கு பெற வேண்டும்.

****

மக்களின் விருப்பங்கள் மற்றும் பழக்கங்கள் ஒரு நாளில் மாறாது, ஆனால் தொடர்ந்த நேர்மறையான செயற்பாடுகள் அவர்களின் மனப்போக்கை மாற்ற உதவும். விழிப்புணர்வு, கல்வி, மற்றும் சமூக ஈடுபாடு போன்றவற்றில் அதிகம் கவனம் செலுத்தினால், எதிர்மறை தன்மைக்கு இடமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கவிப்பூவல்

துறையூர் குஹாயன்

ஈழத்துப் பூதந்தேவனாரிலிருந்து நமது இலக்கிய வரலாறு தொடங்குவதாக இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறுவார்கள். அதுவே ஈழத்துக் கவிதை வரலாற்றின் தொடக்கமும் ஆகும். பூதந்தேவனிலிருந்து அரசகேசரி ஊடாக ஐரோப்பியர் காலத்தில் சின்னத்தம்பிப் புலவர் வரை இலக்கிய வரலாறு மட்டுமன்றி கவிதைபற்றிய வரலாறும் இருண்டே கிடக்கிறது. சின்னத்தம்பிப் புலவர் காலத்திலிருந்து அச்சொட்டாகக் கவிதை வரலாற்றைக் கூறமுடியும். சின்னத்தம்பிப் புலவரின் கவிதை வீறும் அற்புதமானதுதான்.

எனினும் அதற்கு முன்னாலும் ஆற்றல் மிக்க இலக்கியங்கள் சில எழுந்துள் ளதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பூதந்தேவனின் சங்கப் பாடலிலிருந்து, அரசகேசரியின் 'இரகுவம்ச'த்துடன் பின்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோட்டுப் புராணம்', 'தால புராணம்', கனகி புராணம்' ஆகிய படைப்புகளினூடாக இன்றைய பா. அகிலன்வரையும் உள்ளோட்டமாய் ஒரு மரபின் தொடர்ச்சி ஓடியிருப்பதை நம்மால் அவதானிக்க முடிகிறது. இது ஈழத்துக் கவிதைக்கு மட்டுமில்லை, எந்த நாட்டுக் கவிதைக்கும் ஏற்பட்டிருக்கக் கூடிய உள்ளோட்டத் தொடர்புதான். ஆனால் துல்லியமாகவும், பெரும்பாலும் மாறாத் தன்மையுடனும் தமிழிலக்கியப் பரப்பில் இருப்பது வித்தியாசமானது.

ஈழத்தில் பெருங்காப்பியமெதுவும் தோன்றவில்லையென்பது ஒரு குறையாகச் சுட்டப்படலாம். சிறுகாப்பிய முயற்சிகூட இருக்கவில்லை. ஈழத்துக்கான காவிய முயற்சிகள் ஒரு தனி வழியில் இருந்திருக்கின்றன. அது பிற்காலத்திலேதான். ஈழத்தில் காவியமெதுவும் தோன்றாமலிருப்பதற்கான காரணம் முற்றுமுழுதாக அரசியல் நிலைமை சார்ந்தது. காவியம் தோன்றுவதற்கு கல்வி, பொருளாதார நிலைமைகள் சிறப்பாக வளர்ந்திருக்கவேண்டும். நாடு அமைதி நிறைந்ததாய் இருக்கவேண்டும். துர்ப்பாக்கிய வசமாக காவிய காலத்தில் ஈழம் அமைதி நிறைந்ததாயோ, பொருளாதார சுபீட்சம் பெற்றதாயோ இருக்கவில்லை.

ஈழத்தில் தோன்றிய பெரும்பாலானவையும் தனிநிலைச் செய்யுள்களே. இவை மரபு சார்ந்தே இருந்தன. பாரதியின் பெருமை மிக்க கவிதை நெறி தமிழுலகில் கவியும் வரை, இம் மரபே தொடர்ந்தது. தனிநிலைச் செய்யுள்கள் உணர்ச்சியை அடிநாதமாய்க் கொண்டெழுபவை என்பார்கள். ஏறக்குறைய உரைநடையில் சிறுகதைக்குள்ள இடம், பாடல்களில் தனிநிலைச் செய்யுளுக்கு உண்டு. இரண்டுமே உணர்பொருங்கு, சம்பவ ஒருமை, கள அமைதியென்று அனைத்தும் அச்சொட்டாய் அமையும் வடிவங்கள். இதனாலேயே இவை தன்னுணர்ச்சிப் பாடல்களென்றும் அழைக்கப்படுகின்றன. இவை தனிமை இரக்கம்போலவோ, சுய இரங்கலாகவோ இருக்கவில்லையென்றாலும், பெரிதான சமூக அக்கறை கொண்டிருந்தனவாகவும் சொல்லமுடியாது.

இக்காலகட்டத்துக்குரிய ஈழத்துக் கவிதைகளின் விசேஷ அம்சம், அவை கிராமியப் பாடல் மரபுக்கு எதிராய் எடுத்த எதிர்நிலையாகும். இந்த எதிர்நிலை எடுப்பு பொருளளவில் இல்லையென்பதுதான் இதிலுள்ள விசேஷ அம்சம்.

'உணர்வின் வல்லோருக்கே இலக்கிய வாக்கம் உரியதென்று கூறும் நன்னூல் சூத்திரம். படித்தவர்களுக்கான படைப்பு இது. பாமரர்களுக்கானதே வாய்மொழி இலக்கியம். இந்த இரண்டும் எதிரெதிர்த் திசையில் நின்றிருந்தாலும் ஒரு பொருளையே பேசின. அறத்தை, நியாயத்தை, இயற்கையை, வறுமையை, தனிமையை, ஏக்கத்தை, காதலையே இரண்டும் பேசின. ஆனால், தம் தம் மொழியில்.

தமிழகத்திலும் இவ்வாறான நிலையே இருந்திருப்பினும், இவ்வளவு ஆழமான பிரிகோட்டை அங்கே காண முடியாது. 'ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தின் பல்வேறு கட்டங்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்களது பங்களிப்பு கணிசமாக உள்ளது' என்பார் பேராசிரியர் கா.சிவத்தம்பி. எனினும் இது அதிகமாகவும் பிரபந்த காலத்திலேயே நிகழ்ந்தது என அவரே சொல்வார். நவீன தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில், இது அருகி அருகி வந்து, ஈழம் தன் கவிப் பண்பில் தனித்துவமான அடையாளங்களுடன் தற்போது விளங்குவதாகக் கொள்ளலாம். இந்த அம்சம்தான் வெவ்வேறு மொழிகளில் செவ்வியல் இலக்கியமும், வாய்மொழி இலக்கியமும் ஒரே பொருளைப் பேசியமை ஆகும்.

ஆறுமுக நாவலர், விபுலாநந்தர் போன்றோர்கூட பாடல் புனைந்திருக்கிறார்கள். இவற்றை கவிதைகளாக யாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்வதில்லை. ஆனால் கல்லடி வேலன் என்று மக்களால் அழைக்கப்பட்ட ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை இயற்றிய பாடல்கள், ஓர் ஈழக் கவிப் பண்பைப் புலப்படுத்துகின்றன. 'கண்டனம் கீறக் கல்லடியான்' என்பார்கள். அவ்வளவுக்கு பெரும் கண்டனகாரராய் இவர் இருந்தவர். சமூகப் பிரச்னைகளையே கவிதைப் பொருளாகக் கொண்டு ஆசுகவிகள் பாடியவர். இது ஒரு அம்சமாக இங்கு வளர்ந்து வந்திருக்கிறது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. 'கவிதையைத் தமது ஆளுமையையும் சிந்தனையையும் புலப்படுத்தும் புலமை வாதங்களுக்குத் தளமாகப் பயன்படுத்தும் பண்பு இலங்கையில் வளர்ந்துள்ள அளவுக்குத் தமிழகத்தில் வளரவில்லையென்பதையும் அவதானிக்கலாம்' என்ற பேராசிரியர் சிவத்தம்பியின் கருத்தை வைத்துப் பார்க்கிறபோது, ஈழத்துக்கேயுரிய கவிதை மரபாக இதைக் கொள்ளமுடியும்.

இங்கு நாம் பார்க்கப்போகிற காலகட்டம் பாரதி சகாப்தத்துக்குப் பிறகு வருகிறது. மரபுக் கவிதை நெறியில் நின்றுகொண்டு நவீனக் கருத்துக்களையும் புதிய களங்களையும் நோக்கி ஈழத்துக் கவிதை ஓடிய காலப் பகுதியாக இதைக் காணலாம். நவீன கவிதையின் செல்நெறி தீர்மானிக்கப்பட்ட காலமாக இதைக் கொள்ளவேண்டும். நாளைய ஈழத்துக் கவிதை எவ்வழியில், எவ்வாறு செல்லவேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு, முக்கியமான ஒரு சில கவிஞர்களின் மேல் சாய்ந்தது. அவர்களுள் முக்கியமானவர்கள் தான் மஹாகவியும், இ. முருகையனும்.

இக்காலகட்டத்துக்கு இன்னொரு வகையான விளக்கமும் அளிக்கலாம். பாரதியின் சகாப்தத்தைத் தொடர்ந்து ஈழத்தில் எழுந்தது, மறுமலர்ச்சி இயக்கமாகும். அ.ந.கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், மஹாகவி போன்றோர் இவ்வியக்கத்தின் முக்கிய கவிஞர்கள். மஹாகவியும், முருகையனும் ஒரே திசையில் பயணித்தார்களாயினும் வெவ்வேறு தடங்களிலேயே அது நடந்தது எனச் சொல்லவேண்டும். நடுத்தர மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலித்தவராய் மஹாகவி விளங்க, முருகையனோ முற்போக்கு இலக்கியத்தின் பிரதிநிதியாக விளங்கினார்.

> **ஈழத்துக்கான காவிய முயற்சிகள் ஒரு தனி வழியில் இருந்திருக்கின்றன. அது பிற்காலத்திலேதான். ஈழத்தில் காவியமெதுவும் தோன்றாமலிருப்பதற்கான காரணம் முற்றுமுழுதாக அரசியல் நிலைமை சார்ந்தது. காவியம் தோன்றுவதற்கு கல்வி, பொருளாதார நிலைமைகள் சிறப்பாக வளர்ந்திருக்கவேண்டும். நாடு அமைதி நிறைந்ததாய் இருக்கவேண்டும். துர்ப்பாக்கிய வசமாக காவிய காலத்தில் ஈழம் அமைதி நிறைந்ததாயோ, பொருளாதார சுபீட்சம் பெற்றதாயோ இருக்கவில்லை.**

யதார்த்தமென்பது முக்கியமாக புனைகதைக்கானதென்பார்கள் விமர்சகர்கள். அத்துறையிலேயே அது முக்கியமாய்த் தன்னைப் பயில்வுசெய்கிறது. அதைக் கவிதைத் துறைக்குக் கொண்டுவந்து வீச்சுப்பெற வைத்தவர்களாக இவ்விருவரையும் கூறமுடியும். பின்னால் இந்த யதார்த்த முறையில் பிறழ்வுகொண்டு இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கவிஞர்களுமே சிறிது விலகினார்கள். அப்போதும், அது ஈழத்து நவீன கவிதையின் அடித்தளத்தைப் பலமாக இட்ட முயற்சியா கவே கொள்ளப்படலாகும்.

அறுபதுகள் ஈழத்துக் கவிதை வரலாற் றில் குறிப்பிடத் தகுந்த காலகட்டமாகும். ஏனெனில் சாதியெதிர்ப்பு, சாதிக் கலவரங்கள் என்று வடக்கிலும், இனக் கலவரங்களென்று தெற்கிலும் நாடு கொந்தளிப்பாக இருந்த காலம். இதை ஈழத்துக் கவி மரபின் தொடர்ச்சியாகக் கொள்ள முடியும்.

இக்காலகட்டத்தில் சாதியெதிர்ப்பு சம்பந்தமாக வெளிவந்த கவிதைகளில் மிகவும் முக்கியமான கவிதைகளாக இரண்டு கவிதைகள் பேசப்பட்டன. ஒன்று, சுபத்திர னின் 'சங்கானைக்கென் வணக்கம்'. மற்றது, மஹாகவியின் 'தேரும் திங்களும்'. முதலில் இவ்விரு கவிதைகளையும் தனித்தனியே காண்பது மேலே சொல்லப்போகிற விஷயங் களின் விளக்கத்துக்கு உதவியாக இருக்கும்.

சங்கானைக்கு என் வணக்கம் - சுபத்திரன்

சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம் மங்காது,
யாழகத்து மண்ணிற் பலகாலம்
செங்குருதிக் கடல் குடித்துச் செழித்த
மதத்துக்குள் வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச் சங்காரம் செய்யத்
தழைத்தெழுந்து நிற்கின்ற
சங்கானைக்கென் வணக்கம்.
கோயிலெனும் கோட்டைக்குள் கொதிக்கும்
கொடுமைகளை நாயினும் மிக்க
நன்றிப்பெருக்கோடு வாயிலிலேநின்று
வாழ்த்தும்பெருஞ்சாதி.
நாய்கள் வாலை நறுக்கஎழுந்தாய்
சங்கையிலேநீயானை சங்கானை-அந்தச்
சங்கானைக்கென் வணக்கம்.
எச்சாமம் வந்து எதிரிஅழைத்தாலும்
நிச்சாமக்கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும்
குச்சுக் குடிலுக்குள் கொலுவிருக்கும்
கோபத்தை மெச்சுகிறேன் சங்கானை.
மண்ணுள் மலர்ந்த மற்றவியட்நாமே உன்
குச்சுக்குடிலுக்குள் குடியிருந்தகோபத்தை
மெச்சுகிறேன் மெச்சுகிறேன் எண்ணத்திற்
கோடி ஏற்றம்தருகின்றாய்
புண்ணுற்றநெஞ்சுக்குள்
புதுமைநுழைக்கின்றாய் கண்ணில்
எதிர்காலம் காட்டிநிலைக்கின்றாய்
உன்னைஎனக்கு உறவாக்கிவைத்தவனை
என்னென்பேன் ஐந்துபெருங்கண்டத்தும்
எழுந்துவரும் பூகம்பம்தந்தவனாம்
மாஓவின் சிந்தனையால் உன் நாமம்
செகமெலாம் ஒலிக்கட்டும் செங்கொடியின்
வீடே சிறுமைஎடுத்தெறியும்
சிங்கத்தின்நெஞ்செ செய்தேன்
உனக்கு வணக்கம்.

தேரும் திங்களும் - மஹாகவி

'ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும்போய்
பிடிப்போம்வடத்தை' என்று வந்தான்
ஒருவன். வயிற்றில்உலகத் தாய்
நொந்துசுமந்திங்கு நூற்றாண்டு
வாழ்வதற்காய்ப் பெற்ற மகனே அவனும்
பெருந்தோளும் கைகளும் கண்ணில்
ஒளியும் கவலையிடை உய்யவிழையும்
உலகமும் உடையவன்தான்
வந்தான் அவன் ஓர் இளைஞன்
மனிதன்தான் சிந்தனையாம்ஆற்றற்
சிறகுதைத்து வானத்தே முந்தநாள் ஏறி
முழுநிலவைத் தொட்டுவிட்டு மீண்டவனின்
தம்பி மிகுந்தஉழைப்பாளி.
'ஈண்டுநாம்யாரும் இசைந்தொன்றி
நின்றிடுதல் வேண்டும்' எனும் ஓர் இனிய
விருப்போடு வந்தான் குனிந்து வணங்கி
வடம்பிடிக்க. 'நில்' என்றான் ஓராள்
'நிறுத்து'என்றான் ஓராள் 'புல்'என்றான்
ஓராள் 'புலை'என்றான்இன்னோராள்
'கொல்'என்றான் ஓராள்
'கொளுத்து'என்றான் வேறோராள்.
கல்லொன்றுவீழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கழுத்தொன்றுவெட்டுண்டு
பல்லோடுஉதடுபறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்து நிலம் சிவந்து
மல்லொன்றுநேர்ந்து
மனிதர்கொலையுண்டார்.
ஊரெல்லாம் கூடி இழுக்க உகந்த தேர்
மேற்கொண்டதுபோல் வெடுக்கென்று
நின்றுவிட பாரெல்லாம்அன்று
படைத்தளித்த அன்னையோ
உட்கார்ந்திருந்திட்டாள் ஊமையாய்த்
தான்பெற்ற மக்களுடைய
மதத்தினைக் கண்டபடி.
முந்தநாள் வானமுழுநிலவைத்
தொட்டுவிட்டு வந்தவனின் சுற்றம் அதோ
மண்ணில் புரள்கிறது.

ஒருவகையில் முதல், கரு, உரிப் பொருள்கள் ஒத்துவரக் கூடியதாய் சங்கப் பாடல்களுக்கு நிகரான கவிதைகளை மஹாகவி பாடினார் என்று சொல்லப் படுவதுண்டு. இயற்கையையும் தனிமனித மனநிலைகளையும் விதந்து சொல்வன சங்கப்பாடல்கள். அப்படியான கவிஞர் சமூக அக்கறை கொண்டு பாடல் புனைவது முக்கியமாய்க் கவனிக்கப்பட வேண்டியது. 'மதத்தின் பெயரால் நிகழும் தீண்டாமைக் கொடுமையின் கட்புலக் காட்சியாக விரியும் இக் கவிதையின் ஊடாக சமூக முரண்பாடுகள் மீதான தனது வெறுப்புணர்வையும் அகன்ற மனித நேயத்தையும் புலப்படுத்தி விடுகிறார் மஹாகவி' என்கிறார் கலாநிதி நா. சுப்பிரமணியன், இப் பாடல் குறித்து. அது சரிதான்.

இது ஒருவகையில் கவிதையின் நிலைமாறும் காலமும்கூட. சமூகத்திலேற் படும் மாற்றங்கள், மொழியிலும் மாற்றங் களை வற்புறுத்துகின்றன. இவ்வகையில் யாப்பும் மாறுகிறது. வாழ்க்கையின் போக்குக் கும் யாப்புக்கும் தொடர்புண்டு. இன்னும் விளக்கமாகச் சொன்னால், இதுவரை செவிப்புலத்துக்கான உருவம் பெற்றிருந்த



கவிதை, இது முதற்கொண்டு கட்புலத்துக்கான புதுக்கவிதையின் உருவத்தைத் தாங்க பெரிதும் விழைகிறது.

இவை மஹாகவியினதும், முருகைய னதும் ஆற்றல் சான்ற கவி ஆக்கங்களால் ஈழத் தமிழ்க் கவிதை பெற்ற பெரும்பேறு. சண்முகம் சிவலிங்கம் மஹாகவிபற்றிச் சொன்னது சரியாகவே இருவருக்கும் பொருந்தும். அவர் சொன்னார்: 'பாரதி ஒரு யுகசக்தி என்பது மெய்யே. ஆனால் அந்த யுகசக்தி பிரிந்துவிட்டது. அதன் ஒரு கிளை பிச்சமூர்த்தி என்றால், அதன் மறுகிளை மஹாகவியே. பாரதி வளர்த்த சில கவிதைப் பண்புகளின் தோல்வியே பிச்சமூர்த்தி என்றால், அத் தோல்வி நிகழாமல் அதனை இன்னொரு கட்டத்துக்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி.'

இந்த முரண்களும், முரண்டுகளும், சமூக அக்கறையும்தான் ஈழத் தமிழ்க் கவிதையில் பூதந்தேவன் தொடக்கம் அரசகேசரி ஊடாக மஹாகவிவரை தொடரும் கவிப் பண்புகள், பாரம்பரியங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழத்தின் சமகாலக் கவிதைப் பரப்பு, மிக்க விசாலமானது. இதற்கு முந்திய காலகட்டத்தின் மேலோட்டமான பொருள் களை உறுதியாய் வாங்கி மேலெடுத்துச் சென்றது அது. தமிழுணர்வும், இனக் கொடுமைகளின் மேலான கோபமும் காட்டி யவை முந்திய காலகட்டத்தின் கவிதைப் பண்புகள். அதை அடுத்த கட்டத்துக்கு இக் காலகட்டத்துக் கவிஞர்கள் உயர்த்தினார்கள். மட்டுமில்லை. யுத்த ஆதரவு, வாழ்வு பற்றிய ஆதங்கம், பெண்விடுதலை, சமூக விடுதலை இவற்றின் வளர்ச்சியில் யுத்த எதிர்ப்பு, சமாதானத்தின் கூவல், மண் இச்சிப்பு போன்றனவும் வளர்ந்தன. இக் காலகட்டக் கவிஞர்களுள் குறிப்பிடக் கூடியவர்களில் முக்கியமானவர்கள்: சேரன், வ.ஐ.ச.ஜெய பாலன், சோலைக்கிளி, எம்.ஏ.நுஃமான், புதுவை இரத்தினதுரை, சி.சிவசேகரம், காசிஆனந்தன், சு.வில்வரத்தினம், பசுபதி, ஹம்சத்வனி, சுல்பிகா, மைத்ரேயி, செல்வி, சிவரமணி, ஒளவை, றஷ்மி, இளைய அப்துல்லா, கி.பி.அரவிந்தன், நட்சத்திரன் செவ்விந்தியன், பா.அகிலன். வாசுதேவன், ஜபார், மைக்கல் கொலின். இவர்களுள் சேரன், வஐச ஜெயபாலன், நுஃமான் ஆகியோர் மூத்த கவிஞர்கள். முந்திய கவிஞர்கள் சமைத்த பாதையில் அதன் பண்புகளைப் பதிவு செய்தவர்கள். இவர்களில் சிலரின் பண்பு நலங்களைத் தெரிந்துகொள்ளக் கூடியதான சில கவிதை அடிகளைப் பார்க்கலாம்:

துயர் சூழ்ந்து ரத்தம் சிந்திய
நிலங்களின் மீது நெல்விளைகிறது
சணல் பூக்கிறது மழை பெய்கிறது
(சேரன், மயானகாண்டம்)

மீண்டும் எனது மண்மிதித்தேன்
மீண்டுமென் பழைய சிறகுகள் விரித்தேன்
மீண்டும் எனக்குப் பழகிய காற்று மீண்டும்
எனக்குப் பழகிய ஆறு மீண்டும்
எனது இழந்த நிம்மதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(வஐச . ஜெயபாலன்,
ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்)

இன்று பனங்கூடல் சரசரப்பில்
பங்குனியின் உடல் தின்னும்
கொடுநெருப்பில் ஜீப்புகள்தடதடத்து உறுமி
சப்பாத்துகளின் பேரொலியில்
தமிழ்முதுகுகள் கிழிந்து மூர்ச்சையுற்ற
சேதி கேட்டு விம்மிஎழும் பேரலைகள்
என்மனமாய்
(ஹம்சத்வனி, புதுச்சேரி)

அந்த இரவின்தொடக்கம் போர்யுகத்தின்
ஆரம்பம் இரும்புப் பறவைகள் வானில்
பறக்க பதுங்கு குழிகளில் மனிதர் தவிக்க
தொடர்கிறது அந்த இரவு
(சுல்பிகா, போர் இரவுகளின் சாட்சிகள்)

வெள்ளைப் பறவைகள் எல்லாம்
மெல்லக் கொடுங்கூர்க்கழுகுகளாயின
(சி.சிவசேகரம், நதிக்கரை மூங்கில்கள்)

அநேகமாய் ஒவ்வொரு நாளும் துக்கம்
தீன்பொறுத்த கோழிமாதிரி
விக்கும் அளவுக்கு
(சோலைக்கிளி, இனி அவளுக்கு எழுதப்போவது)

முற்றத்துச் சூரியன் முற்றத்து நிலா
முற்றத்துக் காற்றென வீட்டு
முற்றங்களுக்கே உரித்தான
வாழ்வனுபவங்கள்
விடைபெற்றுக்கொண்டன
(சு.வில்வரத்தினம், வேற்றாகி நின்ற வெளி)

இவ்வாறு விரியும், சமகாலத்துக் கவிஞர்களின் போர் நிலத்து அனுபவங்களும், இனக்கொடுமையால் அடைந்த துன்பங் களும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை வெளியில் ஈழத்துக் கவிதைகளின் விசேஷங்களும் முதன்மையும் இவ்வாறுதான் தாபிதமானது. கனவுலகக் கவிதைகள் கடந்த காலத்தவையாகிவிட்டன. நிகழ்வின் ரத்தமும் சதையும்கொண்ட படைப்புக்களே இக் காலகட்டத்தில் அதிகமாகவும் எழுந்தன. மிக அதிக அளவான பெண்களும் இக்கால கட்டத்தில் எழுதப் புகுந்தனர். புதிய அனுபவங்களின் சேர்த்தி இதனால் நிகழ்ந்தது. 'சொல்லாத சேதிகள்' கவிதைத் தொகுப்பு, புகலிடப் பெண்களின் கவிதை வீச்சை ஓரளவு வெளிப்படுத்திய தொகுப் பாகும்.

யுத்த பூமியில் மரணங்கள் நிகழும். அது சாதாரணர், கலைஞர் என்று பேதம் பார்ப்பதில்லை. ஆனால் நிறைய கவிஞர் களின் கொலையும் தற்கொலைகளும் நிகழ்ந்த கொடுமைகள் ஈழத்தில் மட்டும்தான் சாத்தியம். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் சில படைப்பாளிகள் தம் மன அவசம் பொறுக்கமுடியாத நிலையில் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தளவு ஈழத்திலும் வாழ்நிலை நெருக்குதலுக்குள்ளாகி யிருக்கிறது. இது ஒருவகையில் உன்னதமான கவிதைகள் பிறக்கவும் வழி சமைத்தது ஒரு புறத்தில். அவை யுத்தத்தை வெறுத்தன. சமாதானத்தைக் கூவின. வாழ்வை இச்சித்தன. இருபதாம் நூற்றாண்டின் அந்தம் வரையான ஈழத்துக் கவிதையின் வளர்ச்சியும் போக்கும் இவ்வாறே இருந்தன.

அது சமூக அக்கறையோடு கலா மகிமை வேண்டியது. அதுவே அதன் கவி மரபாய், மரபுக் கவிதையூடாகவும் வந்து சேர்ந்தது.

இனப் படுகொலைகளின் ஓரம்சமாக யுத்தத்தை ஆதரித்த ஈழக் கவிதை, இனி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் குரல்கொடுக்கத் துவங்கியிருக்கிறது. இது ஒருவகையில் சர்வதேச கோஷம்தான். விடிவெள்ளிகள் தேடித் தவிப்போர் இன்னும் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அனாரின் கவிதைகள்

பதம்

தன்னிச்சையாக உறைந்த
பனிச் சிற்பங்களின்
உட்குரல் வடிவங்களுக்கு
சாயமிடுகிறாய்

ஏந்துகின்ற மெய்வடிவங்களின்
உள்ளேயும் வெளியேயும்
பொறிகள்

நிறத்தின் ஏழு பாலைகள் நீ

இப்போது ஏழு நிறம் சூழ்ந்த
உடல் நான்

அதிர்ந்து கொண்டிருக்கிறது
ஏழு நரம்புகள் கொண்ட
செங்கோட்டு யாழ்

நாதங்களுக்குள்
நழுவிச் செல்லும் குரல்
யாரும் ஊகிக்க முடியாத அருள்

பிடிவாதம் கனிந்து
பலிக்கின்ற தருணங்களில்
பொலிந்திடும் பொலிவு

முன்னிரவு ஏக்கத்தின் கொடை

மங்கலான நான்கு திசைகளிலும்
துயரின் தூய மென்னலைகள்
மறைவின் மீளாப் புனலாகினேன்
தடயங்கள் உதிர
நீங்காமல் சுழலும்
பித்தக் கசப்பாவேன்

நீங்குதல்

எறும்புகள் பகல் கனவுகளை
மொய்க்கின்றன
பின் இழுத்துச் மெல்கின்றன

தாரை தாரையாக
உருகிக் கரிக்கின்ற உப்புத்துளிகளை
காயங்களில் இருந்து குடைந்து
எடுத்துச் செல்கின்றன
மணல் புற்றுகளின் களஞ்சியங்களுக்கு

குருத்தெலும்புகளை அரித்துக் கொண்டிருந்த
வெறுமையின் உதிரத்தை மணந்து
ஒன்றுக்கொன்று கனவுக்குள்
சம்பாக்ஷித்துக் கொள்ளுகின்றன

தனக்குத்தானே தூபமிடும்
வசியமறிந்தவர்கள் அறிவார்கள்
காலத்தைத் தூவி விசுறும்
பகல் கனவுகள் ஏன் காணப்படுகின்றன

மணல் புயல்களின் கூறைகளை
மூடிக்கொண்டிருக்கும்
புற்றுகளின் சுரங்கங்கள்
இடம்பெயரக் கூடியது

புற்று மணல் நிறம் மாறி மாறி
கனவின் சாயலை உமிழ்கின்றது
சமிக்ஞைகள் வழங்கப்பட்ட
எறும்புகள்
புற்றிலிருந்து விரைகின்றன

மர்மங்கள் வெளியேறும்
மணிக்கட்டின்
அறுந்த நரம்பிலிருந்து
வழியும் குருதியில்
அந்தியின் சூரிய ஒளி பட்டு ஒளிர்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கொள்ளை

சூரியன் தீண்டிய செம்மலைகளின்
படிவங்கள் சிவக்கின்றன
கணத்தின் ஒவ்வொரு துடிப்பாலும்
மேகங்கள் தோற்றம் மாறுகின்றபடி

மிளிரச்செய்யும் தீக்கோழி உள்ளேகுதிக்கிறது

முகம் தடவி நகரும் குளிர்ந்த விரல்களால்
நீ மந்திரித்த முத்தம்
மின்னலென விழுந்து
பன்னிரெண்டு நீரூற்றுக்களாக
கிளை பிரிந்தோடினேன்

மாயத்தில் பறக்கிறது பைத்தியக் குளவி

தொட்டால் மறைந்துவிடும்
என் ஒற்றை மெழுகுக் கொம்பன் யானையின் முன்
கட்டுண்டு மன்றாடி.... நின்றவாறு
கணத்தினுள்ளே இரண்டாகினேன்

மஞ்சள் சங்குக்குள்
வளரும் கண்ணாடிக் காளான்
கண்களில் கிறங்கித் தாவிய
சூரியனைப் பிடித்து விழுங்கியது

சாயும்புல்லின் தாள்களில் ஊர்ந்தபடி
உள்க்கூடுகளை நகர்த்தும் பச்சைப்புழு

குட்டி வெண் புத்தரின் நாசிக்கு வரும்
வாசனையைத் திருடினேன்
பொன்மஞ்சள் குன்றின்மீது
சமைந்திருக்கிறது பேரமைதி

நிறைந்தும் வெற்றிடமாகியும்
அலையும் காற்றில் முதிர்ந்து
ஊதா நிறமாகியிருந்தேன்

உள் அமளியின் நடுக்கத்தில்
சூழ்விளக்குகள் நீர்த்திரையில்
ததும்பியொளிர்கின்றன

பொருந்துகிறதா
சிதைகிறதா
தொடுவானம்

மேலெழும்பும் பனிப்புகார்
முன்னகரும் புகைச்சுருள்கள்

குகைவழியாக வெளிப்பட்டு
மாயமெனக் கடந்துசெல்லும்
பழங்காலக் கரிக்கோச்சி

பல மைல்கள் தாண்டிவந்து
யாருமற்ற நிறுத்தத்தில் நிற்கிறது

அமைதியாகத் திரண்டுவரும்
அசாதாரணத்துயரேக்கம்

பொருட்படுத்தாமல்
திருப்பியனுப்பப்பட்ட அதிர்விரைச்சல்
என் காதருகே நெருங்கி
கேட்டுக்கொண்டிருக்கிறது

அனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலக்கியமாகிய இலக்கணம்

பேராசிரியர் செ. யோகராசா அவர்களைப் பற்றிய நினைவுக்குறிப்புக்கள்

வைத்தியர். இரா. முரளீஸ்வரன்

90களின் நடுப்பகுதி ஊரடங்குச்சட்டங்களும் ஹர்த்தால்களும் போட்டிபோட்டுக் கொண்டு மட்டக்களப்பு நகரை மௌனமாக்கிக் கொண்டிருந்த நாட்கள்.

என் சிறிய தந்தையார் எனக்கிருந்த கவிதை ஈடுபாட்டைக்கண்டு யோகராசா சேரிடம் ஒரு நாள் அறிமுகப்படுத்தியிருந்தார்.

அந்தக்கால ஊரடங்குச்சட்டம், ஹர்த்தால் தொடங்கி இந்தக்கால கொரோனா முடக்கம் கடந்து அவருடனான சந்திப்புக்கள், அழகான அமைதியான இலக்கிய நதியொன்றை என் மருத்துவ வாழ்க்கைக்கு சமாந்தரமாய் பயணிக்க வைத்தது.

அவருடனான சந்திப்பு, முடிந்தும் முடியாத அடுத்த தொடக்கத்திற்கு அத்திவாரம் போட்டுச் செல்லும். ஒரு கவிதையைப் போல தொடங்கி முடியும் அவருடனான உரையாடல்கள். சில உரையாடல்கள், அதற்கு முன்னைய சந்திப்பில் அவர் வாசிக்கத்தந்த நூல்களிலிருந்து தொடங்கும்.

சில உரையாடல்கள் அந்தக்கால கட்டத்தில் வெளிவந்த நூல்களிலிருந்து தொடங்கும். ஈழத்து இலக்கியத்தில் போரிலக்கிய எழுத்தாளர்கள், புலம்பெயர் இலக்கிய எழுத்தாளர்கள் தனித்தனியே அவரின் கவனிப்புக்குரியவர் என ஒவ்வொருவரின் சிறந்த எழுத்துக் களைப்பற்றியும் தற்கால படைப்புக்களின் செல்நெறி பற்றியும் அவர் ஆரம்பிப்பார்.

அவருடைய உரையாடல்களில் மஹாகவி உருத்திர மூர்த்தியும் கவிஞர் நீலாவணனும் கவிஞர் சண்முக சிவலிங்கனும் இடையிடையே கவிதைகளாய் வந்து போவார்கள்.

சேரனின் கவிதைகளும், நட்சத்திரன் செவ்விந்தியனின் கவிதைகளும் எதிர்பாராத விதமாய் சிலவேளை எட்டிப்பார்க்கும்.

சிறிது நேரம் கடந்து போகும் போது அவருடைய நூலக அறையிலிருந்து உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாடும் மேசைக்கு இலக்கிய நூல்கள் ஒவ்வொன்றாய் இடம்பெயரத் தொடங்கும்.

நவீன இலக்கியமும் சிறுவர் இலக்கியமும், பெண்கள் இலக்கியமுமாய் தொடரும் உரையாடல்களில் நான் பெற்றுக் கொண்டது ஏராளம். முச்சந்தி இலக்கியம் என்ற அவருடைய நூலை தருவதற்கு முன்னர் அதை வாசிப்பதற்கு என்னைத் தயார்படுத்திய போது விதை போட முதல் நிலத்தை பண்படுத்தி நீர் வழங்கும் நல்லதோர் விவசாயியின் திறமையை அவரில் கண்டேன்.

அவர் மதித்த அவருடைய ஆசான் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களை எவ்வாறு முன்னுரை எழுதுவதற்கான நெளிவுசுழிகளை பயன்படுத்தினார் என்பது தொடங்கி இன்னொரு ஆசான் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் முன்னுரை எழுதும் ஆற்றல் பற்றி கூறத்தொடங்கும் போது முன்னுரை பற்றிய ஒரு விழிப்பு எனக்குள் உருவாகும்.

அவருக்கு என்றும் பிடித்தமான பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களுடைய கலைப்படைப்புக்கள் அவருடைய ஒவ்வொரு உரையாடலிலும் இடம்பிடிக்கும்.

ஒவ்வொரு எழுத்தாளரையும் அவர் களது எழுத்தாக்க முயற்சிகள் பற்றி பின் தொடர்ந்து கவனித்து ஊக்குவிக்கும் சுபாவம் அவருடையது.

ஈழத்து தமிழ்கவிதையிலக்கியத்தில் கவிஞர்கள் மஹாகவி முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சிவசேகரம், வ. ஐ.ச.ஜெயபாலன், வாசுதேவன், சேரன், வில்வரத்தினம், சோலைக்கிளி, ஏற்படுத்திய கவிதைப்பரிமாணங்களைப் பற்றி மணிக் கணக்கில் உரையாடல்கள் நீளும். கவிஞர்கள் நட்சத்திரன் செவ்விந்தியன், ஓட்டமாவடி அறபாத், றஸ்மி, திருக்கோவில் கவியுவன், மண்டூர் தேசிகன் என அடுத்த வரிசை கவிஞர்களின் கவிதைகள் பற்றிய அறிமுகங் களாக கடிகார முட்கள் களைக்கும் வரை தொடரும்.

புலம்பெயர் இலக்கியத்தில் கி.பி. அரவிந்தனின் ஐரோப்பிய பயணங்கள் பற்றிய கவிதைகளும் இளைய அப்துல்லாவின் பத்தி எழுத்துக்களைப் பற்றியும் அவர் குறிப்பிடுவார். மு.பொ. வின் பொறியில் அகப்பட்ட தேசம் என்ற நெடுங்கவிதை பற்றி குறிப்பிடும் போது கவிதையின் நோக்கம் கவிதையின் வடிவத்தை தீர்மானிக் குமா? இல்லையா? என்ற கலந்துரையாடலாக மாறியிருக்கும்.

வி.மைக்கல் கொலின் எழுதிய "வரம்" என்ற சிறுகதையைப்பற்றி கூறும் போது அது தொன்மங்களை மீள்வாசிப்பு செய்த விதம் பற்றி, தேவகாந்தனின் "கதாகாலம்" என்ற நாவல் தொன்மங்களை இன்றைய அரசியலுடன் இணைத்த விதம் பற்றி சிலாகிப்பார்.

ஈழத்தின் பிரபல எழுத்தாளரான வ.அ.இராசரத்தினம் அவர்களின் படைப்புக் களையும் இன்னொரு பிரபல எழுத்தாளரான உமாவரதராஜன் அவர்களின் "அரசனின் வருகை" உட்பட்ட ஏனைய எழுத்துக்கள் பற்றியும் அவர் கூறும் போது கண்முன்னே வெவ்வேறு இலக்கிய உலகங்கள் சுழன்று கொண்டு போகும். ஈழத்தின் முதற்பெண் நாவலாசிரியரான மங்களநாயகம் தம்பையா தொடங்கி ஏனைய பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களைப்பற்றிய உரையாடல்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

கோகிலா மகேந்திரன், மண்டூர் அசோகா, உட்பட நீண்ட பட்டியலும் நூல் களுமாய் ஈழத்து தமிழ் வரலாற்றில் பெண்கள் பங்களிப்பு பற்றி கலந்துரையாட லோடு காலம் கடந்து செல்லும்.

பேராசிரியர். யோகராசா அவர்களின் வீட்டு முன் வாசலில் அவரும் நானும் கலந்துரையாடும் இலக்கியப் பொழுதுகளில் நான் எழுதியிருந்த கவிதையில் அவருக்கு உடன்பாடு இல்லையென்றாலோ அல்லது எனக்கு தெளிவு தேவை என்றாலோ அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரண்டு இலக்கியப்புத்தகங்கள் தருவார் அவற்றை வாசிக்கும் போது எது சரியான கருத்து என்பதை அவை எனக்கு குறிப்பால் உணர்த்தும். புத்தகங்களை அவரிடம் இருந்து வாங்கும் போது கோவில் பிரசாதத்தை வாங்குவது போல் பயபக்தியோடு வாங்குவேன். இலக்கிய புத்தகங்களை தந்து வாசிக்கவைத்து இலக்கியம் போதித்த போதி மரம் அவர்.

அவருடைய உலகத்தில் நூல்கள் உயர்திணை, அரசியல் கவிதைகள் எழுதி ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்த காலம் அது. 2000 ஆம் ஆண்டளவில் சுடரொளி வார மலரில் தொடராக வந்து முடிந்திருந்தது என் கவிதைத்தொடர். 52 பகுதிகளையும் தொகுத்து புத்தக வடிவில் வெளியிடலாம் என்று அவரிடம் சென்றேன். அவர் அதை வாசித்துவிட்டு சொல்வதாக சொன்னார். நாட்கள் வாரங்கள் கடந்து மாதங்களும் கடக்கத் தொடங்கின. இன்னும் அவர் வாசித்து முடித்தபாடில்லை. ஒருநாள் அவரின் தாமதத்தின் காரணம் என்னவென்பதை அவர் சொன்னார். நீங்கள் அரசியலில் இல்லை. உங்கள் கவிதைகளில் அரசியல் பற்றிய தகவல்களின் உண்மைத்தன்மையும் ஈரமும் குறைவாக இருக்கிறது. நீங்கள் பணிபுரியும் மருத்துவ உலகத்தை பற்றி அதனுடைய தன்மைகளை மற்றும் குறை நிறைகளை எழுத முயற்சிக்கலாமே என்று புதிய பாதையைக்காட்டினார். அவர் பாதை யில் திரும்பிய என் கவிதை அதன்பிறகு மருத்துவ உலகத்திற்குள் புகுந்தது.

2020 இல் முதல்நூல் மருத்துவமனை யைப் பற்றி கூறும் கவிதைகளாக வெளி வந்தது. அவர் பார்த்து பக்கம் பக்கமாக திருத்தி ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கேட்டு முதல்நூல் வெளிவர முழுமுதல் காரணமாக அமைந்திருந்தார்.

அவருடைய முன்னுரை எனது முதல் நூலுக்கு கிடைத்தது பெரும் பாக்கியமாக அமைந்துவிட்டிருந்தது. ஒரு துறை சார்ந்த நூலை வாசித்து அந்தத்துறை சம்மந்தப்பட்ட அத்தனை இலக்கியங்களையும் ஒப்பிட்டு குறித்த நூலுக்கு முன்னுரை தருவது அவர் வழக்கம். அப்படி என்னுடைய முதல் நூலுக்கும் அவர் அத்தனை மருத்துவத்துறை சார்ந்த இலக்கியங்களையும் பட்டியலிட்டு விபரித்துப் போகையில் தோன்றிய பிரமிப்பு எழுத்தில் வடிக்கவியலாதது.

அவருடைய இறுதிநாட்களில் அவருடனான கடைசிச்சந்திப்பு வைத்தியசாலை ஒன்றில் மாலைநேரத்தில் நிகழ்ந்தது.

புன்முறுவலுடன் அந்த வைத்திய விடுதியின் வசதிகள் பற்றி அமைதியான சூழல் பற்றி ரசித்து பாராட்டிப் பேசிக்கொண்டி ருந்தார். வைத்திய விடுதியில் நூல்கள் ஒவ்வொன்றையும் வாசிக்கவில்லையா என்றேன். இங்கேயுள்ள சூழ்நிலை சுவாரசிய மாக இருப்பதால் அதை நூல்களைப்போல வாசித்து கவனித்துக்கொண்டிருக்கிறேன் என்றார். பிறகு இலக்கியம் பற்றி உரையாடல் திசை திரும்பியது. எந்த நிலையிலும் நோய் பற்றியோ மரணம் பற்றியோ பெரிதாய் அலட்டிக்கொள்ளாத அவரின் இலக்கிய வாழ்வின் சுபாவமது.

எல்லோரும் முன்னுரை கேட்டு வருவதைப்போல அவரிடம் தன்நூலுக்கு முன்னுரை எழுத இறப்பு அழைத்துக் கொண்டது.

நாள்தோறும் புத்தகங்களாலும் கற்பித்தலாலும் நிரப்பப்பட்டது அவரின் வாழ்க்கை. நீண்ட ஓய்வெடுக்கட்டும் என்று எண்ணி அதனை அமைதியால் நிரப்பியது மரணம்.

தமிழறிஞருக்கு இலக்கணமாய் இருந்தவரின் இலக்கிய வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்தது காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நகர்ந்துகொண்டுசெல்லும் சாலைகளில்...

விஜயதாஸ் நாகேந்திரன்

"அங்க விசி அ(ட்)ட" என கதவு நிலையிலிருந்து அவன் கூவ, ஒருவன் இருக்கையிலிருந்து எழுந்து உள்ளே செல்லவும், வெற்றிடமான அவ்இருக்கையில் நான் வந்தமரவும் நேரம் சரியாக இருந்தது. சுவரில் கைபேசியின் மேல் புள்ளடியிடப் பட்ட பதாதையைக் கண்டவுடன் விரல்களால் கைபேசியை அணைத்து பத்திரப்படுத்திக் கொண்டேன். மெல்லியஒலியில் பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. பிரத்தியேக மாக கேட்ட போதுதான் அது சிங்களப்பாடல் என உறுதிசெய்ய முடிந்தது.

முன்னலுவலகத்தில் கணனியை இயக்கிக்கொண்டிருந்த முதலாவது பெண்ணிடம் எனது நேர்முகத்தேர்வுக்கான கடிதத்தை கொடுக்க பெயரினைப் பார்த்தவள் ஒரு முறை என் முகத்தை நிமிர்ந்து பார்த்து "தமில்" என்றாள். ஓணான் தலையை ஆட்டுவது போல் ஆட்டினேன். சிங்களத்தில் ஏதோ சொன்னாள். நான் ஓர் உணர்ச்சியை யும் முகத்தில் வெளிக்காட்டவில்லை. என்ன கூறினாள் என்றும் விளங்க வில்லை. நான் முளித்தேன்.

"சிங்கள தன்னே நத்த"

இந்தக் கேள்வியை நான் பல முறை எதிர்கொண்டிருக்கிறேன். இக் கேள்வி அடிக்கடி என்னைச் சுற்றிக்கொண்டே வரும். என்னை மட்டுமல்ல. ஊரில் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பின் போது, பிரயாணத் தின் போது ஏறி இறங்கும் ஒவ்வொரு காவல் அரணகளில். இதுமட்டு மல்லாது இன்று கொழும் புக்கு வந்திறங்கி ஐந்தாவது தடவையாகவும்.

"ஐடென்டிக்காட்" அழுத்திச் சொன்னாள். பர்சினுள்ளிருந்து எடுத்துக்கொடுத்தேன்.

"கோ பொடோ கொப்பி" மெல்லிய சினேகபூர்வமான சிரிப்பொன்றை சிரமப்பட்டு உதிர்த்தேன். அவளுக்கு அந்தச் சிரிப்பு புரிந்திருக்கவேண்டுமென்று நினைக் கிறேன். தேசிய அடையாள அட்டையை நேர்முகத் தேர்வுக்கு வந்த கடிதத் துடன் சரிபார்த்து அதனை போட்டோ பிரதி எடுத்தாள். கல்வித் தகமை சான்றிதழ்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிறப்பத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகிய வற்றின் நகல் பிரதிகளை எடுத்து ஒன்றாக இணைத்து மூலப்பிரதிகளை வேறாக என்னிடம் தந்து. அருகிலிருப்பவளிடம் செல்லுமாறு கையைக் காட்டினாள். அவள் எனது பெயரினையும், அடையாள அட்டை இலக்கத்தையும் பதிவு செய்து விட்டு டோக்கன் இலக்கம் ஒன்றினை தந்து காத்திருப்பு பகுதியிலுள்ள இருக்கையில் அமரச் சொல்லி கையை நீட்ட கதவு நிலையிலிருந்த அவன் "அங்க விசி அ(ட்)ட" எனக் கூவினான்.

கொழும்பு எனக்கு ஒன்றும் புதிதல்ல. தனியே நான் மட்டும் பயணித்து வந்தது புதிது. அதுவும் ரயிலில். புகைப்படங்களிலும், தொலைக்காட்சிப்பெட்டியிலும்தான் ரயிலைப் பார்த்து பிரமித்திருக்கிறேன். பள்ளிக் காலங்களில் Train க்கும் Rain க்கும் வித்தியாசம் தெரியாமல் ஆங்கில ஆசிரியர் நாகப்பன் மாஸ்டர் நீலக் காற்சட்டையை இழுத்துப் பிடித்து பிரப்பம்பிரம்பால் தரமாக அடித்தது நல்ல ஞாபகம். சிறுவயதில் திரையில் பார்த்த ஏதோ ஒரு தமிழ்ப்படத்தில் செவிப் பறை அதிரும் சத்தத்தோடு ரயில் வரும் அண்மைக்காட்சியை பார்த்து பயந்து கண்களை மூடி அம்மாவின் கைகளை இறுக்கிப் பிடித்திருக்கிறேன். 1989ம் ஆண்டு மார்ச் சகோதரர்கள் முதன் முதலில் கமராவில் ரயிலின் வருகையைப் பதிவு செய்து திரையிட்டபோது திரையரங்கினுள்ளே ரயில் வந்துவிட்டதெனப் பயந்து திரையரங்கினை விட்டே மக்கள் ஓடினார்களாம். பிறகு கேள்விப்பட்டது.

வெற்றுத் தீப்பெட்டிகளை ஒன்றன் பின் ஒன்றாகப்புகுத்தி ஓடவிட்டிருக்கிறேன். வெற்றுப்பசை பெட்டிகளை ஒன்றன் பின் ஒன்றாக கோர்வையாக்கி நூலில் கட்டி இழுத்து திரிந்திருக்கிறேன். ஒருவர் பின்னால் ஒருவர் தோள்களைப்பற்றிக்கொண்டு வாயினால் சிக்குபுக்கு... சிக்குபுக்கு... வென சத்தமிட்டுக்கொண்டு வீடு, காடு, குளமென எல்லாத்திசைகளிலும் ஓடித்திரிந்திருக்கிறேன். நான் செய்து ஓட்டிப்பார்த்த புகைவண்டியை நேரில் கண்டு அதன் பிரமாண்டத்தில் ஒரு கணம் மலைத்துத்தான் போயிருந்தேன்.

மட்டக்களப்பு, கொழும்பு புகையிரத சேவைகள் நாட்டில் இடம்பெற்ற உள் நாட்டுப்போரினால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் 2003.04.12ம் திகதி சேவைகள் ஆரம்பித்தன. ஆனால் மட்டு நகரிலிருந்து தெற்கே 26 கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் எனது ஊருக்கு தண்டவாளங்கள் இன்னும் வரவில்லை. வெள்ளைக்காரன் மட்டக்களப்பு நகரோடு நிறுத்திவிட்டான். அதற்கப்பால் இனியும் தண்டவாளங்கள் நகருமென்பது சாத்தியமற்றதொன்றென நினைக்கிறேன்.

அப்பா கொழும்பில் அரச திணைக்களமொன்றில் பணிபுரிந்ததால் சிறுவயதில் நானும் அம்மாவும் அத்தொண்ணூறு காலப் பகுதிகளில் கொழும்புக்கு பயணப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்தன. பஸ்ஸில்தான் பயணமே. நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலமை காரணமாக நாட்டின் பல பாகங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. வடகிழக்கிலிருந்து கொழும்புக்கு செல்லும் பேரூந்துகள் விசேட ஆராய்ச்சிக்குட்பட்டுக்கொண்டிருந்த காலமது. ஓடிக்கொண்டிருக்கும் பஸ் இடையே நிறுத்தப்படுகின்றது என்றால் அங்கே ஒரு சோதனைசாவடி வந்துவிட்டதென்று அர்த்தம். தயவு தாட்சண்யமின்றி வலுக்கட்டாயமாக எல்லோரையும் இறக்குவார்கள். அரிதாக சில சோதனைச் சாவடிகளில் கர்பிணிகள் குழந்தைகள் இறங்கத்தேவையில்லை. கிட்டத்தட்ட பதினைந்து சோதனைச்சாவடிகளில் ஒவ்வொரு முறை ஏறி இறங்கி கொழும்பைச் சென்றடையவேண்டியிருக்கும். பெரும்பாலும் அம்மா சோதனைச்சாவடிகளில் இறங்கமாட்டார். என்னை அவரது மடியில் உறங்கும்படி கூறுவார். தான் எழுப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போதுதான் கண்விழிக்கவேண்டுமென்றும் கட்டளையிடுவார். பஸ்ஸிற்குள் சோதனை செய்யவரும் ஆமிக்காரன் ஏன் இறங்க வில்லை என கண்டிப்பான குரலில் கேட்டு அதட்டுவான். அம்மா அவருக்குத் தெரிந்த சிங்களத்தில் "புத்தா நிதி" எனக் கூறுவார். பாதுகாப்பிற்காக அப்பா சொல்லிக்கொடுத்த சின்னச்சின்ன சிங்களச் சொற்களை அம்மா வெள்ளோட்டமிடுவது இந்த பஸ் பயணங் களில்தான். நான் ஓரக்கண்ணால் நடக்கும் நாடகத்தை விழித்துப்பார்த்துக்கொண்டு அம்மா சிங்களம் பேசும் விதத்தை பார்த்து உள்ளூர சிரித்துக்கொண்டிருப்பேன். அப்பா வின் இடமாற்றத்தோடு இப்படி பயணப் படுவது முற்றாக நின்றுபோனது.

மீண்டும் அப்பிடி ஒரு சந்தர்ப்பம் க.பொ.த.சாதாரண தரம் படிக்கும் போது அமையும் என நான் நினைக்கவில்லை. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக எங்கள் பாடசாலையில் பல வருடங்களாக சுற்றுலா எதுவும் செல்லவில்லை. எங்கள் மூத்த மாணவர்களும் சுற்றுலா செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொண்டு தோல்வியடைந் திருந்தார்கள். நாங்கள் எங்கள் வகுப்பு மாணவர்கள் சகலரிடமும் கலந்துபேசி அனைவரினது கையொப்பங்களுடனும், சமூகக்கல்வி ஆசிரியர் உதவியுடனும் அதிபருக்கு மனுக்கொடுத்தோம். முதலில் மறுப்பு தெரிவித்தவர். பின் நாங்கள் அடிக்கடி கொடுத்த தொந்தரவினால் ஆலோசித்து சொல்வதாகக் கூறினார். இரண்டு மாதங் களின் பின்னர் பாடசாலை ஒன்றுகூடலில் சுற்றுலா செல்வதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகவும், உரிய இடங்களில் அனுமதி பெற்றுவிட்டதாகவும், ஏப்ரல் பாடசாலை விடுமுறை காலத்தில் சுற்றுலா செல்லமுடியும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அதிபர் எங்களுக்குத் தெரிவித்தார். வில்லுப் பாட்டுப் போட்டியில் தேசிய மட்டத்தில் பத்தாம் வகுப்பு மாணவர்கள் தெரிவாகியிருந்த

> **மட்டக்களப்பு, கொழும்பு புகையிரத சேவைகள் நாட்டில் இடம்பெற்ற உள் நாட்டுப்போரினால் இடைநிறுத்தப்பட்டிருந் தன. மீண்டும் 2003.04.12ம் திகதி சேவைகள் ஆரம்பித்தன. ஆனால் மட்டு நகரிலிருந்து தெற்கே 26 கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் எனது ஊருக்கு தண்டவாளங்கள் இன்னும் வரவில்லை. வெள்ளைக்காரன் மட்டக்களப்பு நகரோடு நிறுத்திவிட்டான். அதற்கப்பால் இனியும் தண்டவாளங்கள் நகருமென்பது சாத்தியமற்றதொன்றென நினைக்கிறேன்.**

மையினால் அவர்களையும் அழைத்துக் கொண்டு செல்வதற்காக சுற்றுலா அட்ட வணையில் கொழும்பும் இடம்பிடித்திருந்தது.

அப்போதுதான் இறுதியாகப் பார்த்தது. வானுயர்ந்த கட்டடங்கள். இரைச்சல் சத்தம், சம்மாளம் போட்டுக்கொண்டு இருக்கும் புத்தர் சிலைகள், ஒசரி அணிந்த அழகழகான சிங்களப்பெண்கள், எல்லாம் சாரளம் வழியாக பார்த்து ரசித்தது. கோல்ட் பேசில் நாங்கள் போட்ட பைலா, நடனம், குடைக்குள் மறைந்திருக்கும் காதல் ஜோடிகளை எட்டிப் பார்த்தது. வெள்ளைக்காரிகளுடன் எடுத்த புகைப்படம். இப்போதும் நல்ல ஞாபக மிருக்கிறது.

அடித்துப்பிடித்துக்கொண்டு மூன்றாம் வகுப்பில் ஒரு ஆசனத்தில் இருந்தாயிற்று. பயணப் பைகளை மேலே வைத்துக் கொண்டிருக்கும் ஒருவன், வழியனுப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வந்தவர்கள் ஒருபுறம், ஹெட் செட் போட்டுக்கொண்டு பாட்டுக்கேட்கும் ஒருத்தி, கீறிட்டுக் கத்தும் குழந்தையை நெஞ்சோடு அணைத்து பால் போத்தலை வாய்க்குள் வைக்கும் ஒரு அம்மா, மூலையில் விட்டு விட்டு ஒளிரும் மின்குமிழ், திடீர் திடீர் என காற்றை தெளிக்கும் சின்ன மின் விசிறிகள், அடிக்கடி தனது கடமையை கச்சிதமாக நிறைவேற்றும் நுளம்புகளுடன் புகையிரதத்தின் அந்தக் கம்பாட்மென்ட் சுழன்றுகொண்டிருந்தது.

ஜன்னலை இரு கைகளாலும் தூக்கி மேலே கொழுவினேன். ஏறாவூர், வாழைச்சேன, புனானை, வெலிகந்த..." ஆகிய மேடைகளில் ரயில் தரித்து நிற்கும் என அறிவிப்பு ஒலித்துக்கொண்டிருந்தது. அறிவிப்புச் செய்பவரின் தாய்மொழி நிச்சயமாக தமிழ் இல்லையென்பது திண்ணம். தமிழ் தடம்புரண்டு சென்றுகொண்டிருக்க பெரிய அதிர்வோடு புகையிரதம் புறப்படலானது. புனானையிலிருந்து சிங்களம் மெல்ல இருள் காற்றில் கலந்து பரவிக்கொண்டிருந்தது. புகையிரதம் இருட்டைக் கிழித்துக்கொண்டு சென்றது. அடிக்கடி மேலே அண்ணாந்து பார்த்து உடமைகளை உறுதிசெய்து கொண்டேன். மாகோ சந்தியில் ஒரு முட்டை ரொட்டியும், பால்கோப்பியும் குடித்தவேளை நேரம் அதிகாலை 1.45ஐக் காட்டியது. புகையிரத சத்தமும், குலுக்கமும் தூக்கத்தை விரட்டி விரட்டிக் கெடுத்தது. கோட்டே புகையிரத நிலையம் என்னை வரவேற்றது. காலை 10 மணிக்கு நுகேகொடையில் நேர்முகத்தேர்வுக்கு செல்லுமிடத்திற்கு சமுகமளிக்க வேண்டும். காலைக்கடன்களை முடித்து தயாராக அங்கே லொட்ஜில் அறை ஒன்றை எடுத்தேன். லொட்ஜின் அருகில் கருவாட்டு மொத்த வியாபார நிலையம் இருந்ததால் எந்நேரமும் கருவாட்டு வாசனை அந்த லொட்ஜ் முழுவதும் பரவியிருந்தது. அறைக்குள் நுழைந்து மின்விசிறியின் ஆளியை போட குளிர்காய்ச்சல் வந்தவனைப்போல் நடுநடுங்கி 'கீறிச் கிறிச்' என்ற சத்தத்துடன் மேலே சுத்தியது. தலையணையும், கட்டில் மெத்தையும் பழுப்பேறிப்போயிருந்தன. கொண்டுவந்த சாரனை அதன்மேல் போட்டு விட்டு சிறிது நேரம் தூங்கினேன். 'கீறிச் கிறிச்...' தூக்கத்திலும் ரயில் என்னை தாலாட்டிக்கொண்டிருந்தது.

தாடி மீசையை முழுவதுமாக மழித்திருந்தேன். முழு நீள கையுடைய வெள்ளை நிற சேட்டும், கறுப்பு நிற நீளக்காற் சட்டையும் அணிந்து பக்கத்து வீட்டு அண்ணாவிடம் வாங்கிய சிவப்பு நிறத்தில் வெள்ளை நிற கோடுகளுள்ள கழுத்துப் பட்டியை அணிந்து கொண்டு தலைக்கு ஜெல் பூசி கலைத்து விட்டிருந்தேன். எக் காரணத்திற்கொன்றும் எனது தமிழ் அடையாளத்தை வெளிக்காட்டிக்கொள்ளக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்.

கருவாட்டு லொஜ்ஜிலிருந்து ஏழு மணிகே வெளியேறிவிட்டேன். கொழும்பு நகரம் ஓய்வின்றி இயங்கிக்கொண்டிருந்தது. வாகன நெரிசல், ஹோரன் சத்தங்கள், இரைச்சல்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வேலைக்குச் செல்பவர்கள், என்னைப்போல் தொழில் தேடி வந்தவர்கள், தள்ளுவண்டிக் காரர்கள், நடைபாதை வியாபாரிகள், பஸ்ஸைப் பிடிக்க ஓடும் மக்கள் தத்தம் செயற்பாடுகளில் பரபரத்து இயங்கிக்கொண்டிருந்தார்கள். வீதியில் செல்பவர்களை இடித்தால் கூட அதனைப் பொருட்படுத்தாமல் சென்றுகொண்டேயிருந்தார்கள். சைவச் சாப்பட்டுக்கடையொன்றில் தோசையை சாம்பாருடன், உழுந்து வடையை அரைத்த சம்பலோடும் தொட்டு சாப்பிட்டு முடித்து பயணப்படத்தயாரானேன்.

கொழும்பை கரைத்துக் குடித்த என் நண்பன் சொன்னது போல பெட்டாவிலிருந்து 138ம் இலக்க பஸ்ஸில் ஏறி, நடத்துனரிடம் "நுகேகொட" என்றேன். அவன் சிங்களத்தில் ஏதோ கூறி கையை வெளியே காட்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனக்கு அது விளங்கவில்லை. மீண்டும் "நுகேகொட" என்றேன். "சிங்கள தன்னத்த" என்று கூறி பஸ்ஸை விட்டு இறங்குமாறு திரும்பவும் சைகை செய்தான். பஸ்ஸிலிருந்த அனைவரும் என்னையே பார்த்தனர். என் நெற்றியிலிருந்து சிந்திய வியர்வை துளிகள் கையிலுள்ள நீல நெகிழிக்கோப்பில் பட்டு தெறித்தன.

"தமிழா"

முன்னால் நெற்றி காய்ச்சியிருந்த, தொப்பி அணிந்திருந்த முதியவர் என்னை திரும்பி பார்த்து கேட்டார். நான் மெதுவாக தலையசைத்தேன். அவர் பஸ்ஸிலிருந்து இறங்கி பாதையின் மறுபுறம் சென்று புகையிரத நிலையப்பக்கம் வரும் 138ம் இலக்க பஸ்ஸில் ஏறும்படி கூறினார்.

பாதை மாறி ஓடிச் சென்று புகையிரத நிலையப்பக்கம் புறப்பட தயாராகிக் கொண்டிருந்த 138ம் இலக்க பஸ்ஸில் ஏறினேன். அருகிலிருந்தவனிடம் நுகேகொடை எனக் கூறி நேராக கையைக் காட்டினேன். அவன் தலையை ஆட்டினான். கொஞ்சம் தெம்பு வந்தது. பஸ் நடத்துநரிடம் தயங்கிய படியே, ஏதும் ஏசிவிட்டுவிடுவானோ என்ற பயத்தில் "நுகேகொட" என்று ஐநூறு ரூபாய் பணத்தை நீட்ட "மாறு சல்லி" என்றான். சல்லி என்றால் காசுதான் என எனக்கு நன்றாக விளங்கியது. இல்லை எனக் சைகை காட்டினேன். ஏதோ சிங்களத்தில் ஏசிவிட்டு டிக்கட்டின் பின்புறம் மிகுதிப் பணத்தை எழுதித்தந்தான். நுகேகொட வலமும் தெரியாது இடமும் தெரியாது. நடத்துநர் கொடுக்கவேண்டிய மிகுதிப்பணத்தை எப்படியோ வாங்கவேண்டும், அத்தோடு நேர்முகத்தேர்வுக்கு எப்படி முகங்கொள்ளவது என்ற சிந்தனை அனைத்தும் என்னை ஆக்கிரமித்திருந்தது. ஒருவித பதட்டத்தோடு பயணித்தேன். அப்போது பஸ் வெள்ளை மாளிகைபோலிருந்த நகர மண்டபம் தாண்டி சென்றுகொண்டிருந்தது.

என்னதானிருந்தாலும் வீதியோரங் களில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் இருந்த கடைகளின் பெயர்ப்பலகைகளிலுள்ள ஊர்களின் பெயர்களை அவதானித்துக் கொண்டிருக்கவும் மறக்கவில்லை. அத்துடன் அடிக்கடி பஸ் நடத்துநரிடம் எனது டிக்கெட் டின் பின்புறத்தை காட்டத் தவறவும் இல்லை. அவன் முறைத்துக்கொண்டு மாற்றிய பணம் இல்லை என சைகையால் கூறி என்னை பொருட்படுத்தாமல் சென்றான். சிங்கள எழுத்துக்களில் கீழே சிறிதாக ஆங்கிலத் திலிருந்த நுகேகொடை என காணப்பட்ட பெயர்ப்பலகையைக் கண்டதும் உடனடியாக பதறிப்போய் எழுந்து விரைந்து பெல் அடித்தேன். நான்கைந்து தரம் அடித்தேன். பஸ் நடத்துநன் எனக்கு சரமாரியாக ஏசினான்.

"உனக்கு அறிவில்லையா? என்னத்துக்கு நாலஞ்சுதரம் மணி அடிக்கிறா? அடுத்த ஸ்டப்புல நிக்கும்தானே. முட்டாள்." இப்படித்தான் அல்லது இன்னும் மோசமாகத் தான் அவன் ஏசியிருப்பான் என்று நினைக்கிறேன். பேருந்து தரிப்பு நிலையத்தில் பஸ் வேகத்தைக் குறைக்க ஓட்டத்தில் இறங்கினேன். அப்போதுதான் ஞாபகம் வந்தது மிச்சக்காசு. திரும்பிப்பார்ப்பதற்குள் பஸ் சென்றுவிட்டது. நேர்முகத்தேர்வுக்கு செல்லவும் நேரமாகிவிட்டது. கோயில் உண்டியலில் காசை போட்டதாக நினைத்துக் கொண்டு அருகிலுள்ள முச்சக்கரவண்டிக் காரனிடம் செல்லவேண்டிய முகவரியை கூற உள்ளே ஏறும்படி கூறினான். என்னிடம் முகவரியை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டான். பெருநகரத்தின் பிரதான வீதிகளில் வண்டிச் சக்கரங்கள் சுழன்றன. இடையே நிறுத்தி வீதியில் நின்ற ஒருவனிடம் "எல்.டீ.ரூபசிங்க மாவத்த", நான் கூறிய முகவரியை விசாரித்தான். அவனும் ஏதோ சொல்ல சந்து, பொந்து, வளைவுகளில் முச்சக்கரவண்டி நுழைந்து சென்றுகொண் டிருந்தது. சாரதிக்கு குறித்த இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒழுங்காகத் தெரியவில்லையா அல்லது என்னை வைத்து சுற்றி அலைக்கழிக்கிறானா? எனது அவசர நிலையை விளக்க அவனுக்கு என் மொழி புரியாது எனத் தெரிந்தும் "கெதியா போங்க அண்ணன்" என்றேன்.

"சிங்கள தன்னத்த" சலிப்புடன் கூறினான். எங்கெங்கோ முச்சக்கரவண்டி வளைந்து சென்றுகொண்டிருந்தது. சிறிது பயம் எனக்கு மெல்லப்படர்ந்தது.

வீதியில் புத்தர் சிலை அருகே ஒருவன் நிற்க முச்சக்கரவண்டியினை நிறுத்தி அம்முகவரியினை மீண்டும் விசாரித்தான். அவனும் ஏதோ சொன்னான். இடையிடையே அவர்கள் மொழிக்குள் புகுதித்திய ஆங்கிலச் சொற்களால் அவர்கள் பேசுவது மாத்திரம் எனக்கு விளங்கியது. அங்கே எனக்கு தெரிந்தவர் போல் ஒருவர். விட்டுவிட்டு ஒளிரும் வர்ண மின்குமிழ்கள் நடுவே இருந்த புத்தர் சிலைக்கு கீழே அமைதியாக ஒன்றுமே தெரியாதவர் போல் இருந்தார். அவரைக் காண கொஞ்சம் பயம் குறைந்தது. தொந்தி வற்றி, முகம் ஒடுங்கி, துதிக்கை நீண்டு, நீறு கூட இல்லாமல் முழுமையாக சிங்களவராகவே மாறி இருந்தார். அவரிட மாவது முகவரியை விசாரிக்கலாமென எண்ணினேன். அவரும் என்னை பார்த்து "சிங்கள தன்னத்த" என்று கேட்டுவிட்டால்... மீண்டும் வந்த வழி நோக்கியே முச்சக்கர வண்டி திரும்பி பிரதான பாதையை அடைந்து ஒரு மேம்பாலத்திற்கு மேலால் ஏறி கீழுள்ள பாதையால் சென்றுகொண் டிருந்தது. நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது. நேரமும் சென்று கொண்டிருந்தது. மடிக்கப் பட்டிருந்த நேர்முகத் தேர்வுக் கடிதத்தினை விரித்தேன். 2010.10.13ம் திகதி மு.ப.9.00 மணிக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். எனது கைக்கடிகாரத்தின் சிறிய முள் பத்தினை மிகவும் நெருங்கிக்கொண்டிருக்க பெரிய முள் ஒன்பதைக் கடந்து சென்று கொண்டிருந்தது. முச்சக்கர வண்டியிலிருந்து பாய்ந்து விடலாமா என நினைத்தேன். அவனுக்கு எனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் ஏசினேன். அவன் என்னை அதட்டினான். வீதியின் ஓரத்தில் முச்சக்கரவண்டியினை நிறுத்தி இறங்கச் சொன்னான். நான் இறங்க மறுக்க இறங்கி வந்து என்னை வெளியே எறிந்தான். பயணம் செய்ததற்குரிய பணத்தினை கேட்டான். நான் கொடுக்க மறுக்க என்னை அதட்டினான். சேட்டினை பிடித்து அடிக்க வர, அந்தச் சந்தர்ப்பத்தி லிருந்து சுதாகரிப்பதற்காக பர்சை எடுக்க அவன் அதனைப்பறித்து அதிலிருந்த பணங்களை எடுத்துவிட்டு பர்சை முகத்தில் எறிந்து, கன்னத்தில் அறைந்து கால்களால் என்னை வீதியோரத்தில் உதைத்துத் தள்ளிவிட்டு புறப்பட்டான். இவையெல்லாம் இமைக்கும் இடைவெளிக்குள் நடந்து முடிந்தது. அப்படியே வீதியோரத்தில் படுத்த படுக்கை யாகவே கிடந்தேன். அவ்வீதியில் என்னை தூக்கிவிட யாரும் இருக்கவில்லை. எட்டி பர்சினை எடுத்து பார்த்தேன். உள்ளேயிருந்து எனது அடையாள அட்டைப் புகைப்படம் என்னைப்பார்த்து முறைத்துக் கொண்டே யிருந்தது.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கையில் பணமே இல்லை. நிர்கதியாகி நின்றேன். மின்னல் நகர் மத்தியில் ஊர்ந்து செல்லும் கசக்கிய எறும்பானேன். மனித பாதத் தடங்களும், சுழலும் வாகனச் சில்லுகளும் என் மேல் ஏறிச்சென்றன. பத்து மணிச் சூரியன் என்னை சுள்ளென்று சுட்டெரித்தது. நகர மறுத்த என் கால்கள் புழுதியுற்ற என் உடலை சாலைகளில் மெதுவாக நகர்த்திக்கொண்டிருந்தன. ஒரு இளநீர் கடை ஓரமுள்ள வாங்கில் அமர்ந்து செய்வதறியாது தலையில் கைவைத்து யோசித்துக்கொண்டிருந்தேன். கண்களில் சுரந்த நீர் கருவிழியை மறைத்தது. என் தோள் மேல் மென்மையான கை ஒன்று தழுவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"புத்தே" அந்த வார்த்தை இளகியிருந்த நெஞ்சை கரைத்தது.

நான் அவரைப் பார்த்தேன். அருகில் முகத்தில் சுருக்கங்கள் நிறைந்த, எழுபது வயது மதிக்கத்தக்க வயோதிப அம்மா நின்றிருந்தார். சிங்களத்தில் ஏதோ கதைத்தார். கண்களிலிருந்து உடைந்த கண்ணீர் கன்னத்தில் எட்டு மாதக்குழந்தைபோல் தவழ்ந்தொழுகியது.

கடைக்கார அம்மா என்னை அழைத்தார். சிங்களத்தில் ஏதோ கதைத்தார். அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த எனக்கு நா தழுதழுத்தது. உணர்ச்சிகளுக்கு நடுவில் வார்த்தைகள் ஓசையறுந்தன. கையில் நீல நிறக் கோப்புடனும், கலங்கியிருந்த என்னையும் கண்ட அவருக்கு என் நிலமை புரிந்திருக்கவேண்டும். கடையில் நின்ற அவரது கணவனிடம் ஏதோ கூறினார். வெண் பனி படர்ந்த தலையுடைய வயோதிகர் இளநீர் ஒன்றை வெட்டிக்கொண்டுவந்து கொடுத்தார். கையில் பணம் இல்லை என்று கையை விரித்தேன். அவர் வேண்டாமென தலையை அசைத்து, அவர் கைகளால் என் தலையை கோதி இளநீரை என் கைகளில் வைத்தார். நான் குலைந்து விம்மி அழுதேன்.

என்னென்னவோ என்னுடன் கதைத்தார்கள், ஏதேதோ கூறினார்கள். அவர்கள் உதிர்த்த சொற்கள் எனக்கு இதத்தை தந்தன. அச்சொற்களில் அன்பைத்தவிர வேறொன்றும் இருக்கவில்லை. அப்போதுதான் இந்த நல்ல மனிதர்களது அன்பை, வார்த்தைகளை விளங்கிக் கொள்ள இம்மொழியை அறியாததை எண்ணி வருந்தினேன். இளநீரைக்குடித்தேன். பிசுபிசுப்பாய் இருந்த என் வாய்க்கும், கனத்திருந்த என் உடலுக்கும் புது தெம்பைத் தந்தது. முகத்தினை கழுவுமாறு தண்ணீர் போத்தலினை தந்தார் அந்த சிங்கள அம்மா. எனது கோப்பினை பார்த்துவிட்டு என்னிடம் பேசினார். அவர் என்னிடம் என்ன பேசினார் என்பது அவரின் உடல் மொழியில் தெரிந்தது.

"அவர்கள் உதிர்த்த சொற்கள் எனக்கு இதத்தை தந்தன. அச்சொற்களில் அன்பைத்தவிர வேறொன்றும் இருக்கவில்லை. அப்போதுதான் இந்த நல்ல மனிதர்களது அன்பை, வார்த்தைகளை விளங்கிக் கொள்ள இம்மொழியை அறியாததை எண்ணி வருந்தினேன்."

"நான் அவர் கையைப் பற்றிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதேன். முச்சக்கரவண்டி புறப்பட்டது. கள்ளங்க படமற்ற புன்னகையை அள்ளித் தந்த தம்பதியினர் எனக்கு கை அசைத்து விடை கொடுத்தார்ள்."

அவரது சுருங்கிய கண்களும் மொழியின் ஏற்ற இறக்கங்களும் என்னை ஆசுவாசப் படுத்தின. என் பொக்கட்டிலிருந்த முகவரி எழுதிய துண்டினை கொடுக்க, அதனை அவர் கணவரிடம் கொடுத்தார்.

அருகில் நின்ற ஒரு முச்சக்கர வண்டி சாரதியை அவர் அழைத்தார். மீண்டும் எனக்கு பயம் தொற்றிக்கொண்டது. சாரதி அவருக்கு தெரிந்தவர் போல. அவன் புன்னகை எனக்குளொரு நம்பிக்கையைத் தந்தது. அவனிடம் முகவரியைக் கொடுத்து என்னை வண்டியினுள் ஏறுமாறு பணித்தார். ஏறும் போது என் கையைப்பிடித்து சிறிது பணத்தை திணித்தார். நான் வேண்டாமென்று கையை உதற, இறுகப்பிடித்து என் கையை பொத்தினார். அருகிலிருந்த அவரது மனைவி கண்களால் அப்பணத்தை வைத்திருக்குமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறினார். நான் அவர் கையைப் பற்றிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதேன். முச்சக்கரவண்டி புறப்பட்டது. கள்ளங்க படமற்ற புன்னகையை அள்ளித் தந்த தம்பதியினர் எனக்கு கை அசைத்து விடை கொடுத்தார்கள். நான் பாதையின் வளைவால் திரும்பும் வரை நன்றியுடன் கையசைத்துக் கொண்டு பார்த்துக்கொண்டே இருந்தேன் இரு நல்லுள்ளங்களை.

நேர்முகத்தேர்வுக்கு வரவேண்டிய நிறுவனத்தின் வாயிலில் முச்சக்கரவண்டியை நிறுத்தினான். நான் என்னிடமிருந்த பணத்தினைக் கொடுக்க என் கையை தடுத்து வேண்டாம் என்றான். கை குலுக்கி வாழ்த்து தெரிவித்து உள்ளே செல்லுமாறு கையைக் காட்டினான். என்னிடம் அப்பணத்தைத் தவிர அவனுக்கு இப்போதைக்கு கொடுக்கக் கூடியது நன்றியையும் என் அன்பையும் மட்டுமே. ஆட்டோ புறப்பட்டது.

காத்திருப்புப் பகுதியில் என்னோடு சேர்த்து மொத்தம் எட்டுப் பேர் இருந்தார்கள். எதிரிலிருந்தவன் நேர்முகத் தேர்வுக்கு வந்திருக்கிறோம் என்ற பதட்டமே இல்லாமல் இழையோடொலித்த சிங்களப் பாடலுக்கு சப்பாத்துக் காலால் தாளம் தட்டிக்கொண்டிருந்தான். அதனருகி லிருந்தவன் நடுவால் முடியை வகிடிட்டு இரு பக்கமும் முடியை வாரியிருந்தான். அவனது தலை குளக்கட்டிற்குச் செல்லும் வாய்க்கால் போலிருந்தது. அடிக்கடி தலைமுடியை சிலிப்பிக்கொண்டிருந்தான். பிறவுன் சப்பாத்திற்கேற்றவாறு இடுப்புப்பட்டி யையும் அதே நிறத்தில் அணிந்திருந்தான்.

அவனுக்கு அருகில் வெள்ளை மேலங்கி, இறுகிய ஸ்கர்ட் அணிந்த பெண் கால் மேல் கால் போட்டுக்கொண்டு இருந்தாள். சிவப்பு உதட்டுச்சாயம் பூசியிருந் தாள். அவளது மேலங்கியின் மேல் பொத்தான் திறந்திருந்தது. அவள் நீள்வட்ட முகத்திற்கு வட்டக் கண்ணாடி கச்சிதமாக பொருந்தியிருந்தது. கன்னத்தில் வழுக்கிக் கொண்டு செல்லலாம் போல இருந்தது. சிங்களப் பெண்களின் அழகே தனிதான். நான் கவனித்ததை பார்த்த அவள் எனை முறைத்தாள். பார்வையை நான் கீழ்நோக்கி தாழ்த்திக்கொண்டேன்.

ஸ்டூலிலிருந்த சிங்கள சஞ்சிகையை எடுத்து ஒவ்வொரு படமாக புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தேன். எனது அருகில் இருந்தவனின் டோக்கன் இலக்கத்தை எட்டிப் பார்த்தேன். 31. அவனது தலைமுடி கறுப்பும் பொன்னிறமும் கலந்திருந்தது. கதவருகே ஒவ்வொரு இலக்கமாக அழைத்துக் கொண்டிருக்க நானும் இலக்கத்தை எண்ணிக்கொண்டிருந்தேன். ஒவ்வொருவராக வெளியே வருவதும், உள்ளே செல்வதுமாக இருந்தார்கள். எனக்கு அருகிலிருந்த நீல சேட்காரனின் முறை அவன் எழும்பிச் செல்ல அவ்விடத்திற்கு நான் நகர்ந்தேன். நான் இருந்த இருக்கையில் ஒரு நீளக்காற்சட்டை அணிந்த உயர்ந்த பெண் ஒருத்தி வந்தமர்ந் தாள். என்னை சூழ்ந்திருந்தவர்களிடம் தமிழனென்று என்னை அடையாளம் கண்டுபிடிக்காதவாறு முகத்தை இறுக்கமாக வைத்திருந்ததோடு சிங்கள சஞ்சிகையை ஆழ்ந்து படிப்பவன்போல பாவனை செய்து கொண்டிருந்தேன். ஒவ்வொருவராக எழுந்து கொண்டு உள்ளே செல்லச்செல்ல அவதா னித்துக்கொண்டிருந்தேன். என் முறை வர சிங்களத்தில் அழைப்பதற்கு முன் எழும்ப, அவன் இலக்கத்தை அழைத்துக்கொண்டி ருந்தான்.

உள்ளே மூன்று பேர் இருந்தார்கள். நடுவிலிருந்தவருக்கு தலையில் வழுக்கை விழுந்திருந்தது. அவர்தான் பணிப்பாளர் என்று நினைக்கிறேன். குட்மோர்னிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்றேன். அவர் கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு "குட் ஆவ்டர்நூன்" என்றார். அருகி லிருந்த இளம் பெண் சிரித்தாள். அவரது பிரத்தியேக செயலாளர் என்று நினைக்கிறேன்.

"சொறி, குட் ஆவ்டர்நூன் சேர்"

ஆவணங்களை அவரது செயலாளரிடம் கொடுத்தேன். சரி பார்த்துவிட்டு பணிப்பாளரி டம் கொடுத்தார். அதனைப் பார்த்தவர் என்னிடம் கேட்ட முக்கியமான கேள்விகள் மூன்று.

1. *Are you Tamil?*
2. *Can you speak Sinhala?*
3. *Why didn't you learn Sinhala?*

என்னைச் செல்லுமாறும், மின்னஞ் சலில் பதிலை அனுப்புவதாகவும் கூறினார். முன்னலுவலகத்தில் பேருந்து தரிப்பிடத் திற்குச் செல்லும் வழியைக் கேட்டு வெளியே றினேன். நேராக நடந்து இடப்புறம் திரும்பி னேன். புகையிரதம் செல்வதைப்போல் பாதை வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்தது. தூரத்தே பிறவுன் நிற இடுப்புப்பட்டி, சப்பாத்து அணிந்தவன் எனக்கு முன்னே சென்றுகொண்டிருந்தான். அவனும் பஸ் தரிப்பு நிலையத்திற்கு செல்ல வேண்டும் என நினைத்து கைத்தொலை பேசியை ஒன் செய்து கொண்டு வேகவேகமாக அவனைப் பின்தொடர்ந்தேன். எனது காலடிகளின் ஓசை கேட்டு என்னை திரும்பி பார்த்துவிட்டு நடந்தான். ஏதோ எல்லாம் தெரிந்தவன்போல மெல்ல அவனைப் பின்தொடர்ந்து சென்று பேருந்து நிலையத்தை அடைந்தேன்.

பேருந்து நிலையத்தில் வெள்ளை மேலங்கி, இறுகிய ஸ்கர்ட் அணிந்த அந்தப் பெண் நின்றுகொண்டிருந்தாள். அவளுக்கு சற்று அருகில் சென்ற அவன் நின்றான். நான் அவனுக்கு பின்னால் நின்றுகொண்டி ருந்தேன். அவளது ஸ்ரோபரி உதட்டை சூரியன் தின்றுகொண்டிருந்தான். நாங்கள் இருவரும் நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தோம். எனது கைபேசி ஒலித்தது. கொழும்பை கரைத்துக் குடித்த நண்பன்தான் அழைத்தான்.

"ஹலோ சொல்லுடா மச்சான்"

உடனே அவன் வாய்க்கால் தலையை திரும்பி என்னைப் பார்த்தான். நான் அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். என் நண்பன் கதைத்துக்கொண்டேயிருந்தான். எதுவுமே எனக்கு விளங்கவில்லை. "மச்சான் பிறகு கோள் எடுக்கிறன்" என்று அழைப்பை துண்டித்தேன்.

"தமிழா?" என்றான்.

"நீங்களும் தமிழா?"

"நான் உங்கள..."

எங்கையோ கேட்ட மெட்டு பிரபல தமிழ் பாடல் மெட்டு "வசீகரா என் நெஞ்சினிக்க...." அவளது கைபேசியிலிருந்து ஒலித்தது. ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டேயிருந்த நாங்கள் இருவரும் ஆச்சரியத்துடன் திரும்பி, எங்கள் காதுகளை அவளருகில் நீட்டினோம்.

"ஹலோ அம்மா. நான் பஸ் ஸ்டொப்பில நிக்கிறன். ம்....இன்னும் கொஞ்ச நேரத்தால வந்திருவன்" கைபேசியை அணைத்தபடி அவள் எங்களைப் பார்த்தாள். நாங்களும் அவளைப் பார்த்துக்கொண்டே யிருந்தோம்.

வார்த்தைகளுக்கு முன் புன்னகையே கொட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தென்னம்படல் மறைப்பு

ஒரு குறுக்கு வெட்டுமுகம் அனாரின் பார்வையில்

ஒரு சாதாரண மனிதன் எப்படி கலைஞன் ஆகிறான்? எப்படி படைப்புக்களை பிரசவிக்கிறான்? கலைகளில் வெளிப் பாடுகளை செய்கின்ற அறிவியல் எப்படி பொதுவான உள்ள ஓட்டங்களில் நின்றும் மாறுபடுகிறது? அவை எப்படிக் கலை வடிவமாக வெளிப்படுகின்றன?

கலை வெளிப்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் பின்னணியில் கண்ணுக்குப் புலப்படாத ஆழப்பதிந்த நினைவுகளின் வேர்களும், புலன்களில் பட்டுத் தெறித்து வெளியேறி விடாத தரவுகளின் ஆழமான பகுப்பாய்வும், உள்வாங்கலும், அழகியல் உணர்வும் வாய்க்கப்பெற்ற பேறுள்ளவர்கள் வாயிலாக தேர்ந்த படைப்புக்கள் வெளிப்படுகின்றன. அப்படைப்புக் களை கருக்கொண்டு பரிமாணம் வரித்து கலை செய்கின்றவன் இசையாக்கின் றான், சிற்பங்களை செதுக்குகின்றான், கவி சமைக்கின்றான், ஓவியங்கள் வரைகின்றான், எழுத்தால் ஆள்கின் றான். அப்படிப்பட்ட ஒரு கலை வெளிப்பாடாகவே தென்னம் படல் மறைப்பு என்கின்ற இந்த தொகுப்பை பார்க்க முடிகிறது.

சகோதரர் நபீல் அவர்கள் "அழியாத நினைவின் தடங்கள்" என்ற துணை வாசகத்தோடு வெளியிட்டிருக் கின்ற இந்த பால்யகால நினைவுப் பேழையை, அதில் புகுத்தப்பட்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கின்ற வாழ்வியலை, கதை மாந்தர்களை ஐம்பதுகளுக்கு பிறகு, தொண்ணூறுகள் வரை வாழ்ந்த கிழக்கிலங்கை மக்கள் அறிந்தே இருப்பர். ஒரு எழுத்தாளன் எவ்வளவு எழுதித் தீர்த்தாலும், சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை' போல, கவிப்பேரரசு வைரமுத்துவின் 'ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்' போல, இயக்குனர் மாரி செல்வராஜின் 'மறக்கவே நினைக்கிறேன்' போல, ஜெயக்குமார் சந்திரசேகரத்தின் (ஜே. கே) என் கொல்லைப்புறத்துக் காதலிகள்' போல தத்தமது எழுத்துக்கான ஆணிவேராய் ஊன்றிக் கிளைபரப்பி நிற்கின்ற பால்யத்தின் பதிவுகள் அவர்களது சிந்தைக்குள் நின்று "எழுது" "எழுது" என்று அசரீரியாக எதிரொலித்துக்கொள்கின்ற இயல்பின் கிழக்கிலங்கைக்கான வெளிப்பாடுகளில் ஒன்றாக இந்த தென்னம் படல் மறைப்பை கொள்ளலாம்.

இங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு கதையும், நிகழ்வுகளும், வழக்காறுகளும் இத்தொகுப்பை அணுகும் வாசகர் ஒவ்வொருவரினதும் பால்யத்தை தட்டியெழுப்பவல்லது. ஆற்றுப் படுக்கையில் புதைந்து கிடக்கும் கூழாங்கற்களின் ஓர் சிறு அசைவு நீரோட்டத்தின் மேற்பரப்பில் அலைகளைக் கொணருமாப்போல ஒவ்வொரு வாசகருக்குள்ளும் அவரவர் பால்யத்தின் தழுவலில் உண்டான ஒரு அதிர்வலையை இக்கதைகள் ஒவ்வொன்றும் ஏற்படுத்தியே இருக்கும் என்பதில் இரண்டாம் கருத்தேது!. எழுபதுகளின், எண்பதுகளின் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்கள், அவர்களது வாழ்க்கை, பொருளாதாரம், பழக்கவழக்கங்கள், உறவு முறைகள், அவர்கள் கைக்கொண்ட கலைகள், கலாசாரம், வழிபாட்டு முறைகள், மருத்துவம், கல்வி, சமூக விழுமியங்கள் என நீண்டுசெல்லும் பரிமாணங்களில் தனது பால்யம் ஒற்றியெடுத்த ஈர நினைவுகளை சம்பவங்களாகவும், கதாபாத்திரங்களாகவும், தகவல்களாகவும், சுவாரஸ்யங்களின் கோர்வைகளாகவும் புடம்போட்டுச் செதுக்கி, நெருக்கித் தொடுத்து செறிவானதோர் படையலாக எம்முன் விரிக்கிறார் அவர். அடுக்கடுக்காக வந்து விழும் தரவுகளின் செறிவு எம்மைக் கொஞ்சம் மூச்சிறைக்க வைத்தாலும் இழந்து விட்டதாக நாம் அங்கலாய்க்கின்ற எம் பூர்வீக வாசனையின் வீச்சத்தில் நாம் கிறங்கிப்போவதென்னவோ உறுதிதான்.

தென்னம் படல் மறைப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள சொல்லாடல்களில் ஏராளமானவை இன்றைய வாசகர்களுக்குப் புதிதானவை. இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏராளமான வாழ்வியல், உபகரணங்கள், அவற்றின் பயன்பாடுகள் போன்றவை இன்று வழக்கில் இல்லை.

எண்பதின் கடைக்கோடியில் பிறந்தவள் நான். இருப்பினும் எனக்கு முன்னிருந்த ஐம்பதாண்டுகளின் வழக்காறுகளை, வாழ்வியலை எனது தாயார் தனது பால்யகால நினைவுகளாக என்னுள் செவியேற்றியதுண்டு. ஹதீதுக் களரி, ஒடுக்கத்துப் புதன், பொன்னெழுத்துப் பீங்கான், ஹமீதப்பச்சிட சந்தி, யாஸீன் காக்காட தியேட்டர் என அவ்வாழ்வியல் பற்றிய ஈர்ப்பும் புரிதலும் என்னுள் ஓரளவு ஆழப் பதிந்திருந்ததெனலாம். வெறும் பத்தே வயதான தானும், ஏழு வயதாளவான தனது தம்பியும், ஐந்து வயதே நிரம்பிய தங்கையும் வார இறுதி நாட்களில் கிழக்கிலங்கையின் கரையோரக் கிராமமான அக்கரைப்பற்றில் இருந்து கிட்டத்தட்ட நாற்பது கிலோமீட்டர் தொலைவில் உள்ள இறக்காம் என்ற கிராமத்துக்கு, அங்கே தொழில் புரியும் தமது பெற்றோரிடம் செல்கின்ற கதை அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அது அத்தனை சுவாரசியமானது, ஆச்சரியமானதும் கூட. மூத்தம்மாவின் பாதுகாவலில் பள்ளிக்குப் போவதன் நிமிர்த்தம் அக்கரைப் பற்றில் வசிக்கும் அச்சிறுவர்கள் அக்கரைப் பற்றுக்கும் இறக்காமத்துக்கும் உள்ள கிட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வழியான அம்பாரை வீதி அன்று மாடுகள் பொருத்தப்பட்ட வண்டில்கள் போகமட்டுமே உகந்ததான மணல் வீதிகளாக இருந்த காரணத்தால் அவ்வழியை விடுத்து, அக்கரைப்பற்றில் இருந்து காரைதீவு சந்தி வரை கல்முனை அல்லது மட்டக்களப்புக்குச் செல்லும் பேரூந்தில் சென்று, அங்கிருந்து சம்மாந்துறை வழியாக அம்பாரைக்குச் செல்லும் பேரூந்தில் இடம்மாறி, கல்மடுவைச் சந்தியில் இறங்கி காட்டுவழியாக பூலாப் பழம், வில்வம் பழம், நாயுன்னிப் பழம், இலுப்பைப்பூ முதலானவற்றை பறித்துச் சாப்பிட்டுக்கொண்டு கால்நடையாக இறக்காமம் போகும் கதையை அத்துணை சுவாரசியமாக உம்மா சொல்லக் கேட்டிருக் கிறேன்.

இப்படியான அன்றாடங்களை வாழ விதித்திருந்த அல்லது வாய்க்கப்பெற்ற மக்களின் கதைகளில் உள்ள ஏராளமான வழக்கொழிந்துபோன வழக்காறுகளை, சொற்றொடர்களை, பேச்சுவழக்குகளை, தாவரங்களை, உணவு வகைகளை கேட்டு, உள்வாங்கி வளர்ந்த எனக்கும் கூட இத்தென் னம் படல் மறைப்பு பல புதிய புதிய தரவுகளை அடுக்கிக்கொண்டே போகிறது. ஆவணப்படுத்தப்படவேண்டிய முதுசமாக, அவசியம் பதிவுசெய்யப்பட வேண்டிய காலத்தின் கட்டாயமாக, நாம் அடிக்கடி புரட்டிப்பார்த்து முறுவலிக்கின்ற ஓர் பழைய புகைப்பட ஆல்பமாக, இனிவரும் சந்ததிகள் எதிர்காலத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டிய இலக்கியத் தொடர்ச்சியாக இந்த நூலை, அது கொண்டுள்ள பதிவுகளை நான் காண் கின்றேன். தமிழ்மொழி செம் மொழியாகக் கொள்ளப்படுகின்ற இவ்வடிப் படையில் இந்நூல் நின்று இலங்குதல் கண்டு பூரிக் கின்றேன். கொலிசமாக, முடாப் பானையில் நெலுவை ஊத்தி, பெறண் டையைக் கல்லில் தட்டி, கொழிமணலில் பாம்புத் தாரை போன்ற சொல்லாடல்கள் புதிதாக இருந்தாலும் சுருட்டர், குழந்தம்மா, செய்னம்பு லாத்தா, பணியாரக் காசிம், தாவூத் மாமா, கிழங்குக் காரி ஸாலிஹா, புள்ளிம்மா, சல்மா மாமி, மூஸா மாமா போன்ற காலத்தால் அழியாத கதாபாத்திரங்கள் என்னவோ எல்லோருக்கும் பழக்கமான அன்றாடங்களாகவே வலம் வருகின்றனர்.

மனிதன் என்பவன் ஒற்றை ஆளல்ல. அவனது முகம் ஏழு பத்துத் தலைமுறைகள் தாண்டி பின்னோக்கி நீள்கின்ற கோடான கோடி முகங்களின் சேர்க்கை, திரிபு, அவற்றின் எச்சம். உறவு, சுற்றம், பாட்டன், முப்பாட்டன், முன்னோர், எனப் பல நூறாண்டுகளாக கடத்தப்பட்டுவந்த மரபுகளின் நகல். உளவியல் பகுப்பாய்வு கோட்பாட்டின் தந்தையான சுவிட்சர்லாந்து உளவியல் நிபுணர் கார்ல் யுங் அவர்கள் மரபணுக்கள் மூலம் கடத்தப்படுகின்ற மனித இயல்பு களைத் தாண்டி, சமூக வாழ்வு மற்றும் மனிதர்கள் வாழ்கின்ற சூழல் போன்றவை அவனது இயல்பில் செலுத்துக்கொன்ற தாக்கத்தை, அதன் அடிப்படையை கூட்டு நனவிலியின் *(Collective Unconsciousness)* பகுப்புக்களான தொல் படிமங்கள் *(Archetypes)* மூலம் விளக்குகிறார்.

மனிதர்களின் எண்ணங்கள், செயல் கள், சுபாவங்கள், உளவியல் போன்றவை மூலம் இத்தொல் படிமங்கள் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு, சமூகங்களுக்கு, இனங் களுக்கு கடத்தப்படுவதாக அக்கொள்கை விவரிக்கப்படுகிறது. இதன் அடிப்படியில் மனிதர்களது சிந்தனை, அறிவாற்றல், அறிவார்ந்த செயல்கள் போன்றவை வழி வழியாக கூட்டாக *(Collective Intelligence)* கடத்தப்பட்டு வருகிற இத்தொல்படிமங்களின் வெளிப்பாடுகளாக கருதப்படுகிறது. அதுபோலவே இந்நூலில் ஆவணப்படுத்தப் பட்டிருக்கின்ற எண்ணிக் கணக்கிடச் சவாலான வாழ்வியல் அம்சங்கள், மனிதர்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், குறியீடுகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொருள்விளக்கங்கள், விழுமியங்கள், உள்ளார்ந்த எண்ணங்கள் மற்றும் அவற்றின் வெளிப்பாடுகள் போன்ற அத்தனை வாழ்வியலசார் பின்னணிகளும் இந்நூலாசிரியாருக்கு மட்டுமல்ல, இந்நூல் பேசுகின்ற வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட அத்தனை பேருக்கும் பொதுவானது, அவர்களில் இருந்து பிரிக்க இயலாத மரபியல் ஆகிறது. தனது வேர்களை, அவை தனக்குள் ஏற்படுத்திய அதிர்வுகளை, அழியாத நினைவுகளின் தடங்களை எல்லா மனிதர்களும் உணர்வு ரீதியாக அனுபவித்தவர்களாயினும் அவற்றை எழுத்து வடிவில் யாத்து, கடந்துபோன நினைவுகளுக்கு மீண்டும் உயிர்கொடுத்து, கருப்பு வெள்ளையாக பிடிக்கப்பட்ட புகைப் படங்களை வர்ணம் செய்து தன் ஆற்றலால் அவற்றுக்கு இலக்கிய வடிவம் கொடுக்க வாய்த்த பேறுள்ளவர்களின் பட்டியலில் நூலாசிரியர் தனக்கான ஒரு தனித் தடத்தைப் பதியவைத்திருப்பதில் அவரைப்போல் எமக்கும் மகிழ்ச்சி.

ஒரு கவிஞன் உரை நடை எழுதும் போது அவ்வுரை நடையை வாசிக்கின்ற வாசகனிடம் அவ்வெழுத்தின் ஓட்டம் தன்னை எழுதியவன் ஒரு கவிஞன் என்று கட்டியம் கூறும். அது சிலவேளைகளில் உரைநடைகளின் பொருட்செறிவை சிக்கலாக்கி வாசகனுக்கு சுமையாக மாறும் அபாயம் இருந்தாலும், அந்நடையின் லாலித்தியம் எமது சிந்தைக்குள் கள்ளூற்றிச் செல்லத் தவறுவதில்லை. அதற்கு இத்தென்னம் படல் மறைப்பும் விதிவிலக்கல்ல. இத்தொகுப்பு முழுவதும் பத்தி எழுத்துக்களில் கவித்துவம் ஊற்றெடுப்பது கண்டு கண்கள் அகல விரிகின்றன. ஒவ்வொரு அங்கமும் முடிவுறுகின்ற தருணம் கவிதைக்கே உரிய அழகியலில் ஒரு திரைக்கதையின் அவிழாத முடிச்சுப் போன்ற பாவனையில் லாவகமாக முற்றுகிறது. "அந்த நிலவு ஒளியில் நகரும் மூத்தப்பாவின் மாட்டு வண்டிலில் நானும் போகிறேன். அதன் கீழே தொங்கும் ஹரிக்கேன் விளக்கின் மஞ்சள் ஒளி கடைச் சுவரில் பட்டு அவர் அறிந்த முகங்களையும் தழுவிச் செல்கிறது", "இருவர் இருவாராகச் சாக்கில் அடைத்து நெல் கட்டும்போது என் மனதுக்குள் ரேடியோ பாடிக்கொண்டிருந்தது.", "நீர்ப் படுக்கையில் அடர் பச்சையுடன் தழுவிக் கிடக்கும் பிரப்பம் பழம் இன்னும் இனிக்கிறது". என முடியும் கதைகள் எடுத்துக்காட்டு.

இயற்கை போல ஓர் உபாத்தியாயன் இல்லை. இயற்கையின் மடியில் சுதந்திரமாகச் சிறகு விரித்துப் பறக்கும் பால்யம் எண்ணக் கருக்களின் நிலைபேறான விளைநிலம். இயற்கை மனிதனைக் கேள்வி கேட்பதும், மனிதன் இயற்கையைக் கேள்வி கேட்பதும், இயற்கைக்கும் மனிதனுக்குமான ஆனந்த சம்பாஷணைகளில் விளைகின்ற ஞானமும் அனுபவித்தவர்களே அறிவர்! ஆப்பிள் மரத் தடியில் உறங்கியவன் விசையறிந்தான், கடற்கரை மணலில் மல்லாந்து கிடந்தபடி பறவைகளை உற்றுநோக்கிய மீனவச் சிறுவன் ஏவுகணை நாயகனானான், இப்படி காலத்தின் தேவைகளுக்கும் சவால்களுக்கும் ஆற்றல் கொண்டு தீர்வு கண்ட, அழகியல் கொணர்ந்து இன்பம் சேர்த்த, சிந்தனை வீச்சில் சீர்மை செய்த ஆளுமைகள் ஒவ்வொன்றுக்கும் அடிப்படையில் வாத்தியார் இயற்கைதான். அப்படி இயற்கையின் சிறக்குகளுக்குள் கிடந்து, வாழ்க்கையை நொடிக்கு நொடி அனுபவித்து, அதன் இன்பத்தை தானும் சுகித்து, அம்மதுவை எமக்கும் ஊற்றிக் கொடுக்கின்ற சகோதரர் நபீல் அவர்களது தென்னம் படல் மறைப்பின் அழியாத நினைவின் தடங்களில் செருப்பின்றி நடந்த அனுபவத்துக்காக நூலாசிரியாருக்கு நன்றியும் வாழ்த்துகளும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இது கண்ணகியம்மன் வழிபாட்டுக்காலம்

பொன் குலேந்திரன்

கண்ணகி அம்மன் வழிபாடு கி.பி 171 முதல் கி.பி 193வரை அனுராதபுரத்தில் இருந்து ஆட்சி புரிந்த கஜபாகு என்ற அரசனால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதென இராஜவாளி என்ற சிங்கள நூல் கூறுகிறது. கஜபாகு ஆட்சி காலத்தில் சேரமன்னன் செங்குட்டுவன் தனது தலைநகராகிய வஞ்சியில் இமயமலையில் இருந்து கொண்டுவந்த கல்லில் கண்ணகிக்கு சிலை செய்து கோயில் அமைத்து பெருவிழா எடுத்தான் . கிபி 178ல் நடந்த அவ்விழாவிற்கு செங்குட்டுவனின் அழைப்பையேற்று அவன் நண்பனாகிய கஜபாகு விழாவில் கலந்து கொண்டான்.

இவ்விழாவில் பாண்டிய மன்னன் வெற்றிவேற் செழியனும், சோழ அரசன் பெருநற்கிள்ளியும், கொங்குதேச அரசன் இளங்கோ அடிகளும், மகத தேச மன்னரும் கலந்துகொண்டாதாக துரை ஜெயநாதன் 'ஆதிதிராவிடரும் அழிந்துபோன சங்கங்களும் என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விழாவில் கலந்த கஜபாகு கண்ணகியின் அற்புதங்களைக் கண்டு வியந்தான். கஜபாகு, கண்ணகியை செங்குட்டுவனைப் போல் நித்தியபூசை செய்து வலம் வந்து தன் நாட்டிலும் எழுந்தருளி அருள்புரிய வேண்டும் என்று அவன் கேட்டு பிரார்த்தித்தான். அவன் விரும்பியபடி எல்லாம் நடக்குமென ஆசி கேட்டு கஜபாகு உள்ளம் நெகிழ்ந்து கண்ணகி மேல் கூடிய நம்பிக்கை கொண்டான்.

இலங்கையில் கண்ணகி வழிபாட்டினை பரப்ப தன் விருப்பத்தை செங்குட்டுவனிடம் கஜபாகு தெரிவித்தான். செங்குட்டுவன் சந்தன மரத்தால் செய்த கண்ணகி சிலையையும் ஒரு காற்சிலம்பையும் சந்தனமரப் பேழையில் வைத்து கஜபாகு விடம் கையளித்தான்.

கஜபாகு கண்ணகி விக்கிரகத்துடன் இலங்கைக்குத் திரும்பும்போது தன்னுடன் பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பல்குடிமக்களையும் அழைத்துச்சென்றான். அவன் வந்திறங்கிய சிலையுடன் வந்திறங்கியது மாதகலுக்கருகேயுள்ள சம்புகோள துறைமுகம். யானை மேல் சிலையை வைத்து பல யானைகள் பின்னே வர ஊர்வலமாய் பல இடங்களுக்கு எடுத்துச்சென்றான். ஊர்வலம் நின்றயிடமெல்லாம் கண்ணகி வழிபாடு தோன்றிற்று.

யாழ்குடாநாட்டில் கண்ணகியம்மன் வழிபாடு

இம்மன்னனால் யாழ்ப்பாணத்தில் முதலாவது கண்ணகி கோயில் ஸ்தாபிக்கப்பட்ட இடம் அங்கணாகடவை எனப்படும். அங்கனா என்பது அம்மனை குறிக்கும். சிங்களநாட்டில் 'பத்தினி தெய்யோ' என கண்ணகி அம்மனை அழைத்தனர். ஒல்லாந்தர் காலத்தில் அக்கோயிலும் சிலையும் யானையால் சிதைக்கப்பட்டது.

யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்த பல கண்ணகி அம்மன் கோயில்கள் நாளடைவில் நாக அம்பாள், இராஜேஸ்வரி அம்பாள், முத்துமாரி அம்பாள் என்ற பெயரில் வணங்கப்பட்டது. இன்று இளவாலை, மண்டதீவு, பளை, வீமன்காமம், தெல்லிப்பளை, மாசியப்பிட்டி, கச்சாய், பருத்தித்துறை, புலோலி, காரைநகர் ஆகிய இடங்களில் கண்ணகி அம்மனுக்கு கோயில் களுண்டு.

மூத்ததம்பியின் யாழ்ப்பாண சரித்திரம் என்ற புத்தகத்தில் முதற் கண்ணகி அம்மன் கோயில் நாவற்குளியில் உள்ள வேளம்பாடியில் தோன்றியதென குறிப்பிட்டுள்ளார். எங்கு முதலில் கண்ணகி அம்மனுக்கு கோயில் தோன்றியதென்பதற்கு தக்க ஆதாரங்கள் கிடையாது. முல்லைத்தீவில் உள்ள பிரசித்தம்பெற்ற வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில் கஜபாகுவினால் ஸ்தாபிக்கப்பட்ட பத்தாவது கண்ணகி ஆலயம். அனுராதபுரத்தில் இசுருமுனிய விகாரகவிற்கு அருகேயுள்ள தடாகத்துக்கு முன்னால் கண்ணகி ஆலயம் அமைத்தான்.

வருடாவருடம் ஆடிமாத பூரணையில் கண்ணகிக்கு விழா எடுத்தான். இதனை சிங்களவர் 'எசல பெரஹரா' என அழைத்தனர். கண்ணகி வருகையால் இலங்கையில் மழைவளம் பொழிந்து விளைச்சல் பெருகி செழிப்புள்ள நாடாகியது.

இக்கதைக்கு மாறாக சிங்கள சரித்திர நூல்கள் கஜபாகு தெனிந்தியாவுக்கு படையெடுத்துச் சென்று 24000 சிங்களவரை சிறைமீட்டி வரும்போது கண்ணகியின் விக்கிரகத்தையும் சிலம்பினையும் இலங்கைக்கு கொண்டுவந்ததாகக்கூறுகின்றன. சோழ அரசன் செங்குட்டுவன் கஸபாகுவை வரவேற்று 24.000 சிங்களவரை விடுதலை செய்யும் போது 24.000 சோழநாட்டவர்களையும் கூட்டிச்செல்ல ஒப்புதல் கொடுத்ததாக மஹாவம்சத்தில் குறிப்பிடப்படவில்லை.

கண்ணகியின் காற்சிலம்பிற்கு சின்னம்மை, பெரியம்மை , சின்னமுத்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூவக்கட்டு, குக்கல் போன்ற தொற்று வியாதிகளைக் குணப்படுத்தும் அதிசயமான சக்தியுண்டு என்பது மக்கள் நம்பிகை.

சிங்களப் பகுதிகளில் கண்ணகி வழிபாடு

சீதாவக்கை காலத்தில் (கி.பி 1530 - 1592) பத்தினி வழிபாடு பிரபல்யமானது. டிக்கிரி பண்டார என்ற இளவரசன் சீதாவக் கையை ஆண்ட மாயதுன்னை என்ற தன் தந்தையை நஞ்சு வைத்து கொலைசெய்து சீதாவாக்கைக்கு 1582ல் முதலாம் இராஜசிங்க என்ற நாமத்துடன் அரியாசனம் ஏறினான்.

பௌத்த தர்மத்தின்படி தகப்பனைக் கொன்ற பாவம் அவனைவிட்டு பல ஜென்மங்களுக்குப் போகாது என பௌத்த பிக்குமார் சொல்லியதைக்கேட்டு அவன் பொருமாள் என்ற பிராமணன் அல்லாத நண்பணின் உபதேசத்தின் பேரில் இந்து மதத்தை தழுவினான். கற்புக்கரசியான



கண்ணகிக்கு களனி கங்கை ஓரத்தில் கொழும்பு அவிசாவலை பதையில் உள்ள கடுவலை எனும் ஊரில் கோயில் கட்டினான். இக்கோயில் போர்த்தகேயர் காலத்தில் (1505-1658) கட்டியதென கோயிலுக்கு அருகேயுள்ள கற்தூணில் உள்ள கல்வெட்டில் காணக் கூடியதாகயிருக்கிறது என காலம் சென்ற கலாநிதி செனரத் பரனவித்தாரன குறிப்பிட்டுள்ளார். மலபாரைச் சேர்ந்த நாயக்கர் பரம்பரை கண்டி இராச்சியத்தை 17ஜ9 முதல் 1815 வரை ஆண்டபோது கண்ணகி வழிபாட்டுக்கு கண்டி இராச்சியத் தில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. சமன் என அழைக்கப்கட்ட சமனலகந்த என்ற மலையின் காவல் தெய்வ வழி பாட்டுக்கு பதிலாக பத்தினி தெய்வம் வழிபாடு ஆரம்பிக்கப் பட்டது.

கஜபாகு அரசன் நடத்தி வந்த கண்ணகி அம்மன் விழாவின் தொடர்ச்சியே கண்டியில் நடக்கும் எசல பெரஹராவாகும். தலதா மாளிகை எசல பெரஹராவில் கீழ்கண்ட பெரஹராக்கள் இடம்பெறும்.

தலதா மாளிகை பெரஹரா, நாத தேவாலய பெரஹரா, மஹாவிஷ்ணு தேவாலய பெரஹரா, கதிர்காம பெரஹரா, பத்தினி தேவாலய பெரஹரா.

உடகம என்ற கண்டிப்பகுதியில் இரண்டாம் இராஜசிங்கனால் (1505-1687) பத்தினி கோயில் கட்டப்பட்டது. 15 நாட்கள் இக்கோயிலில் திருவிழாக்கள் நடைபெறும். பத்தினிக்கு பதுளை, ஹங்குரன்கெட்ட என்ற சிங்களப் பகுதிகளிலும் கோயில்களுண்டு.

கதிர்காமத்திலும் பத்தினி தெய்வத்துக்கு கோயிலுண்டு. சிங்களவ ரிடையே பத்தினி வழிபாட்டுடன் கொம்பு விளையாட்டு, தோடம்பழம் அடிக்கும் விளையாட்டு, தேங்காய் உடைக்கும் விளையாட்டு, பூ விளையாட்டு போன்ற விளையாட்டுகளுக்கு முக்கியத்துவமுண்டு. கண்ணகியின் கணவன் கோவலனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிங்களவர் 'பலங்க' என்பர். 11ம் நூற்றாண்டு கண்ணகி, பலங்க சிலைகள் நிக்காவெவ என்ற சிங்களப்பகுதியில் உள்ள குகையொன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்த சிலையில கண்ணகி சாதாரண சிலம்புடனும் வேலைப்பாடுகள் நிறைந்த காப்புகளுடனும் காணப்படுகிறாள்.

கண்ணகி கோயில்களில் தீ மிதித்தல் தீயில் பழிகொடுத்தல் போன்றவை இடம்பெறும். கொம்பு விளையாட்டுக்கும் கண்ணகி கோவலன் கதைக்கும் சம்பந்தப்பட்ட கதை ஒன்றுண்டு. கண்ணகியும் கோவலனும் மரம் ஒன்றிலிருந்து பூப்பறிக்க கொழுக்கிகள் உள்ள இரு தடிளைப் பாவித்த போது கொழுக்கிகள் மாட்டிக்கொண்டன. அதனைக் கலட்ட முடியாமல் போனபோது ஆண்கள் ஒரு பக்கமும் பெண்கள் ஒரு பக்கமும் சேர்ந்து கலட்ட முயன்றபோது ஆண்கள் பக்கத்து தடி முறிந்ததாக கதையுண்டு.

கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு

அனுராதபுர மன்னன் கஜபாகு காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்ணகி வழிபாடு கிழக்கிழங்கைக்கும் பரவி இருக்காலம் என்பது பலர் கருத்து.

கஜபாகு விக்கிரகத்துடன் இலங்கை திரும்பிவந்து அனுராதபுரத்திலிருந்து 15 வருடகாலமே ஆட்சி புரிந்த படியால் அந்தச் சொற்ப காலத்துக்குள் கண்ணகி வழிபாட்டினை கிழக்கிழங்கையில் பரப்பியிருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென்னபது ஒரு சாரார் கருத்து. கண்ணகி வழிபாடு கி.பி 16ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு பகுதிகளில் அறிமுகமானதென மட்டகளப்பு மான்மியம் குறிப்பிட்டுள்ளது. கிழக்கு பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் சிற்றரசர்களே கண்ணகி வழிபாடு பரவலுக்கு முக்கிய பங்களித்துள்ளார்கள் என்பதக்கு பல சான்றுகளுண்டு. முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயில் வழிபாட்டிலிருந்து இவ்வழிபாடு கிழக்கிழங்கைக்கு பரவியிருக்கலாம் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதம். போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்குடா நாட்டிலிருந்து மட்டக்களப்பிற்கு நாடார் குடியேற்றம் ஒன்று நிகழ்ந்தது.

கந்தப்பர் என்பவர் தலைமையில் புலம்பெயர்ந்தவர்கள் தங்களுடன் கொண்டு வந்த ஏழு கண்ணகியம்மன் சிலைகளை ஏழு கிராமங்களில் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டி வணங்கியதாகவும் அவர்கள் மண்முனைக்கு அருகாமையில் குடியேறி வாழ்ந்ததாக மட்டகளப்பு மான்மீயம் குறிப்பிட்டுள்ளது.

மட்டக்கிளப்பின் வெருகல் ஆற்றுக்குக் கிழக்கே உள்ள துறைமுகத்தில் மதுரையிலிருந்து செண்பகநாச்சியம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகியம்மன் சிலைகளைக் கொண்டு வந்ததாகவும் அதில் கண்ணகியம்மன் சிலையை மட்டக்கிளப்புக்கு தெற்கேயுள்ள ஊர் ஒன்றில் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாக வரலாற்றுச் செய்தியுண்டு. கி.பி 2ம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து கொண்டுவரப்பட்ட செண்பகச் செல்வி என்ற கண்ணகி விக்கிரகம் தம்பிலுவில்லைச் சேர்ந்த ஊராக்க என்ற இடத்தில் ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்து வழிபடப்பட்டது. பௌத்த சிங்கள அரசர்களினதும், தமிழ் அரசர்கள், சிற்றரசர்களினதும் ஆதரவில் கி.பி 2ம் நூற்றாண்டு தொடக்கம் 12ம் நூற்றாண்டு வரை கண்ணகி வழிபாடு செழித்து வளர்ந்தது.

திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் அர்ச்சகர்களாக பணிபுரிய வீரசைவககுருமார்கள் அக்காலத்தில் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் தம் பட்டர் என வாழ்த்தி குடியேற்றி அவ்வூருக்கு தம்பட்டை என நாமம் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலும் இவர்களது வழிபாட்டுக்காக மல்லிகார்ச்சுன புரத்திலிருந்து கணேஷ விக்கிரகம் ஒன்று பெறப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் மேலும் மேகவண்ணன் தனது தாயார் தம்பதிநள்ளாள் பெயரில் வாவியொன்றையும் வெட்டுவித்து அவ் வாவிக்கு தம்பதிவில் எனப்பெயர் இட்டான். வில் என்ற சொல் வில்லைப் போன்ற குளத்தைக் குறிக்கும்.

மழைபொழிய வேண்டி கொம்பு விளையாடல் என்ற வழிபாட்டின் மூலம் கண்ணகியம்மனை வழிபடுவார்கள். தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயிலில் இவ்விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுகிறது. பொதுவாக கண்ணகி கோயிற்கதவுகள் ஆண்டுக்கொரு முறை திறக்கப்பட்டு பதத்தி என்ற முறைப்படி 10 நாட்கள் வரை பூஜைகள் செய்யப்பட்டு பின் கதவுகள் மூடப்படும். மக்கள்பெருதளவில் கூடி பயபக்தியுடன் வணங்குவர். கள்ளங்குடா, ஆரையம்பதி, செட்டிப்பாளையம், களுவாஞ்சிக்குடி, துறைநீலாவணை ஆகிய இடங்களில் உள்ள கண்ணகி கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்களில் வேறுபாடு களுண்டு.

ஈழத்தில் பிரசித்தம் பெற்ற கண்ணகியம்மன் கோயில்கள்

கண்ணகி அம்மன் கோயில் வலந்தலை காரைநகர்

1725ல் ஸ்தாபிக்கப்பட்ட பழம் பெருமை வாய்ந்த கோயிலிது. சந்தனமரத்திலான கண்ணகி அம்மனும், வைரவருமுண்டு. வருடாவருடம் சித்திரை வருடப்பிறப்பை அடுத்துவரும் முதல் வெள்ளிக்கிழமை கும்பம் வைத்து ஒன்பது நாட்களுக்கு திருவிழாநடைபெறும்.

கண்ணகியம்மன் கோயில், இத்தியடிபுலம், புங்குடுதீவு

சுமார் 130 வருடங்கள் பழமையான ஆலயமிது. பல வருடங்களுக்குமுன் இரை தேடிச்சென்ற தனது தனது கால்வடைகள் திரும்பாதறிந்த இடையன் ஒருவன் அவைற்றை தேடிச்சென்றான். தனது கால் நடைகள் ஒரு பேழையைச் சுற்றி படுத்திருப் பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, பேழையைத் திறந்து பார்த்த போது அதனுள் கண்ணகி விக்கிரகம் இருப்பதைக் கண்டதாக கதையொன்றுண்டு. ஆடிப்பூரம் இங்கு விசேஷமான தினமாகும். வருடாந்த உற்சவம் சித்திரை மாதத்தில் தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெற்று சித்திரைப் பௌர்ணமியன்று தேர்திருத்விழாநடை பெறும். மூலமூர்த்தி கண்ணகி. பரிவார மூர்த்திகள் இராஜஇராஜேஸ்வரி, பிள்ளையார், முருகன் பத்திரகாளி. நடராஜர், வைரவர் ஆகியோர் உளர். பெரிய இராஜகோபுரம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது. இக்கோயிலின் பெயரை இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோயிலென்றும் அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்ணகி அம்மன் கோயில், அங்கணாக்கடவை சண்டிலிப்பாய்

இலங்கை மன்னன் கஜபாகு கண்ணகி சிலைகளையும் காற்சிலம்புகளையும் சேரன் செக்குட்டுவனிடமிருந்து பெற்றுக் கொண்டு தனது பரிவாரங்களுடன் யாழ்ப் பாணத்தின் மாதகலுக்கு அருகேயுள்ள சம்புகோளம் என்ற பிரசித்தம்பெற்ற துறை முகத்தில் வந்திறங்கினான். இலங்கையில் இம்மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது கண்ணகி ஆலயம் யாழ்ப்பாணம் திருவடி நிலைக்கு அருகாமையில் உள்ள அங்காணாக் கடவையில் அமைக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கிருந்து அனுராதபுரத்துக்கு பூநகரி வழியாகச் செல்லும் பாதைகளில் உள்ள ஊர்களில் கண்ணகிக்கு ஆலயங்கள் அமைத்தான் என யாழ்ப்பாணச் சாத்திரத்தில் முதலியார் செ இராசநாயகம் குறிப்பிட்டுள் ளார். அடையாளம் காணமுடியாத அங்காணாக் கடவை கண்ணகி கோயில் தற்போது கந்தரோடையில் உள்ளகதிரமலைக் கருகாமையில் இருந்ததாகவும் சரித்திர வல்லுனர்கள் கூற்று.

கண்ணகியம்மன் கோயிலுக்கு எதிர்புறத்திலிருந்து கல்லாலான கஜபாகு மன்னனின் சிலை சில நூற்றாண்டுகளுக்கு முன் யானையொன்றினால் சிதைக்கப்பட்டு பின் சிலையின் கால் பகுதியும் தலையும் கலாநிதி பீரிஸ் என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டு யாழ்ப்பாண நூதனசாலையில் வைக்கப் பட்டது. இக்கோயில் இப்போது சிறுதளவில் இயங்குகிநது. வைகாசி விசாகப் பொங்கல் சிறப்பாக நடைபெறும். பக்கத்து ஊர்களான நவாலி, மாதகல் ஆகிய கிராமங்களிலும் கண்ணகிக்கு கோயில்கள் உண்டு. மாதகல் என்ற பெயர் மாதா என அழைக்கப்படும் கண்ணகியம்மனின் கல்லினாலான விக்கிரகம் வந்திறங்கியபடியால் வந்ததென ஒரு கதையுண்டு.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில், முல்லைத்தீவு

தமிழ்நாட்டில் கண்ணகி அம்மனுக்கு கோயில் அமைத்த காலம் தொடக்கம் இத்தலம் இருந்து வருகிறது. கஜபாகு அரசனால் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட பழமைவாய்ந்த பத்தாவது கண்ணகியம்மாள் கோயிலிது எனகருதப்படுகிறது.

கண்ணகியம்மாள் வந்தமர்ந்த இடமாகிய பத்தாம்பளை. என்பது மருவி வற்றாப்பளையாயிற்று என்பது வரலாறு. மூலமூர்த்தியாக கண்ணகியம்பாள் வீற்றிருக்க, விநாயகர், நாகதம்பிரான், ஆகிய மூர்த்திகள் பரிவாரத்தில் உள்ளனர். கடல் நீரில் கோயில் விளக்கு எற்றுவதாக மக்கள் கருத்து. கொக்கிளாயிலும் கண்ணகி அம்மனுக்கு கோயிலுண்டு.

யாழ்குடாநாட்டிலும் வன்னிப்பகுதிகளிலும் மற்றைய கண்ணகி கோயில்கள் :

» கண்ணகியம்மன் கோயில், மண்டைதீவு - 1942ல் ஸ்தாபிக்கப் பட்ட கோயிலிது.
» கண்ணகியம்மன் கோயில் ஏழாலை
» கண்ணகியம்மன் கோயில் மேளாய், நல்லூர் , பூநகரி
» கண்ணகியம்மன் கோயில், காங்கேசன்துறை
» கண்ணகியம்மன் கோயில், தையிட்டி, காங்கேசன்துறை. 1872 இல் ஸ்தாபிக்கப்பட்டது.
» கண்ணகியம்மன் கோயில், வீரமாணிக்க தேவன் துறை, மயிலிட்டி.
» கண்கியம்மன் கோயில் நாகர்கோயில் இது மிகப்புராதன ஆலயம்.
» கண்ணகியம்மன் கோயில், புத்தூர்.
» கண்ணகியம்மன் கோயில், கோப்பாய் வடக்கு.
» கண்ணகியம்மன் கோயில், அச்செழு, நீர்வேலி.
» கண்ணகியம்மன் கோயில், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இக்கோயில்கள் சிவன், முருகன், பிள்ளையார், சக்தி கோயில்களைக் போல் பிரசித்தமானவையல்ல. ஆனால் எவ்வ ளவுக்கு கண்ணகி வழிபாடு கிராமங்களில் பரவியிருந்ததை எடுத்துக்காட்டுகிறது.

தீவகத்தில் சில கண்ணகி கோயில்கள் இராஜஇராஜேஸ்வரி கோயிலாக பெயர் மாற்றம் செய்யப்பட்டன. இத்தியடிப்புல கண்ணகியம்மன் கோயில் இதற்கு சான்று. மண்டைதீவில் உள்ள கண்ணகியம்மன் கோயில் பூசாரிகள் பிராமணரல்லாதோர்.

கண்ணகி அம்பாள் கோயில் காரைதீவு

500 வருடங்களுக்கு முன் காரேறு மூதூர் என்ற பெயர் வழக்கிலிருந்த போது ஸ்தாபிக்கப்பட்டது. இப்பெயர் திரிந்து காரைதீவாயிற்று. கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் இக்கோயிலில் தங்கிச் செல்வது வழக்கம். கோயிலின் தலவிருட்சம் வயது முதிர்ந்த வேப்ப மரம். இப்பகுதியை அரசாண்ட வன்னிய மன்னன் நிலபுலன்களை பார்வையிட வந்த சமயம் அரசனின் யானை கீழே விழுந்து மயங்கி படுத்ததாகவும் அப்போது கோயில் மணி ஒலிக்க அங்கு வந்த ஏவலாளர்கள் கோயிலின் மகிமையை அரசனுக்கு எடுத்துச் சொன்னார்கள். கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்த தேவந்தி என்ற பெண் விவரம் அறிந்து வேப்பமிலை அரைத்து குளிகைசெய்து யானைக்கு கொடுத்து தீர்த்தம் பருக்கியபின் யானை எழுந்ததாகவும் ஒரு கர்ணபரம்பரை கதையுண்டு.

அதற்கு கைமாறாக அரசன் ஆலயம் அமைத்து கொடுத்தானாம். அரசனுடைய இரு மனைவியர்களில் ஒருவாரான சிறிய பூங்கோதைக்கு இழந்த கண்பார்வை அம்மனை வணங்கியதால் கிட்டியதாகவும் கதையுண்டு. ஆலயம் தொடர்பான வழக்குரை என்னும் என்ற ஏடு ஒன்றுண்டு. வருடா வருடம் 7 நாட்கள் நடக்கும் உற்சவத்தில் இது தினமும் பாடப்பெற்று நிறைவு பெறும். 1976 ல் கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது.

தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயில்

கி.மு 5ம் நூற்றாண்டில், விஜயன் காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் ஆதித்திராவிடர் களான நாகர் குடி மக்கள். கி,மு 600ம் நூற் றாண் டில் இப்பிரதேசம் நாகர் முனை எனப்பெயர் பெற்றதாக மட்டகிளப்பு மாண்மீயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.மு 1ம் 2ம் நூற்றாண்டில் திருக்கோயில் துறைமுகம் பிரபல்யமடைந்திருந்தது.

இத்துறையினூடாக தமிழ்நாட்டின் கிழக்குக் கரையிலிருந்த காவிரிப்பூம்பட்டணத் துடன் வர்த்தகத் தொடர்பு இருந்ததாக 'கண்ணகி வழக்குரை' என்ற கிராமிய இலக்கியம் குறிப்பிட்டுள்ளது.

கஜபாகு மன்னன் அனுராதபுரத்தை ஆட்சி செய்த காலத்தில் (கி.பி 171 -193) மட்டக்களப்பு பகுதிகளுக்கு கண்ணகி வழிபாடுவந்ததாகவும் அதன் பின் ×ழக்கு இலங்கையின் வெவ்வேறு ஊர்களை ஆட்சிசெய்த சிற்றரசர்கள் ஆட்சி பிரதேசங் களில் கண்ணகி வழிபாட்டினை பரப்பியதாக வரலாற்று குறிப்புகளுண்டு. மேலும் இவ் வழிபாடு முல்லைத்தீவிலிருந்து கடல் மார்க்கமாக மட்டக்களப்பு பகுதிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகளுண்டு.

கி.பி 1626ல் கண்டி மன்னன் செனரத்ன மலேய வீரர்களின் உதவியுடன் போர்த்துக்கேயரை மட்டக்களப்பில் இருந்து அகற்றி மலாய வீரர்களை காவலுக்கு வைத்தான். அக்காலப்பகுதியில் மட்டக்களப்பில் நாடார் குடியேற்றம் நடந்தது. யாழ்குடாநாட்டிலிருந்து கந்தப்பர் என்பவரது தலைமையில் புலம் பெயர்ந்து வந்த குடும்பங்கள் ஏழு கண்ணகி விக்கிரகங்களையும் தங்களுடன் எடுத்து வந்து பிரதிஷ்டை செய்து வணங்கத் தொடங்கினரென மட்டக்களப்பு மாண்மியம் கூறுகின்றது.

கி.பி 159 -180 வரையுள்ள கண்டி மன்னர்களினது காலத்தில் தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு சிறப்புற்றிருந்ததுக்கு இலக்கிய தொல்லியல் சான்றுகள் உண்டு. சிங்கள அரசர்களும் நாயக்கர் வம்ச கண்டி மன்னர்களும் கண்ணகி வழிபாட்டினை ஆதரித்து மானியங்கள் பல வழங்கிவந்துள்ளனர்.

கிழக்குப் பகுதி கிராமங்களில் பின் வரும் கண்ணகியம்மன் கோயில்கள் குறிப்பிடப்படவேண்டியவை:

- பட்டிநகர் ஸ்ரீ கண்ணகி அம்மன் கோயில், பனங்காடு, அக்கரைப்பற்று.
- கண்ணகி அம்மன் கோயில், காரைதீவு.
- கண்ணகி அம்மன் கோயில் சம்மாந்துறை.
- கண்ணகி அம்மன் கோயில், வீரமுனை
- கண்ணகி அம்பாள் கோயில் களுவாஞ்சிக் குடி. (இது 200 வருடங்களுக்கு முற்பட்ட புராதான ஆலயம். வைகாசி பௌர்ண மிக்கு முன் 7 நாட்களுக்கு கதவு திறக்கப் பட்டு விசேட வழிபாடு நடைபெறும்.)
- கடற்கரை கண்ணகி அம்பாள் கோயில், கல்முனை.
- கண்ணகி அம்மன் கோயில், துறை நீலாவணை. (மட்டக்களப்பு மான்மியத்தில் இக்கோயிலைப்பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது.)
- கண்ணகி அம்மன் கோயில் விடத்தல்முனை, புளியந்தீவு.
- கண்ணகி அம்மன் கோயில், பூம்புகார், மட்டக்களப்பு.
- கண்ணகி அம்மன் கோயில் தாளங்குடா.
- கண்ணகி அம்மன் கோயில், அமிர்தகழி, மட்டக்களப்பு.
- கண்ணகி அம்மன் கோயில், சத்துருக் கொண்டான், (100 வருடங்களுக்கு முற்பட்ட கோயிலிது.)
- கண்ணகி அம்மன் கோயில், கல்குடா, வாழைச்சேனை.
- கண்ணகி அம்மன் கோயில், சித்தாண்டி
- கண்ணகி அம்மன் கோயில், கிரான்.
- கண்ணகி அம்மன் கோயில், முறக்கொட்டாஞ்சேனை

கண்ணகியம்மன் கோயில்களின் எண்ணிக்கையிலிருந்து யாழ்குடா நாட்டை விட கிழக்கு ஈழத்தில் எவ்வளவு தூரத்திற்கு கண்ணகியம்மன் வழிபாடு கிராமங்களில் இயல் இசை நாடகங்களுடன் ஒன்று கலந்து பரவியிருந்ததை அறியக் கூடியதாகயிருக்கிறது.

அடிக்குறிப்புகள்:

- யாழ்ப்பாண சரித்திரம் - முதலியார் செ இராசநாயகம்.
- மட்டக்களப்பு மான்மீயம் - F X C நடராஜா
- தம்பிலுவில் கண்ணகி வழிபாடு நா. நவநாயகமூர்த்தி
- பத்தினி வழிபாடு - தொகுப்பாசிரியர் திரு. சி. கணபதிப்பிள்ளை
- மட்டக்களப்பு தமிழகம் - வித்துவான் பண்டிதர் வி.சி.கந்தையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீலாவணன்

கிழக்கிலங்கையின் கல்முனையின் அருகேயுள்ள பெரியநீலாவணை எனும் பழம்பதியில் 1931.06.31அன்று கேசகப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளுக்கு மூத்த மகனாகப் பிறந்த கே.சின்னத்துரை தனது நாற்பத்தைந்து வருட காலத்திற்குள் தமிழ் இலக்கியவுலகில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பெற்றுள்ளார் என்பதை அவரது படைப்புகளுக்கூடாகவும் இலக்கிய ஆர்வலர்களுக்கூடாகவும் அறியக்கூடியதாக வுள்ளது.

இருபது வருட கால இலக்கிய வாழ்வில் நூற்றுக்கணக்கான கவிதைகளும் பல கட்டுரைகளும் புனைகதைகளும் மூன்று பா நாடகங்களும் வேளாண்மை எனும் குறுங் காவியமும் நீலாவணனின் இலக்கிய கவித்துவ ஆளுமையை வெளிப்படுத்துவதாகவுள்ளன. நீலாவணன் தான் வாழ்ந்த காலத்திற்குள் ஒரு நூலை யேனும் வெளிக்கொணர்வதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கவில்லை என்பதை

பா. மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உறவினர்களாலும் இலக்கிய ஆர்வலர்களாலும் அறியக்கூடியதாகவுள்ளது. எனினும் நீலாவணனின் இலக்கிய ஆர்வல நண்பர்களான கவிஞர் எம்.ஏ.நுஃமான் அவர்களாலும் பிரபல சிறுகதை எழுத்தாளர் வ.அ. இரசரெத்தினத்தின் முயற்சியாலும் நூலுருப் பெற்றன.

நீலாவணன் வாழ்ந்த காலத்தில் கைப்படத் தொகுத்திருந்த 56 கவிதைகளை அவர் இறந்து ஒரு வருட காலத்திற்குள் "வழி எனும் முதல் கவிதைத் தொகுப்பாக" கவிஞர் எம்.ஏ.நுஃமான் வெளிக்கொணர்ந்ததோடு ஏழு ஆண்டுகளின் பின்னர் வேளாண்மை எனும் காவியமானது வ.அ.இரசரெத்தினத்தினத்தாலும் நூலுருவாகியது.

1953 முதல் 1974 வரையுள்ள இருபது ஆண்டு காலத்திற்குள் எழுதப்பட்ட கவிதைகளை குறிப்பாக வழி தொகுப்பினுள் உள்ளடங்காத கவிதைகளாக இவையுள்ளதோடு இக் கவிதைத் தொகுப்பானது நீலாவணனின் மகனான எஸ்.எழில்வேந்தனின் முயற்சியால் "ஒத்திகை எனும் நாமத்துடன் 2001 இல் பதிப்புரிமையாக்கப்பட்டுள்ளது" என்பதும் குறிப்பிடத்தக்கது. நீலாவணனின் கவித்துவ ஆளுமையினை முழுமையாக புரிந்து கொள்ள விரும்புபவர்கள் நீலாவணன் கைப்பட எழுதி பிறரால் தொகுக்கப்பட்ட "வழி" "ஒத்திகை" "வேளாண்மை" போன்றவற்றை படிப்பதன் ஊடாக அறிய முடியும்.

வாழ்வின் பன்முகத் தன்மையினையும் கவிதையின் பன்முகத் தன்மையினையும் வெளிக்கொணர்ந்த தமிழின் முக்கியமான கவிஞர்களுள் நீலாவணனும் ஒருவர் என நீலாவணனின் பிரதேச இலக்கிய நண்பரான கவிஞர் எம்.ஏ.நுஃமான் குறிப்பிடுகிறார்.

தான் வாழ்ந்த காலத்தினதும் தான் வந்த பாரம்பரியத்தினதும் தனது சொந்த ஆளுமையினதும் உருவாக்கமாகவுள்ளதுடன் அவையே அவரது கவிதைகளாகவுமுள்ளன.

சி.மௌனகுரு நீலாவணன் பற்றி எழுதிய "கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்" எனும் நூலில் ஒரே கால கட்டத்தில் நீலாவணனிடம் பல கவிதைப் போக்குகளையும் கால ஓட்டத்தினூடே அவரது கவித்துவ முதிர்ச்சியையும் வெவ்வேறுபட்ட உணர்வுத் தூண்டல்களுக்கு மரபுநிலைப்பட்டும் ஆளுமை சார்ந்தும் அவர் துலங்கினார் என குறிப்பிடுகின்றார்.

நீலாவணன் கவிதை எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து அவரது இறுதிக் கால கட்டம் வரை அவரது கவிதைகளில் காதலும் ஒரு கருப்பொருளாக இருந்துள்ளது. நீலாவணனின் ஆரம்ப கால காதல் கவிதைகள் உடல் சார்ந்த விரக உணர்வின் வெளிப்பாடக அமைந்தது. நீலாவணனின் முதல் கவிதையான "ஓடி வருவதென்னேரமா" இவ் வகைக்கு எடுத்துக் காட்டாகவுள்ளது.

நீலாவணனின் கவிதைகள் சமூக விமர்சனக் கவிதைகளாகவும் ஆன்மிக கவிதைகளாகவும் காதல் கவிதைகளாகவும் என பன்முகத் தன்மையுடைய கவிதைகளாக விளங்குவதுடன் மொழி உணர்வு காதல் சமூக விமர்சனம் ஆன்மீகத் தேடல் என்பன அவரது கவிதையின் பன்முகங்கள் எனலாம்.

இலங்கையில் இடதுசாரி இயக்கம் மட்டுமின்றி இனத்துவ முரண்பாடும் இனவாத அரசியலும் கூர்மையடையத் தொடங்கிய 1950 ஆம் ஆண்டு கால கட்டத்தில் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற சிங்கள தேசிய வாதத்தின் நிலைப்பாடு தமிழ் உணர்ச்சியையும் தமிழ்மொழி உரிமைப் போராட்டத்தையும் தமிழ்த் தேசிய வாதத்தையும் கிளர்ந்தெழச் செய்தது.

1955 முதல் ஈழத்து தமிழ்க் கவிதையில் இது தீவிரமாக வெளிப்பட்டது. உண்மையில் ஈழத்து இலக்கிய வரலாற்றில் இக்கால கட்டத்தை அரசியல் எதிர்ப்புக் கவிதையின் தொடக்க காலம் எனலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என கவிஞர் எம்.ஏ.நுஃமான் குறிப்பிடு கின்றார்.

இலங்கையின் அன்றைய முன்னணிக் கவிஞர்கள் பலரும் தமிழ் உரிமைப் போராட்டத்தை ஊக்கப்படுத்திக் கவிதைகள் எழுதினர். அந்த வகையில் மாபாடி என்ற புனைபெயரில் து.உருத்திரமூர்த்தி முருகையன் இவர்களை விட அதிகமான மொழி உரிமைப் போராட்டக் கவிதைகளை நீலாவணன் எழுதியுள்ளார் என்றால் மிகையாகாது.

1959 இல் கலித்தொகை பாடல் ஒன்றைத் தழுவி எழுதிய "இனிக்கும் அன்பு" சங்க கால மரபின் தொடர்ச்சியாக அமைகிறது. சொல்லாட்சி கற்பனைத்திறன் கவித்துவ ஆளுமையினை நீலாவணனின் காதல் கவிதைகளுக்கூடாக காணமுடிகின்றது.

நீலாவணனின் இரண்டாவது வகையான காதல் கவிதைகள் வெறும் உடல்சார் விரகத்தைத் தாண்டிய சூழ்ந்த உள்ளக்கிளர்ச்சி தரும் காதல் உணர்வை வெளிப்படுத்துவன வாகவுள்ளன. "போகவிடு" "ஓவியம் ஒன்று" "போகின்றேன் என்றோ சொன்னாய்" "மங்கள நாயகன்" "வேடன்" "சீவனைத்தான் வேண்டுமடி" போன்ற கவிதைகளிலும் உடல் சார் பாலியல் பொருந்தியிருப்பினும் உள்ளக் கிளர்ச்சி அனுபவமே இவற்றின் அடிப்படைத் தொனியாகும்.இத்தகைய கவிதைகள் தமிழ்ப் பக்தி மரபின் செல்வாக்கினையும் நீலாவணனின் தனித்துவத்தையும் நிலைநாட்டின என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நீலாவணன் கவிதை எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே சமூக யதார்த்தத்தில் காலூன்றி நின்றதோடு சமுதாய உணர்வுமிக்க மனிதராகவும் வாழ்ந்தவராவார். சமூக சமத்துவமின்மை பொய்மைகள் போலித்தனங்கள் ஊழல்கள் வறுமை சாதிப்பாகுபாடு சீதன முறை நிறவெறி போன்றவற்றுக்கு எதிராக தன் உணர்வுகளை கவிதையில் வெளிப்படுத்தினார். பாவம் வாத்தியார் உறவு போதியோ பொன்னியம்மா வெளுத்துக்கட்டு போன்றவற்றில் சமூகச் சார்பு முனைப்பாகத் தெரிகிறது.

கிழக்கிழங்கையின் பண்பாட்டு ஆவணமாகவே வேளாண்மை எனும் விவரணச் சித்திரிப்பு அமைந்துள்ளது. காவியத்துக்குரிய வலுவான மையம் இல்லையென்றாலும் மானிடவியல் சார்ந்த இலக்கிய முக்கியத்துவம் உண்டெனலாம்.

1964 இல் எழுதிய துயில் எனும் கவிதை மரணத்தில் நிறைவு காணும் பக்குவம் பற்றி பேசுகிறது. பனிப்பாலை தீ பயணகாவியம் போகவிடு ஓ வண்டிக்கார ஒத்திகை விளக்கு முதலிய கவிதைகள் நீலாவணனின் ஆன்மிகத் தேடல் சார்ந்த கவிதைகளாக கருதப்படக்கூடியவை.இவற்றில் கையாளப்படும் மொழி குறியீடு அல்லது உருவகப் பாங்கானது. அதனால் பல தளப் பொருண்மையுடையது. இவற்றுட் பனிப் பாலை போகவிடு என்பன பாலியல் படிமங்களால் பின்னப்பட்டவையாகவுள்ளன.

சுமை புற்று விடை தாருங்கள் அஞ்சலோட்டம் பலூன் பட்டம் முத்தக்காச்சு போன்ற கவிதைகள் சாதாரண சம்பங்களை குறியீட்டுப் பாங்கில் கையாண்ட ஆன்மிக உட்பொருளைக் காணும் கவிதைகளாக வுள்ளன. உண்மை சத்தியம் பற்றறுத்தல் தீவினை களைதல் போன்ற அரூபமான எண்ணங்கள் இக்கவிதைகளில் அழுத்தப் படுகின்றன.

நீலாவணனின் கவிதைகளில் மரபுவழிச் சிந்தனையையும் புதுமை நாட்டமும் ஒருமித்து இருப்பதையும் அதாவது சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் புத்துலக நோக்கினையும் பாரம்பரியமான ஆன்மிக விழுமியங்களையும் உள்வாங்கிய கவிதைகளாகவுள்ளன.

யாப்பே கவிதையின் ஊடகமாக இருக்க வேண்டும் எனவும் கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ரீதியாக புதுக்கவிதை அல்லது வசன கவிதைக்கு எதிராகவே செயற்பட்டார். கவிதைகள் பழைமையில் காலூன்றி நிற்க வேண்டும் என்பதுடன் பழைமையின் வழியிலேயே புதுமை முகிழ்க்க வேண்டும் எனவும் கருதினார்.

கவிதை பற்றிய நீலாவணனின் கவிதை ஒன்று பின்வருமாறு

பழைமை கிடந்த மனதுள் விழுந்து பயிராகி
செழுமை நிறைந்து புதுமை குழைந்து விளைவாகி
அழகும் பொலிந்து அறமும் புதைந்து கலையாகி
இளமைக் கயிற்றில் கனவைத் தொடுத்தல் கவியாகும்.

இளமைக் கயிற்றில் கனவைத் தொடுக்கும் கவிதை பழைமையின் அடித் தளத்திலேயே பயிராகின்றது என்பதை இக் கவிதை வெளிப்படுத்துவதாகவுள்ளது.தமிழ்க் கவிதையின் மரபுத் தொடர்ச்சியை இனங் காட்டும் ஒரு கவிதை முயற்சியே அவரது வழி.யாப்பு மரபை வலியுறுத்தி யாப்பை மீறிய புதுக்கவிதை மரபைச்சாடும் இக்கவிதையில் "யாப்பும் முந்தைய வழியும் சேர்ந்த மொழியறி புலவர்களே" போற்றப்படு கின்றனர். இவர்களே அறவழிப் புலவர்கள்.

யாப்பை மீறும் புதுமை வாணர்கள் தமிழின் கவிதைக் கலையின் மகிமை அறியாதவர்களாய் அதன் அமிர்தப் பொருளைக் கொலை செய்பர்களாக சித்திரிக்கப்படு கின்றனர். நீலாவணன் உட்பட நமது முன்னோடிக் கவிஞர்களைப் பொறுத்த வரை யாப்பு ஒரு புனிதப் பொருளாகவே இருந்து வந்துள்ளது.

நீலாவணனின் பாவம் வாத்தியார் உறவு வேளாண்மை போன்றவை சுத்தமான யாப்பிலுள்ளதுடன் வரியமைப்பு மாத்திரம் புதுக்கவிதையின் தோற்றத்தை தருவதாக வுள்ளது.

இலங்கையில் தமிழ் செய்யுள் நடையை செழுமைப்படுத்திய முன்னோடி களுள் நீலாவணனும் ஒருவராவார். பொதுவாக இலங்கையின் பிற பாகங்களை விட கல்முனைப் பிரதேசக் கவிஞர்கள் செழுமையான செய்யுள் நடை வல்லவர்களாக இருப்பதற்கு நீலாவணனின் உடனிருப்பும் செல்வாக்கும் ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளது என்றால் மிகையாகாது.

கவியரங்குகளில் அவரது கவிதைகள் எடுபட்டமைக்கு பாராட்டுப் பெற்றமைக்கு அலாதியான முறையில் தன் கவிதைகளை இனிமையாகப் பாடும் ஆற்றலுடனும் வாசிக்கும் ஆற்றலுடனும் விளங்கியமையும் ஒரு காரணமாகும்.

காதல் கவிதைகள் சமூக விமர்சனக் கவிதைகள் ஆன்மிகக் கவிதைகள் பாலியல் கவிதைகள் என்று பன்முகத் தன்மையுடன் கவிதை இயற்றிய பெருமை நீலாவணனையே சாரும்.

நீலாவணனின் பா நாடகங்களாக மழைக்கை சிலம்பு மணக்கண் துணை என்பன விளங்குகின்றன. மழைக்கை சிலம்பு மணக்கண் இவ் மூன்றுமே அகவற் பாவிலமைந்த கவிதை நாடகங்களாகவுள்ளன. கொங்கண முனிவர் பற்றிய மரபுக் கதை யொன்றை அடிப்படையாகக் கொண்டதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துணை நாடகமாகும். மணக்கண் காதலைப் கருப்பொருளாக கொண்டமைய மகாபாரதத் தின் கர்ணனின் கடைசி நாட்களே மழைக்கை யின் கருவாகவுள்ளது. கர்ணனை கதாநாய கனாக கொண்ட மழைக்கையில் நீலாவணன் குந்திதேவி பாத்திரம் ஏற்று நடித்ததுடன் எம்.ஏ.நுஃமான் இந்திரனாகவும் மருதூர்க் கொத்தன் கிருஸ்ணராகவும் நடித்திருந்தார்.

நவீன வாழ்வின் கதையை யதார்த்த மாகவோ குறியீடாகவோ செய்யுளில் வடித்துக்காட்டியவர்களுள் நீலாவணனும் முதன்மையானவராவார். வழியும் ஒரு விதமான கதைகூறும் காவியப் பொலிவுடைய நெடும்பாடலாக அமைவதால் கதைப்பாடல் என்றும் கூறலாம்.1956 இல் பட்ட மரம் என்ற காவியத்தினையும் 1961 இல் வடமீன் என்ற காவியத்தினையும் வேளாண்மை என்ற காவியத்தினையும்(1960- 1970)எழுதிய பெருமை மாத்திரம் நீலாவணனையே சாரும். பட்டமரம் காவியமானது ஈழ கேசரி இதழில் இரு வாரங்கள் தொடர்ச்சியாக 1950 களின் நடுப்பகுதியில் வெளிவந்ததுடன் வடமீன் காவியமனது எந்த இதழ்களிலும் பிரசுரமாகத காவியமாகும்.

நீலாவணனின் காவியக் கன்னி முயற்சியாக பட்டமரம் அமைகிறது. பத்மாவின் காதலைக் கண்டு பயப்படும் பரந்தாமன். பண்ணையார் மகளை அவருடைய ஊழியன் காதலிப்பதா என்ற வழமையான கட்டமைப்பு பிரச்சினைதான் கதை. சிக்கல் பரந்தாமன் பத்மாவின் மரணத்தில் தீர பட்டமரம் அனைத்துக்கும் சாட்சியமாக அமைகிறது. பட்டமரம் கதை சொல்லியாகவும் கதையின் ஒரு பாத்திரமாகவும் பகுத்தறிவுவாதியாகவும் அன்பில் உயர் ஆளுமையாகவும் இருப்பது காவியத்துக்கு ஒரு வலுவான பரிமாணத்தைக் கொடுக்கிறது என சண்முகம் சிவலிங்கம் குறிப்பிடுகிறார்.

வெண்பாவின் ஊடகத்தில் ஒரு காவியத்தை நடத்துவது புகழேந்திக்கே உரிய புகழ் அந்த வெண்பாவிலேயே பட்டமரம் காவியத்தை வடித்தமையினால் வெண்பா வுக்கு நீலாவணன் என்ற பெருமையும் பெற்றிருந்தார்.

வடமீன் காவியமானது கொழும்பு வாழ் மத்தியதர வர்க்கத்தின் கோணங்களை பிரதிபலிப்பதுடன் கணவன் மனைவி மீது கொள்ளும் சந்தேகத்தில் எழுகிறது. கொழும்பு வாழ்க்கைச் சூழலும் இரட்டை அர்த்த வாக்கியங்களும் சேர்ந்து கதைச் சிக்கலுக்கு காரணமாக அமைகிறது.

அருந்ததியில் அவளுடைய கணவனான மூர்த்தி சந்தேகப்படும் முன்பே இரட்டை வாக்கிய அர்த்தங்களால் வாசகன் அவள் மீது சந்தேகம் கொள்கின்றான். இத்தன்மையானது நீலாவணனின் தனித்துவ ஆளுமையாக அமைகிறது.

அண்ணாந்து பார்த்தான் வெள்ளை
ஆடையில்லாத பல்லி
பெண் ஒன்றை மருவல் கண்டு
பேசாமல் கதவடைத்தான்

“அடுக்களை யிருந்த பூனை
ஆனந்தன் அறைக்குள் ஓட
அடுப்பிலே நெருப்புப் பொங்கி அணைந்தது”

திருந்திழை மார்பின் சேலை
திருத்தினாள் திறவா வாயில்
பொருந்தினாள் நகையே உள்ளம்
பூரித்தான் புசித்தான் போனான்

வாசகன் மனதில் ஒரு பாலியல் சந்தேகத்தை வளர்த்த பின்னரே கணவனான மூர்த்திக்கு சந்தேகத்தை ஏற்படுத்த வைக்கிறார். மூர்த்தி தன் செவியேறலில் அல்லது தன் சிந்தனையில் கொண்ட சந்தேகத்தை வடமீன் காவியம் ஊடாக தீர்க்கும் விதமே சுவாரஸ் யமானது. அருந்ததியை உண்மைக்கு உண்மையாய் பேச விடுவதோடு மூர்த்தியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தன்னைத்தானே பணியச் செய்து பிரச்சினைக் கான தீர்வைக் காண வைக்கும் நீலாவணனின் உத்தி அளப்பெரியது.

வாசகர் மனதில் தூவிய சந்தேக முகிலை பாத்திரத்திற்கூடாகவே தெளிவு பெற வைத்தமை நீலாவணனின் வடமீன் காவிய ஆளுமையினை வெளிப்படுத்து கின்றது.அருந்ததியை கற்புடைய பெண்ணாக காட்ட முனைந்ததும் வடமீன் என்ற காவியத் தலைப்பை பாவித்த நுட்பமும் நீலாவணனை மகா கலைஞனாக உயர்த்துகிறது.

பூலோகம் எங்கும் கற்பைப் புதுப்பிக்கும் வடமீன் நங்கை என்ற அடி அருந்ததி நட்சத்திரத்துக்கு தமிழில் கிடைத்த மிக அழகிய கவித்துவப் புகழ் மொழியாகும். கற்பின் திறமும் தெய்வீகமும் உடைய வடமீன் நங்கை "ஆலாலம் உண்ட கண்டன் அணைப்பில் கிடந்தாள்" அந்நியனின் படுக்கையில் அல்ல என்ற வரிகளில் மூர்த்தி யின் தெளிவு வாசகனின் தெளிவு போல முற்றுப்பெறுகிறது. நீலாவணன் வடமீன் காவியம் மூலமாக பெண்ணியச் சிந்தனை களை புடம் போட்டுக் காட்டும் படைப்பாளி யுமாகிறார்.

வேளாண்மைக் காவியமானது முற்றுப் பெறாத காவியமாகவே இலக்கிய விமர்சகர் களுக்கு அறிமுகமாகிறது. நீலாவணனே 1965 காலப்பகுதியில் அதை எழுதிக் கொண்டிருக்கும் போதே அரைவாசிக்குத் தான் எழுதியுள்ளேன் எனக் கூறியுமுள்ளார்.

நீலாவணனின் வேளாண்மை காவியமானது குடலை - பூப்பருவம் கதிர் - காய்ப்பருவம் எனும் இரு பாகங்களைக் கொண்டுள்ளது.வேளாண்மை காவியத்துக்கு முயற்சி என்ற மறைமுகப் பெயரே நீலாவணன் வைத்துக்கொண்டார். குடலையில் கதையின் ஊடாக விரிபவை பண்பாட்டுக்கோலத்தை வெளிப்படுத்துவதாகவுள்ளது.காவியத்தின் கதிர் என்ற இரண்டாம் பாகம் முழுவதிலும் வசந்தத்தில் வருகைக்குரியவை விபரிப்பாக வும் ஏனையவை கதையாடல்களாகவும் அமைந்து மண்ணின் சடங்குகள் சம்பிரதா யங்கள் நடப்புகள் நாகரீகங்கள் மனப்பாங்குகள் வரன்முறைகள் பழக்க வழக்கங்கள் அனுஸ்டானங்கள்என்பன ஓசைநயத்துடனும் கவிதை நயத்துடனும் உணர்வு பூர்வமாயும் அமைந்துள்ளது.

வேளாண்மை காவியத்தின் ஊடாக மண்ணின் சடங்கு சம்பிரதாயத்தை சதையும் ரத்தமுமாக காட்ட வந்த நீலாவணன் காலனின் பிடியில் அகப்பட்டமையின் காரணமாக கல்யாண விழாவை கோலாகலமாகக் காட்டாமல் இருந்ததும் மாப்பிள்ளை பெண் பார்க்கப் போவதை மவுசுபடுத்தாமல் இருந்ததும் மற்றும் சம்பிரதாயங்களை மிகவும் சிறப்பாக மகோன்னதப்படுத்தாமல் இருந்ததும் என்றெல்லாம் தன் உள்ளக்கு முறலை அங்கலாய்பை இலக்கிய நண்பரான சசி வெளிப்படுத்துகின்றார். இன்னும் இருக்கிறதண்ணே எவ்வளவோ உன் இனிய காவியம். எப்போது இனி பிறந்து எழுதப் போகிறாய் என்று நீலாவணனின் காவியங்கள் எனும் நூலின் முன்னுரையில் தன் உள்ளக் கிளர்ச்சியை வாசகர்களுக்கு குறிப்பிடுகிறார்.

விவசாய இயந்திரங்களைப் பற்றி எள்ளளவும் தெரிந்திராத தென்கிழக்கின் விவசாயக் குடும்பமொன்று கதைக் களமாக அமைகிறது. ஒரு விவசாயக் குடும்பத்தை மையமாகக் கொண்ட வேளாண்மை காவியத் தின் மூலம் கிழக்கின் சடங்குகள் நடப்புகள் நாகரீகங்கள் மனப்பாங்குகள் வரன்முறைகள் பழக்கவழக்கங்கள் என்பவற்றை ஆவணப் படுத்தவே முயன்றுள்ளார். எனினும் அவரின் மரணம் அதற்கு இடமளிக்கவில்லை. வேளாண்மை சர்ச்சைக்குரிய காவியமல்ல ஆனால் நீலாவணனால் முற்றுப்பெறாத ஒரு காவியமாகும் என்றால் மிகையாகாது.

முற்றுப்பெறாத வேளாண்மை காவியத்தை நீலாவணனின் எழுத்தாள நண்பரான வ.அ.இராசரெத்தினம் படித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பார்த்து அதை முடிவுற்ற ஒரு காவியமாகக் கருதி தனியொரு நூலாக வெளியிட்டு நீலாவணனை இலக்கிய உலகிற்கு காவியப் படைப்பாளியாக அறிமுகப்படுத்தினார்.

வழி எனும் கவிதைத் தொகுப்பும் (1976) வேளாண்மை எனும் காவியமும்(1982) ஒட்டுறவு(நீலாவணன் கதைகள் -2003) நீலாவணன் காவியங்கள்(2010) ஒத்திகை எனும் நீலாவணன் கவிதைகள் தொகுப்பும் (2001) நீலாவணன் பா நாடகங்கள்(2005) கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்(1994) நீலாவணன் (எஸ்.பொ.நினைவுகள்-1994) ஒலை (சஞ்சிகை-2003) மல்லிகை(1970) பாடுமீன் போன்ற நூல்களுக்கூடாக நீலாவணனின் இலக்கிய பல்பரிமாண ஆளுமையை அறியக்கூடியதாகவுள்ளது.

பாடும்மீன் என்ற இதழானது மாசி 1967 இல் வெளியானது. பாடுமீன் சஞ்சிகை யானது பண் -01 பண் -02 எனும் இரு இதழ்களே வெளிவந்துள்ள நிலையில்



நிதிப்பற்றாக்குறை போன்ற இன்னோன் னரன்ன காரணங்களால் பாடும்மீன் வெளி வருவதற்கான சாத்தியப்பாடுகள் இருக்க வில்லை. "கிழக்கிலங்ககையிலே முதன் முதலாக வெளிவந்த சஞ்சிகை எனும் பரிமாணத்தை பாடும்மீன் பெறுவதாக வுள்ளது".

பாடும்மீன்-01 இல் வ.அ. இராசரத்தினத்தின் அவசரம் என்ற கதையும் மு.சடாட்சரனின் பிடிப்பு எனும் கதையும் சண்முகம் சிவலிங்கத்தின்(சசி) உறவு எனும் கதையும் நீலாவணனின்(வேதாந்தன்) நெருஞ்சி முள் என்ற கதையும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் இலக்கியத்தில் சமநிலை என்ற கட்டுரையும் கே.ஆர்.அருளை யாவின் மேலும் கீழும் எனும் கட்டுரையும் ஏ.ஜே.கனகரட்னாவின் மார்க்சீயமும் இலக்கியமும் என்ற கட்டுரையும் கல்லூர்ப் பித்தனின் உதயம் எனும் கவிதையும் நீலாவணனின் கைதி எனும் கட்டுரையும் மருதூர்க்கனியின் அழகிய மனிதன் என்ற கவிதையும் ஜீவா ஜீவரத்தினத்தின் பிரதி யுபகாரம் என்ற கவிதையும் பாண்டியூரானின் பேறு எனும் கவிதையும் சிறப்பு அம்சம் எனும் பகுதியினுள் காமம் செப்பாது எனும் தலைப்பின் கீழ் குறும்பா தமிழுக்கு புதிய வடிவமா? என்பதை தெளிவுபடுத்தும் விளக்கமும் வி.ஸி.மெம்பர் காசிநாதர் எனும் நீலாவணனின் விருத்தாந்த சித்திரமும் கருத்தும் பொருத்தும் எனும் கே.ஆர். அருளையாவின் சிறு கட்டுரையும் இடம் பிடித்ததுள்ளது. பாடும்மீன் சஞ்சிகையின் அட்டைப்படமானது ஒரு பெண் கதிர் பொறுக்கும் காட்சியை வடிவமைத்ததுடன் கதிர் பொறுக்குகின்றால் எனும் கவிதையும் முகப்புப் படத்தில் இடம்பிடித்துள்ளது.

பாடும்மீன் என்ற இதழானது 1967பங்குனியில் பண்-02 ஐபிரசுரித்தது.பண் -02 சஞ்சிகையில் மருதூர்க் கொத்தனின் மூக்குத்தி எனும் கதையும் சி.பி.சத்தியநாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

னின் சீட்டுக்காசு எனும் கதையும் நோவன்னாவின் பழி எனும் கதையும் சா.தருமலிங்கத்தின் கூத்து எனும் கதையும் நீலாவணனின் வெளுத்துக்கட்டு என்ற கவிதையும் அரு. கணேஸின் நினைவின் அலைகளிலே எனும் கதையும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளையின் இலக்கியத்தில் சமநிலை எனும் கட்டுரையும் மேலும் கீழும் எனும் பகுதியில் கே.ஆர் அருளையாவின் மகாகவி உமர்கையாம் எனும் சிறு கட்டுரையும் எழுத்தாளர்களின் இறுதிக்காலம் எனும் பகுதியில் டால்ஸ்டாய் பற்றியும் அம்மாச்சி ஆறுமுகம் எனும் புனைபெயரில் போடி மகள் பொன்னம்மா எனும் விருத்தாந்த சித்திரமும் காமம் செப்பாது எனும் பகுதியில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் கரவெட்டி தந்த கவிஞர் கவி இருட்டடிக்கப்பட்டது ஏன் என்ற சங்கு சக்கரனின் கட்டுரையும் வளம் சேர்த்தது.

மு.பொன்னம்பலத்தின் யதார்த்தமும் ஆத்மார்த்தமும்(1991) என்ற கட்டுரையில் நீலாவணையும் மகாகவியையும் ஒப்பிட்டு வேறுபடுத்துவதுடன் மகாகவியை ஒரு சாதாரண யதார்த்த வாதியாகக் கீழ் இறக்கி நீலாவணனை ஒரு ஆத்மார்த்தியாக மேல் உயர்த்துகிறார். நீலாவணனின் "தீ" "ஓ வண்டிக்கார" "போகிறேன் என்றோ சொன்னாய்" ஆகிய மூன்று கவிதைகளே இலக்கியவுலகில் நிலையான இடத்தை கொடுத்தது என்ற "வெளி ஒதுக்கற் கொள்கையினை" வலியுறுத்த முனைகிறார்.இது கலையிலக்கியம் பற்றிய ஒற்றைப் பரிமாணப் பார்வையே என்பதும் குறிப்பிடத்தக்கது.

கவிஞர் நீலாவணன் இலங்கையின் முன்னோடிக் கவிஞர்களில் ஒருவர். கவிதை மட்டுமின்றி சிறுகதை பாநாடகம் காவியம் உருவகக் கதை விருந்தாந்த சித்திரம் என பல்வேறு இலக்கிய வடிவங்கள் சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. நீலாவணனின் கவிதைகள் பல கவியரங்கக்



கவிதைகள் மேடைகளோடு மட்டுப் பட்டதுடன் சில ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதியாகவே நூலுருப்பெறாமல் இருந்துள்ளது.

நீலாவணனின் மரணத்தின் பின்னரே நீலாவணனால் தொகுக்கப்பட்ட வழி எனும் கவிதைத் தொகுப்பானது கவிஞர் எம்.ஏ.நுஃமான் அவர்களாலும் வேளாண்மை என்ற காவியமானது பிரபல சிறுகதை எழுத்தாளர் வ.அ.இரசரெத்தினத்தாலும் நூலுருப்பெற்றுள்ளன.

பேரா.சி.மௌகுருவின் கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் என்ற நூலும் அவர்களின் நீலாவணன் நினைவுகள் எனும் நூலும் நீலாவணனின் வாழ்க்கை வரலாற்றை இலக்கிய ஆர்வத்தை ரசிகர் களிடேயே ஏற்படுத்தும் நூல்களாகவுள்ளன.

மென் உணர்வு மிக்கவரும் எளிதில் உணர்ச்சி வசப்படுபவருமான நீலாவணன் தன் இறுதிக்காலத்தில் எஸ்.பொன்னுத்துரை மஹாகவி போன்ற உண்மையான தோழர்கள் பலரின் நட்பை சரியாகப் புரிந்து கொள்ளாததன் காரணமாக பலரின் உறவையும் துண்டித்த துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப் பட்டார் என்பதைஎஸ்.பொன்னுத்துரையின் "நீலாவணனின் நினைவுகள்" என்ற நூலின் ஊடாக அறிய முடிகிறது.

நீலாவணன் ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சியில் முக்கிய இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



பெறுபவர். ஈழத்து நவீன கவிதை பற்றி உரையாடும் போது மகாகவி முருகையன் நீலாவணன் இவர்களைப் பற்றி குறிப்பிடா மல் வேறு யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. இம் மூவரும் தனித் தன்மைகளும் பொதுப்பண்புகளும் உடையவர்கள். து.உருத்திரமூர்த்தி இ.முருகையன் போன்ற வர்கள் யாழ்ப்பாணத்தை மையமாக்கொண்டு கவிதை படைக்க நீலாவணன் கிழக்கிலங்கை யின் தனிப்பெரும் கவித்துவ ஆளுமைப் பிரதிநிதியாக விளங்கி சமூகத்தின் யதார்த்தப் பிரச்சினைகளை கவிதைகள் ஊடாக வெளிக்கொணர்ந்தார்.

கிழக்கிழங்கியில் குறிப்பாக கல்முனை மட்டக்களப்பு பிரதேசங்களில் பல முக்கியமான கவிஞர்கள் உருவாகுவதற்கு நீலாவணனின் செல்வாக்கே கணிசமானதாக இருந்துள்ளது என்றால் இதை எந்தக் கவிஞரும் மறுப்பதற்கு இடமில்லை. நீலாவணனின் சமகாலத்தவர்களான புரட்சிக்கமால் அண்ணல் ஆகிய இருவரும் கவிதைத் தரத்தாலும் அளவாலும் நீலாவண னுக்கு அடுத்த இடத்திலேயே தங்கள் இடத்தை தக்க வைத்துக்கொண்டனர்.

நீலாவணனின் மூலமாகவே எம்.ஏ.நுஃமான் இலக்கியவுலகில் புகுந்தார் என்றால் மிகையாகாது. நீலாவணனின் வழி யாகவே மருதூர்க்கொத்தன் மருதூர்க்கனி மு.சடாட்சரன் பாண்டியூரான் ஜீவா ஜீவரத்தினம் கனக சூரியம் மகாகவி எஸ். பொன்னுத்துரை எம்.ஏ.ரகுமான் போன்ற வர்கள் அறிமுகமானார்கள் என்றால் மிகை யாகாது. உலகின் தமிழ்மொழி மூல சிறந்த படைப்பாளிகளையும் குறிப்பாக பரந்த இலக்கியவுலகிற்கு வழியமைத்துக் கொடுத்த பெருமை கவிஞர் நீலாவணனையே சாரும்.

நீலாவணன் 1931.05.31 இல் பிறந்து திடீரெனத் தாக்கிய இதய நோயின் காரண மாக 1975.11.01 அன்று தனது நாற்பத்திநான்கு வயதில் காலமானார். பாரதி புதுமைப்பித்தன் கு.ப.ராஜகோபால் து.உருத்திரமூர்த்தி போல் அதிக சாதனைகள் செய்து அற்ப ஆயுளில் மறைந்தவராவார்.தன் ஆயுளில் அரைவாசிக் காலம் வரை இலக்கிய உலகில் தீவிரமாக உழைத்தவராவார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத் தால் நீலாவணன் கவிதை நாடகங்கள் என்ற நூலுக்கு "அரச இலக்கிய விருது 2006" இலும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சினால் நடாத்தப் பட்ட இலக்கிய நூல் பரிசுத் தெரிவில் நீலாவணனின் "கவிதை நாடகங்கள் நூலுக்கு நாடகத்துறைப் பரிசும் சான்றிதழும்" வழங்கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இலக்கிய நூல் பரிசுத் தேர்வில் "நீலாவணனின் காவியங்கள் எனும் நூலுக்கு 16.10.2011 அன்று இலக்கிய நூல் பரிசு சான்றிதழும்" கிடைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரசனை மொழியும் கலைஞன் பற்றி ஒரு வாக்குமூலம்

AM. குர்ஷித்

பல்கலைக் கழகத்தில் நுழையும் பிரதான பாதைக்கு அருகில் அதன் விலாப் பகுதியை அண்மித்து, செம்மை இறைந்தும் கூனல் விழுந்தும் நிமிர்ந்தும் பின் நேர் கோடாகியும் ஓடியது அக் கிறவல் ஒற்றையடிப் பாதை. அதன் தொடக்கத்தில் இருந்தது அந்தக் கடை. 'கடை" என்று ஒரு வசதிக்காக சொல்லி வைத்தாலும் 'குவாசியக்கோர்' நோய் பீடித்தவின் லட்சணத்தில் அது இருந்தது. தொல் பொருள் ஆய்வாளன் கண்ணில் அது தட்டுப்படவில்லை. பட்டிருக்கு மாயின் மூளையைக் கசக்கி கொண்டு ஆராய்ச்சியில் இறங்கி அந்தக் கடைக்கும் டைனோசரின் பரம்பரைக்கும் ஒத்த வயது என்று நிரூபித்திருப்பான்.

கனரக வாகனத்தின் சக்கரத்தில் மிதிபட்ட ஆமையின் வடிவத்தில் கிடந்த அதன் மேற் கூரை காற்றில் பறக்காதிருப்பது பேரதிசய வகைகளில் மிகப் பிரதானமான தொன்றுதான். அது தேநீர் கடை. நம்புவதற்கு ஆதாரமாக ஒரு பொய்லர் 'புஸ்.." சத்தத்தோடு. பழைய கண்ணாடிப் பெட்டியுள் நானூறு பழ ஈக்களும் நான்கு பனிஸ்களும். றொபின் கூட் காலத்து மரத் தளபாடங்கள் இரண்டு. கவனித்து உட்காராவிட்டால் பிருஷ்டத்தின் தொலி அதன் இடுவலுள் கசங்கிச் சீரழிவது நூறு வீத உத்தரவாதம். தவிரவும் பிரத்தியேக ஏற்பாடாய் புழுதி படிந்து மங்கலாய் தெரியும் பொலித்தின் பைக்கற்களில் மிக்ஸர் வகையறாக்கள். 'மேட் இன் அக்கரைப்பற்று". கடையினை அறுபதுக்கும் எழுபதிற்கும் இடைப்பட்டிருக்கும் 'பருவத்து' மாமா இயக்கிக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாமாவுக்கு கடைவாயுள் நீர் சுரக்கும் நாங்கள் கண்டு கொண்டதில்லை. மாமாவின் சிரிப்பும் உபசரிப்பும் எங்களை கட்டிப் போடும். மாமா பழமைவாதிதான். ஆனால் தொழில் யுக்தியில் நவீன சிந்தனைச் சிற்பி. அவர் யுனிவர்ஸிற்றி மாணவரின் நாடித் துடிப்பை நுணுகி அறிந்து வைத்திருக்கும் அளவுக்கான பலே கில்லாடி. வார்த்யைா லேயே 'பிளேன்ரி" யை 'பெப்சி" யாக்கும் வல்லமை அவருள் இருந்தது. அவருடைய காய்ந்த பணிஸ்களை ISO பண்டமாக உயர்த்தி, வியாபாரம் செய்ய அவர் கற்று தேறியிருந்தார்.

மாமா தனது 'கடை" என்ற வஸ்த்துவை மூன்று பகுதிகளாக பிரித்திருந்தார். பின் பகுதியில் யுனிவர்ஸிற்றி இளசுகள் காதல் மொழியில் குசு குசுக்க சின்ன அறை. அதற்கு மேலே அங்க சேஷ்டைகளுக்கு சென்றுவிடாமலிருக்கும் படியாக, சலாகைகளால் மட்டுமான மறைப்பு. முன் வராந்தாவில் கடையோடு தொடுப்புற்ற மாதிரியாய் பூசாத குட்டி அரைச் சுவர் மூன்று பேர் உட்காரும் இடத்தில் பாலைவனச் சோலை நண்பர்களாய் நான்கு பேர் உட்கார்ந்து கொள்வோம் அதிலும் மூன்று காகங்களும் ஒரு குயிலுமாய்.

மாமாவின் கடையில் நாங்கள் கருவாடாய் காய்வதற்கு பிரதான காரணம் அவர் தரும் 'நன்னாரி" ரசம் சொட்டும் தேநீர்தான். கேட்டவுடன் ஆறிக் கிடக்கும் பொயிலரில் தண்ணீர் ஊற்றி தீப் பெட்டியை தேடத் தொடங்குவார் மாமா. இரண்டே நிமிடம் 'மெகி" நூடுல்ஸ் கொதிக்கும் இடைவெளிக்குள் தேநீர் தயார். கசப்பும் இனிப்பும் கலந்த அந்த 'அமுத பானம்" வெயிலின் கொடுமையை விட பரவாயில்லை ரகம் என்பதால் பொறுத்துக் கொண்டு அருந்துவோம், அதிலும் 'கீச்சு..கீச்சு" குருவிகள் வேறு. மானமுள்ள ஆண் சிங்கங்கள் தோற்கமாட்டோம். தெனாவட்டாய் உறிஞ்சுவோம். பகலின் பரிதாபங்கள் அக்காலை, இப்படித்தான் தொலையும்.

அப்படியான ஒரு நாள், முன் மதியம். மாமாவின் நன்னாரி தேநீர் தொண்டைக்குள் இறங்கத் தொடங்கிய அந்த அகாலப் பொழுதில் காற்றூதிய பலூனாய் அப் பேருந்து அனாவசியத்துக்கு புழுதியை தூக்கி வாரி வீசி நின்றது. அதிலிருந்து இரண்டு அரம்பையரும் மத்தியில் அந்த ஒட்டக் கூத்தனும் இறங்கினார்கள். அவன் ஒட்டக் கூத்தன் கிடையாது. ஒட்டகக் கூத்தன். ஆறடியை தொடும் தூரத்துக்கு வளர்ந்திருந்தவனை ஒட்டகக் கூத்தன் என்று சொல்லாமல் வேறெப்படித்தான் சொல்வது. அவன் 'பெஸ்ற் இயர்காரன்" என்பதை ஒரு இஞ்ச் முள்ளாணி சைஸில் சிலும்பி நின்ற அவன் முடி சொன்னது. நன்கு முற்றிய நாவற்பழத்தை உப்பு நீரில் ஊற வைத்தது போன்றதொரு பொழு பொழுப்பு அவன் முகத்தில். 'சூப்பர்சீனியர்" நிற்கிறான் என்ற மட்டு மரியாதையில்லாமல் என்னமாய்த்தான் சல்லாபித்து கடக்கிறான். வேப்ப மாத்தின் கீழ் இடுப்பில் கையூன்றி பிளேன்றி ரசத்தில் கிறங்கி கிடந்த என்னை அவன் ஒரு பொருட்டாக கருதியதாய் தெரியவில்லை. 'பகிடைவதை நேரடி சீனியருருக்கான தர்மம்" என்பதால் பல்லை 'நற.. நற" என கடிப்பதை தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. "போடா புழு விழாத பயற்றங்காயே.. பிறகு உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்." மனத்துள் கருவிக் கொண்டேன். அவன் போய்க் கொண்டேயிருந்தான். திரும்பினேன் மாமா என் கையில் இருந்த அந்த அட்டைக்கரி டம்ளரை பிடுங்கிக் கொள்ள காதலியை கானகத்தில் விட்டவன் போல் தவித்துக் கொண்டிருந்தார்.

காலத்துக்கு ஜவ்வு மிட்டாயின் இயல்பு. எத்தனை வேகமாய்த்தான் இழுபட்டு நீண்டிருக்கிறது. அதன் நீட்சியில் அவன் பெயர் அப்துல் றஸாக் என்றும் அவன் நிரம்பவவே தமிழையும் அதனை வஸியப்படுத்தும் வித்தையும் தெரிந்தவன் என்பதையும் அறிந்து கொண்டேன். என்னைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போலவே அவனும் 'தமிழ்க் காதலன்" என்ற சங்கதி அவன் மேல் பிரியத்தையும் ஒட்டுதலையும் கூட்டிற்று. இனி அவனை அவன் என்று சொல்லக் கூடாது என்று உறுதி பூணும் அளவுக்கு அவனோடு பொருந்திப் போனேன்.

இதோ எதிரில் அப்துல் றஸாக் இரண்டு மேசை தள்ளி..., இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவன் போல பதுங்கி பதுங்கி திரிந்த அவர் இப்போது தைரியம் பிறந்து கென்ரின் ஆகாரத்தை முழுங்கிக் கொண்டிருக்கிறார். உடன் பாலை நிலத்தில் அலையும் 'பர்மா" காரனின் சாயலில் நவாஸ் சௌபி என்கிற வாலிபனும் அரிந்த பலகை சேப்பில் ஒரு பெட்டையும். சாப்பிட்டு முடிந்ததும் அப்துல் றஸாக் அருகில் வந்தார். அவர் 'துயரி" எனும் பெயரில் சஞ்சிகை வெளியிடப் போவதாகவும் அதற்கு கவிதை வேண்டுமென்றும் என்னிடம் கேட்டார். அதற்கு முந்தைய காலங்களில் தமிழ் சங்கம் நடத்தும் புதன் கிழமை நிகழ்வுகளில் நான் ஒன்றிரண்டு கவிதைகள் 'பறை"ந்ததை அவர் கேட்டிருந்ததால் தான் என்னிடம் கவிதை கோரும் விசப் பரிட்சையில் அவர் இறங்கியிருக்கக் கூடும். மூன்று கிழமைகள் ஏமாற்றி பின் நான்காம் வாரம் சோம்பல் உதறி அப்போது நான் ஊறிக் கிடந்த பெண்ணிய வாசிப்பின் அதிர்ப்பில் ஒரு கவிதை கொடுத்தேன். துயரி வந்திருந்தது வீரியத்தோடு. அது அவர் வயதைக் கடந்த பெரிய உழைப்பு. அவர் அகலிப்பான உலகம் ஒன்றில் சஞ்சரிக்கிறார் என்பதற்கு அதுவே முதற் சான்று.

அவரது 'வாக்கு மூலம்" நாவல் வந்தபோது பல்கலைக்கழகம் கிடு கிடுத்துத் தான் போனது. அது அவரது அனுபவ ஒப்புவிப்பு வழி விரிந்த ஒரு நாவல் பவாஸ் இலாஹியும் ஏனைய உலவு பாத்திரங்களும் நாம் கண்டு கடந்த உருப்படிகளின் அசல் பிம்பங்கள். அனுபவத்தை மீறிய துடிப்பும் தமிழ் பரவசமும் அப்துல் றஸாக்கை அந் நாவல் எழுதத் தூண்டியிருக்கக் கூடும்.

"அப்துல் றஸாக் நல்லதொரு பேச்சாளர். விமர்சகர். வருடத்தில் கிழக்கு மகாணமெங்கும் நடக்கும் இலக்கிய விழாக்களில் முக்கால் வாசியில் அவர் ஒரு பேச்சாளராக அல்லது புத்தக அலசுனராக அல்லது விமர்சகராக இருப்பார். அவரது மூச்சுப்பட்டதும் 'மைக்" சுதாரித்துக் கொண்டு உரத்துப் பேசும். 'அ"வை தொடங்கினால் 'ஔ' வரை நகர்த்துகின்ற பேச்சு வன்மை அவருக்கு வாய்க்கப் பெற்றிருந்தது."

நாவல் வந்த புதிதில் இஸ்ரேல் போடும் குண்டில் சிதறிய பலஸ்த்தீனியரைப் போல அவரது நட்பு வட்டம் சிதறி அவரை விட்டு தூரமாயின. பின்னர் காலமும் நேரமும் அவர்களுள் மீண்டு... கை குலுக்கும் சமாதான உடன் படிக்கையை செய்து வைத்தது.

அப்துல் றஸாக் தனது பல்கலைக் கழக நாட்களில் தீவிரமாக இயங்கினார். தமிழ்ச் சங்கம் துயரி இதழ், அதிர்வு-2 என நீளும் தமிழ் செயலூக்கங்களில் அவரது பங்கு முனைப்புற்றிருந்தது. தவிரவும் அவர் கலை விழாக்களையும் புதன் நிகழ்வுகளிலும் தீராப் பணிபுரிந்தார்.

2004களின் தொடக்கத்து இரவொன்றில் பொடுகு பறக்க தலை சொறிந்து கொண்டிருந்தேன். 1100 வகையான எனது செல் போன் தூக்கச் சொல்லி ஒப்பாரி வைத்தது. தூக்கி காதின் சோணையில் வைத்தேன். கூரைத் தகட்டில் கல்லால் எறிந்தது போல் ஒரு கணீர் குரல் 'எங்கேயோ கேட்ட குரல்". முகமன் விசாரித்தது. யாராயிருக்கும் சுதாரித்துக் கொண்டேன். அது அப்துல் றஸாக் யுனிவஸிற்றியை துறந்து நான் வந்திருந்த இந்த இரண்டு வருடத்துக்குள்ளும் மல்வத்தை றேடியோ ஸ்ரேசன் போல அவர் குரலில் ஒரு தெளிவு கூடியிருந்தது. துயரி-4 வரப் போவதாகவும் அதற்கொரு 'சினிமா சார்" கட்டுரை வேண்டும் என்றார். ஒத்துக் கொண்டேன். எனக்கு தெரிந்த வித்தையைக் கோர்த்து செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொடுத்தேன். 'சேரனின் ஆட்டோ கிராஃப்" வாழ்வு பற்றிய அனுபவமும், அனுபவம் பற்றிய அழகியலும்" என்ற அக் கட்டுரை வந்ததும், மீண்டும் தொடர்பில் வந்து ஒரு பாராட்டும் சில நன்றிகளும் வைத்தார். இதுதான் அப்துல் றஸாக்கின் பிரதான குணம் விமர்சனத்தை 'பச்சை"யாகவே ஏற்றத் தாழ்வின்றி வெளிப்படுத்தும் பண்பு அவரிடம் ஆரம்பத்திலிருந்தே நான் கண்டிருக்கிறேன்.

அப்துல் றஸாக் பெரு வெளி என்ற மாற்றுச் சஞ்சிகை செயற்பாட்டளர்களில் ஒருவராக இருந்தவர். பெருவெளி அந் நாட்களில் பின் நவினத்துவம் சார்ந்த சிந்தனை ஒழுக்கில் பெரும் அதிர்த்தலை செய்த சஞ்சிகை. ஞானிகள் கனவில் கண்டுணர்ந்த சித்தாந்தங்களை நிகழ் நிலையில் சொல்வது போல கட்டிறுக்கமான பல மொழிச் செம்மையும் பரிசோதனை யுக்தியும் அவ்விதழினை முன்னிலைப் படுத்தியது. தளக் கோலம் சரவை நோக்கும் மிக அச்சொட்டாக பேணப்பட்ட அசுர உழைப்பு அதில் நான் கண்டு வியந்திருக் கிறேன். ஆனால் என்னவொன்று இலக்கிய பரிட்சயம் குறைந்தவன் அச் சஞ்சிகையை வாசிக்கத் தொடங்கினானால் ஒன்றிரண்டு கட்டுரையை தாண்டுவதற்கிடயில் அவன் மூளைச் சாவடைந்து மரணிப்பது சர்வ நிச்சயம்.

அப்துல் றஸாக் நல்லதொரு பேச்சாளர். விமர்சகர். வருடத்தில் கிழக்கு மாகாணமெங்கும் நடக்கும் இலக்கிய விழாக்களில் முக்கால் வாசியில் அவர் ஒரு பேச்சாளராக அல்லது புத்தக அலசுனராக அல்லது விமர்சகராக இருப்பார். அவரது மூச்சுப்பட்டதும் 'மைக்" சுதாரித்துக் கொண்டு உரத்துப் பேசும். 'அ"வை தொடங்கினால் 'ஔ' வரை நகர்த்துகின்ற பேச்சு வன்மை அவருக்கு வாய்க்கப் பெற்றிருந்தது. மென்மையை தொட்டு தொடங்கும் அவர் பேச்சு விசயங்களின் மீது நர்த்தனமிடத் தொடங்க, ஒரு கட்டத்தில் கிழங்கு பொரியும் எண்ணெயில் உப்பு ஊற்றப்பட்டது போல வீறிட்டெழும் ஈற்றில் 'றிட்சர்" அளவீட்டில் அளக்கும் படிக்கு உச்சம் தொட்டு மெல்ல அணைந்து நிற்கும்.

அப்துல் றஸாக் பிரபல தமிழ் உபாத்தியாயர். நீண்ட காலமாக தமிழை பாடசாலை மாணவர்களுக்காக கற்பித்துக் காட்டியவர். அவரின் வாரிசுகளாக.. நீளும் பட்டியல்கள் சாதித்துக் காட்டி நிற்கின்றன. இன்று தென் கிழக்கு இலக்கியப் புலத்தில் பிரகாசிக்கும் அனேக இளம் தரவடிகள் அப்துல் றஸாக்கிடம் கற்றவர்களே. துறை வேறாகிப் போனவர்கள் கூட அப்துல் றஸாக் கற்றுக் கொடுத்த தமிழின் வள்ளன்மைக் குணத்தால் ஆக்க இலக்கிய உற்பத்தியாளர் களாக உருமாறிப் போயினர்.

அப்துல் றஸாக் தமிழ் பாடத்தின் துணை நூல்களாக எழுதியவைகள் இன்று வரைக்கும் மாணவர்கள் ஈறுகளில் நித்திரை தேக்கும் நள்ளிரவு வரை, தேடிப் படிக்கின்ற உசாத்துணையாக தொழிற்படுகின்றன.

அப்துல் றஸாக் நல்ல இலக்கிய காரன். இருந்தும் இலக்கியகாரர்களில் பெரும்பாலானவர்களிடம் குடி கொண்டி ருக்கும் 'தம்மை மீறிய உணர்ச்சியின் வயப் படுதலும் நீதியொண்றை கண்டடைவது"மான ரோகம் அவரை தொற்றவில்லை. அவர் தன்னை ஒரு சம வலுவில் நிறுத்திக் கொண்டார். தான் கண்டடைய வேண்டிய புள்ளியை அவர் நன்கு திட்டமிட்டு அதை நோக்கி தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டார்.

இன்று அப்துல் றஸாக் தமிழ் துறையில் விரிவுரையாளர். நல்ல இடம். நல்ல திண்ம மற்றும் அசைவுறு வளங்கள். நல்லதை நடத்தும் சூழல். மாணவர்களும் சமுகமும் நல்லது காண முனைப்பாற்றுவார் எனும் நம்பிக்கை நிரம்பவுமே உண்டு. காத்திருக்க தொடங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media